விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் உலக சந்தையில் நிலைத்து நிற்கும் சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 24 திங்கட்கிழமை (08.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201

# '13' தேவையில்லை

## இந்திய அரசாங்கத்துடனும் பேசக்கூடாது என்கிறார் கோத்தபாய

(கொழும்பு)

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதையே தான் விரும்புவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இந்தியாவுடன் எதுவும் பேசக்கூடாது எனவும், உள்நாட்டுப் பிரச்சினையையும் இராஜதந்திர உறவுகளையும் ஒன்றோடு ஒன்று கலக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



## முல்லை. மீனவர்கள் உண்ணாவிரதம்

(முல்லைத்தீவு)

பதிவின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தென்பகுதி மீனவர்களை வெளியேற்றக்கோரி முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இன்றிலிருந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் உள்ள அரச, தனியார் பேருந்து நிலையத்தில் கூடும் மீனவர்கள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இப்போராட்டத்தினை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், முல்லைத்தீவு மாவட்ட 32 கடற்றொழில் அமைப்புக்களும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன. (எ-8)

## வேட்புமனுத் தாக்கல் குறித்து அடுத்த வாரம் வர்த்தமானியில்!

(கொழும்பு)

வடமாகாணசபைத்தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தின் போது வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி இம்மாதம் 24 தொடக்கம் 31 வரையும் அல்லது இம்மாதம் 25 திகதி தொடக்கம் ஆவணி 1-ம் திகதிவரை என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் உறுதியான திகதியும், தேர்தல் திகதியும் எதிர்வரும் 14-ம திகதி வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணம் 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 வாக்காளர்களுக்கு 526 வாக்குச் சாவடிகள், கிளிநொச்சி 68 ஆயிரத்து 589 வாக்காளர்களுக்கு 95 வாக்குச்சாவடிகள், (20ஆம் பக்கம் பார்க்க)

## வடி தடம் புரண்டதில் குடும்பப் பெண் பலி

(மிருசுவில்)

வடிரக வாகனமொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் குடும்பப் பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரது மகள் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் புதுக்குடியிருப்பு குழந்தையேசு கோவிலுக்கு அண்மையில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான வரதராசா மேரி உசா நந்தினி (வயது - 28) என்பவரே உயிரிழந்ததோடு அவரது மகளான ஜதுர்சிகா (வயது - 5) என்ற சிறுமியே படுகாயங்களுக்க இலக்காகி யுள்ளார்.

தேவிபுரத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் நீச்சல் தடாகத்தைப் பார்வையிட்டுவிட்டு வடிரக வாகனமொன்றின் பின்னால இருந்து தாயும் மகளும் வீடு நோக்கிப் பயணித்துள்ளனர்.

பயணத்தின் போது வேகக் கட்டுப் (20ஆம் பக்கம் பார்க்க)

## புத்தகாயாவில் குண்டு வெடிப்பு: ஜனாதிபதி மகிந்த அதிர்ச்சி!

### பௌத்த மையங்களுக்கு பலத்த பாதுகாப்பு

(பாட்னா)

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் அமைந்துள்ள "புத்தகாயா" பௌத்த வழிபாட்டிடத்தில் நேற்று அதிகாலை 8 குண்டுகள் வெடித்துள்ளன.

நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் நடத்தப்பட்டுள்ளதாக வர்ணிக்கப்படும் இந்தத் தாக்குதலில் எவரும் பலியாக வில்லை என்றும், அங்கிருக்கும் போதி மரத்துக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

அந்த பௌத்த ஆலய வளாகத்தில் உள்ள இரு கோயில்களில் தலா 4 குண்டுகள் வெடித்ததாக அங்கிருக்கும் இலங்கையைச் சேர்ந்த மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார். ஆயினும இலங்கையர்கள்எவரும்இந்த குண்டு வெடிப்புக்களில் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு திபெத்தியரும், ஒரு பர்மா மதகுருவும் இந்த தாக்குதலில் காயமடைந்திருக்கிறார்கள்.

குண்டு வெடிப்புக்கள் நேற்று அதிகாலை இந்திய நேரப்படி 5.45 மணிக்கு நடந்ததாகவும், இப்படியான தாக்குதல்களுக்கான மிரட்டல்கள் ஏற்கெனவே வந்திருந்ததாகவும், ஆயினும் இந்த தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று இதுவரை தெளிவாகவில்லை என்றும் இலங்கையைச் சேர்ந்த அந்த மதகுரு தெரிவித்தார்.



புத்தகாயாவின் பாதுகாப்பு குறித்து தற்போது ஒரு முக்கிய கூட்டம் நடைபெறுவதாகவும் அந்த மத குரு தெரிவித்துள்ளார்.

இலங்கை, ஜப்பான், பர்மா ஆகிய இடங்களில் இருந்து வருடாநதம் புத்தகாயாவுக்கு அதிகமாகயாத்திரிகர்கள் வருவது வழக்கம்.

அந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு தொடர்பு கொண்டு நிலைமை குறித்து விசாரித்ததாகவும், தனது அதிர்ச்சியை அவர வெளியிட்டதாகவும் அங்கிருக்கும் மதகுரு (20ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் வேட்பாளரை ஐ.ம.சு.கூ. நிறுத்தாது!

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தப்போவதில்லை என்று முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

முன்னணி, வேட்பாளர் விண்ணப்பங்களை கோரியுள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இதுவரை கே.பி. என்ற குமரன் பத்மநாதனோ அல்லது புலிகளின் அரசியல் துறை மகளிர் அணித் தலைவியாக இருந்த தமிழினியோ வேட்பாளர்களுக்காக விண்ணப்பிக்கவில்லை எனவும் தயாநிதி என்ற தயா மாஸ்டர்வேட்பாளருக்கான விண்ணப்பத்தை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வட மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# '13' தேவையில்லை...

கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போதே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்செவ்வியில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் ஆர்.பிரேமதாச ஆகியோரையும் கடுமையாக விமர்சித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, அவர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், ஜெயவர்த்தன விட்ட தவறினாலேயே இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்அவர்களை திருப்பி அனுப்பியதன் ஊடாக பிரேமதாச பெரும் தவறிழைத்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

இதுவே இலங்கையில் நீண்ட காலமாக போர் இடம்பெற்றதுக்கு காரணம் எனக் குறிப்பிட்ட அவர், மாறாக இந்தியப் படையினரை வைத்தே விடுதலைப் புலிகளை அழித்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களுக்கான பிரச்சினை என்பது ஒரு அரசியல் பிரச்சினையல்ல எனவும, அது சிறுபான்மை மக்கள் எதிர் கொள்ளும் சிறிய பிரச்சினைகள் எனவும் இச்செவ்வியில் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

அவரது செவ்வியின் சில பகுதிகள் வருமாறு:

**கேள்வி:** உங்கள் சகோதரரும் அவருக்கு முன்பு ஆட்சி புரிந்தவர்களும் புலிகள் தோன்ற காரணமாக இருந்த தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் பற்றி நன்றாக அறிந்தவர்கள். அதை தீர்த்து வைப்பது அவசியம் என்று நீங்கள் கருதவில்லையா?

**பதில்:** இது அரசியல் பிரச்சினையே அல்ல. முன்னேற்றமடைந்த நாடுகள் பலவற்றிலும் இருக்கும் சிறுபான்மையினருக்கு சில கஷ்டங்கள் உண்டு. அதை தெரிந்து கொண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் வழி வகைகளையே செய்யவேண்டும். இதை அரசியல் பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது. ஏன், பெரும்பான்மையினருக்கு கூட இப்படிப்பட்ட கஷ்டங்கள் உண்டு. நாம் சுதந்திரம் பெற்றபோது, பெரும்பான்மை மக்களும் சிக்கலான கஷ்டங்களை அனுபவித்தார்கள். அரசு அவற்றை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுத்தது.

வளர்ந்து வரும் நாடுகள் பலவற்றிலும் இப்படிப்பட்ட சிறுபான்மைப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தகுந்த முறையில் தீர்த்து வைக்கவேண்டும். இதற்கு சிங்கப்பூர் நல்ல உதாரணமாகும். அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலனுக்காக இந்த பிரச்சினைகளில் தலையிட்டுக் குழப்புகின்றனர்.

தமிழர்களுக்கு என்று ஒரு பகுதியும் முஸ்லிம்களுக்கு என்று ஒரு பகுதியும் சில அதிகாரகங்களுடன் தருவது என்பது பிரச்சினைக்குத் தீர்வு அல்ல. வடக்கில் தமிழர்கள் மட்டுமே நிலம் வாங்க முடியும் என்று சொல்வது தவறு. இன்று கொழும்பில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அவர்களுக்கு வடக்கில் நிலம் வாங்க முடியாது. ஆனால் தமிழர்களுக்கு இங்கு நிலம் வாங்கலாம். எங்கு வேண்டுமானாலும் வசிக்கலாம் என்ற நிலை உள்ளது.

இலங்கையர்கள் அனைவரும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் வாழும் உரிமை இருக்க வேண்டும். அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதை செய்வதற்கு நல்ல சூழ்நிலை இப்போது உள்ளது. கடந்த 30 வருடங்களாக இந்த வாய்ப்புக்களை நாம் தவற விட்டு விட்டோம். மற்ற நாடுகள் நவீன தொழில் நுட்பத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கும்போது யுத்தம் செய்து கொண்டிருந்ததால் நமது முன்னேற்றம் மோசமான முறையில் பாழடைந்தது. ஒருநாளில் 22 விமானங்களை இழப்பதென்றால் எப்படிப்பட்ட நஷ்டம்? வெளிநாட்டு பயணிகள் வருகை, மீன்பிடி தொழில் என்று அனைத்திலும் நாம் நஷ்டமடைந்தோம். முதலீட்டாளர்கள் இங்கு வரவே அஞ்சினார்கள்.

இப்போது நாட்டில் அமைதியும் ஸ்திரத்தன்மையும் நிலவுகின்றது. இழந்தவற்றை கட்டியெழுப்ப நல்ல தருணம். தமிழர்களையோ முஸ்லிம்களையோ நாம் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுக்கவில்லை. இப்போது யார் கொழும்பில் பெரிய வர்த்தகர்களாக இருக்கிறார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும்தான் மற்றவர்களுடன் சேர்ந்து முன்னிலையில் இருக்கின்றார்கள்.

ஒரு முஸ்லிமையோ, தமிழரையோ பல்கலைக்கழகம் செல்லாமல் தடுத்திருக்கிறோமா? வைத்தியத்துறையிலோ நீதித்துறையிலோ பொறியியல் கல்வித் துறைகளிலோ எவ்வளவு சிறுபான்மை சமூகத்தினர் முன்னிலை வகிக்கின்றார்கள். திறமை, விருப்பம் இருந்தால் எவருக்கும் முன்னேற வாய்ப்பு உண்டு.

சிறுபான்மையினர் எல்லா இடங்களிலும் தடையின்றி பரந்து வாழ்கின்றனர். அப்படியிருக்கும்போது, தமிழர்களுக்கு முஸ்லிம்களுக்கு என்று தனித்தனி பகுதிகள் கேட்பது எந்த வகையில் நியாயம்?

**கேள்வி:-** ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பான்மையினராக தமிழர்கள் இருக்கும்போது, தங்களை தாங்களே சுயாதீனமாக ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்து தவறா?

**பதில்:** அங்குதான் பிரச்சினையே இருக்கின்றது. இதற்கு காரணம் புலிகள் சிங்கள சமூகத்தினரை அங்கு இருக்க அனுமதிக்கவில்லை. அடித்து துரத்தினார்கள். 30 வருடங்களாக சிங்களவர்கள் அங்கு இருக்கவில்லை. அதனால அவர்களதுஎண்ணிக்கையும் வளராமல் தடை செய்யப்பட்டது.

சகஜ நிலைமை இருந்திருந்தால் கூடிய எண்ணிக்கையான சிங்களவர்கள் அங்கு இருந்திருப்பார்கள். நான் யாழப்பாணத்தில் இரண்டாவது லெப்டினன்டாக கடமை புரிந்தபோது அதிக அளவில் அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் பலர் வாழ்ந்தனர்.

இப்போது எங்கே அவர்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? புலிகள் அவர்களை விரட்டி விட்டார்கள். அவர்களது எண்ணிக்கை குறைந்தது மட்டுமன்றி மீண்டும் வரவேயில்லை. இது எந்தளவு நியாயம்? உதாரணமாக திருகோணமலையை எடுத்துக்கொள்ளுங்கள். 80ஆம் ஆண்டுக்கு முன்னர் திருகோணமலையில சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அங்கு சிங்கள மக்கள் சிறுபான்மையினராக இருக்கின்றனர். இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் தந்திரத்தினால் தான் இந்நிலைமை ஏற்பட்டது. யுத்த சூழ்நிலை மட்டும் ஏற்படவில்லை என்றால் 78 வீதமாக இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினர் வடக்கிலும் கிழக்கிலும் அதே விகிதாசாரத்திலேயே இருந்திருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு வட- கிழக்கு நிலபரப்பில் தமிழர்கள் மட்டும் 98 வீதமாக இருப்பது என்ன நியாயம்?

**கேள்வி:** அப்படியானால் அதிகார பரவலாக்கலில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

**பதில்:-** இல்லை. நிர்வாக நோக்கங்களுக்காக அதிகார பரவலாக்கங்களை முன்னெடுக்கலாமே தவிர தேசிய பிரச்சினைக்கு அது தீர்வாகும் என எவராவது நம்பினால் அதனை நான் எதிர்க்கிறேன். உதாரணமாக பொலிஸ் அதிகாரத்தினை எடுத்துக் கொள்ளுங்கள். பொலிஸ் அதிகாரம் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்றால் கிழக்கில் அது சாத்தியப்பட்டிருக்கிறதா?

கிழக்கில் தமிழர்கள் எப்போதும் முதலமைச்சராகியிருக்க (19ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிக் கல்விப் பணிப்பாளராக மாணிக்கராசா நியமனம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாள ராகக் கடமையாற்றிய சி.மாணிக்கராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள இந் நியமனத்தின் பிரகாரம் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக மாணிக்கராசா கடமையாற்றுவார்.

ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எனப் பல பதவிகளை வகித்த இவரின் காலத்தில் நல்லூர்க் கல்விக் கோட்டம் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


24-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணரங்கில் 1924-02-11

விண்ணரங்கில் 1989-07-08

கலாநிதி நடிகமணி

வி.வி.வைரமுத்து

நாடகக் கலையுன் உடன் பிறப்பு
நடிப்பிலக்கணமுன் நயச் சிறப்பு
பாடற் கலையுன் இசைச் சிறப்பு
படிப்பிலக்கணமுன் இயற்சிறப்பு
வேடப் பொருத்தம் உன் பிறப்பு
விரிவிலக்கணமுன் விழிச்சிறப்பு
தேடக் கிடையாத் திலகம் நீ
தேர்ந்த ரசிகர்தம் திறன் சிறப்பு

"சாரங்கா"
காங்கேசன்துறை.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.

(3304)


# கிணற்றிலிருந்து முதியவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வீட்டுக் கிணற்றில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, குறித்த நபரைக்காணவில்லை என தேடிய போதே கிணற்றுக்குள் சடலமாக காணப் பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் (வயது 55) என்ற நபரே கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)


பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-3916)

குறைந்த கட்டணத்தில்
பொதிகள் சேவை
மற்றும் விமான பயண சீட்டுக்கள்

லண்டன், கனடா, ஜேர்மனி, சுவிஸ், பாரிஸ், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஏனைய நாடுகளுக்கு

கட்டணங்கள் (1 Kg) இற்கு
லண்டன் 1500 /-
கனடா 2600 /-



விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு
சுவிஸ் 7800 /-
அவுஸ்திரேலியா 5500 /-
ஜேர்மனி 5500 /-

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணெய் வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

visa பெறுவதற்கான ஒழுங்குகள்: இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பாங்கொக், டுபாய், சீனா (China) ஆகிய நாடுகளுக்கு குறுகிய காலத்தில் visa பெற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels
30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9596, 077 87 10 732

(C-3917)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பரம்பரையா? சூழ்நிலையா?

ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கும் கெட்டவனாக இருப்பதற்கும் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

பரம்பரைக்குணமா? அல்லது வளர்ந்த சூழ்நிலையா?

சில பையன்களைப் பார்த்தால் உடனே "நீ இன்னாருடைய மகனா?" என்று கேட்கிறோம். அவனும் "ஆமாம்" என்கிறான். இது எப்படி?

முகச்சாயல் அதைக்காட்டிக் கொடுக்கிறது. ஒரு பையன் நடந்து போகும் முறை, அவனுடைய உடல்வாகு இதையெல்லாம் வைத்துக்கூட அவன் இன்னாருடைய பிள்ளைதான் என்பதை ஓரளவிற்கு ஊகிக்க முடிகிறது.

ஒருவருடைய முக அமைப்பு, கண்களின் நிறம், தோலின் நிறம், தலைமுடி, உயரம் இப்படி பல விடயங்களைத் தீர்மானிப்பது அவருடைய பெற்றோரிடமிருந்து பெறப்படுகின்ற மரபுக் கூறுகள்தான்.

இதைத்தான் ஆங்கிலத்தில் "ஜீன்கள்" என்று சொல்கிறார்கள். உயிரியல் செயல்கள், அமினோ அமிலங்கள், சுரப்பிகள் இவற்றின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக் கூறுகள்தான்.

இப்படியெல்லாம் இருப்பதனால் ஒருவருடைய நடத்தைக்கும் பரம்பரைதான் காரணம் என்று ஒரேயடியாக சொல்லிவிட முடியாது. சூழ்நிலையின் முக்கியத்துவம் குறித்தும் பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... ஒருவருடைய புத்திசாலித்தனம், உணர்ச்சி வசப்படும் தன்மை, கோபம், சுலபமாக நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல், சோர்வுத் தன்மை.

இவையெல்லாம் பெற்றோர்களுடைய வசதி, கல்வி, சூழ்நிலை, வளர்ப்பு முறை என்பவற்றைப் பொறுத்துத்தான் அமைகிறது என்கிறார்கள்.

அப்பா மாதிரி பிள்ளை நடக்கிறது என்றால் அதற்கு பரம்பரைக்குணம் காரணமில்லை. பார்த்துக் கற்றுக் கொள்வதுதான் காரணம் என்பது இவர்களுடைய வாதம்.

கோட்ஸ்மான் என்று ஒரு ஆராய்ச்சியாளர். அவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒருதாய் வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரித்து வெவ்வாறு சூழ்நிலைகளில் வளர்த்தார். அப்படி வளர்த்தது மூலமாகவே இரண்டு பேருக்கும் மாறுபட்ட குணம்-திறமை இருக்கிற மாதிரி உருவாக்கி விட்டாராம்.

அவன் ஒரு மாதிரியும் இவன் ஒரு மாதிரியும் ஆகிவிட்டார்கள்.

வான்டன்பெர்க் என்ற ஆராய்ச்சியாளர் குழந்தைகளை மூன்று வகையாக பிரித்தார். கலகலப்பாக இருக்கிறவர்கள் ஒருவகை, தனியாக இருக்க விரும்புகிறவர்கள் ஒரு வகை, உணர்ச்சி வசப்படுகிறவர்கள் ஒருவகை. பாரம்பரிய சொல்வாக்குத் தான் வகைகளுக்கு காரணம் என்று சொல்கிறார் அவர்.

ஒரு மனிதக் குரங்கை ஒரு குழந்தையுடன் சேர்த்து வளர்த்துப் பார்த்தார்களாம். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும் பாசமாக இருக்க கற்றுக் கொண்டதாம். குணத்தை மட்டுமல்ல உடம்பு வாகையைக்கூட சூழ்நிலை மாற்றி விடும் போலிருக்கிறது.

ஜப்பானியர்களில் உயரம் குறைந்தவர்கள் சிலர் அமெரிக்கா வில் குடியேறினார்களாம்.

இரண்டு மூன்று தலைமுறைக்கு பின்னர் பார்த்தால்... அந்த ஜப்பான்காரர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்திருந்தார்களாம்.

இவற்றையெல்லாம் வைத்து பார்க்கும்போது பரம்பரையைவிட சூழ்நிலைதான் அதிக முக்கியத்துவம் பெறுகிறது என்று தோன்றுகிறது.

இந்தக் காலத்துப் பையன் தன் அப்பாவிடம் போய் அப்பா என்னைப் பொறுத்தவரைக்கும் பரம்பரையிலும் நம்பிக்கையில்லை என்றார்.

எப்படிடா என்று கேட்டார் அப்பா.

ஒரு பையன் கணக்கில் நூற்றுக்கு நூறு புள்ளிகள் வாங்கியிருக் கிறான். அவனுடைய அப்பா படிக்கும் போது கணக்கில் 6 புள்ளிகள் வாங்கினாராம். அந்த மாதிரியே இந்த பையனும் இருந்தால் பாஸாகியிருக்கவே முடியாதே என்றான்.

"அது சரி...6 புள்ளி வாங்கின அந்த அப்பா யாரடா?" என்றார். "நீதான்!" என்றான் பையன். "எப்படிடா தெரிந்தது" என்றார். "அம்மா சொன்னாங்க" என்றான் பையன்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான வாரம்

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் விஞ்ஞான வாரம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை அனுசரிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் இரு நாட்களாக கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதன்பிரகாரம் முதலாம் நாள் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ணகுமார், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன் மூன்றாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும். இதன்போது புதிர்ப் போட்டிகள் நடைபெறவுள்ளதோடு, இப் போட்டி உள்ளகப் புதிர்ப் போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான புதிர்ப் போட்டி என இரு பிரிவாக இடம்பெறவுள்ளது.

மேற்படி உள்ளகப் புதிர்ப் போட்டி முற்பகல் 9 மணி முதல் 10 மணி வரையும் பாடசாலைகளுக்கிடையிலான புதிர்ப்போட்டி முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12 மணி வரையும் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிகல்வி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.கஜபதி, கௌரவ விருந்தினராக யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன்ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து நான்காம் நாள் நிகழ்வாக எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை நுண் தொழில்நுட்பம் வியாழக்கிழமை (Nano technology) தொடர்பான கருத்தரங்கு முற்பகல் 11.30 மணிதொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும்.

இக்கருத்தரங்கின் வளவாளராக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் பி. ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணிதப் பாடப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதன், கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் அ.நிருபராணி ஆகியோர்கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறுதி நாள் நிகழ்வாக அறிவியல் ஊற்று எனும் நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு விழா ஆகியன இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக விஞ்ஞான பாடத்திற்கான வடமாகாண விஞ்ஞானஉதவிக்கல்விப் பணிப்பாளர் கே.ஏ.சிவனருள்ராஜா, கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர் ஸ்ரீகரன், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி ஆகியோர் கல ந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் இன்றைய அசாதாரண காலநிலை மாற்றத்தால் அதிகம் செல்வாக்கு செலுத்துவது விஞ்ஞான ஆய்வு முயற்சியா? சமூகத்தில் போதிய விழிப்புணர்வின்மையா? என்ற தலைப்பிலான பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (2-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80-160 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 160 |
| தக்காளி | 100 | 120 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 140 | 140 |
| கரட் | 100 | 80 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 100 |
| கறிமிளகாய் | 100 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 200 |
| போஞ்சி | 100 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| [illegible] | [illegible] | [illegible] | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

# இராசி பலன்

08.07.2013
(ஆனி 24, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 12..57 மணிவரை
திருவாதிரை முற்பகல் 8.59 மணிவரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை
சுபநேரம் 11.58-1.28 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்கள் உதவி செய்ய முன்வரலாம்.

**இடபம்** காலை நேரத்திலேயே சுப தகவல்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புண்டு, எப்படி நடக்கலாம் என நினைத்த காரியமொன்று நல்லவிதமாக நடைபெறும், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையலாம், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**சிங்கம்** உன்னத வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள் திறமைகள் வெளிப்படும் நாள், அந்நியர் உதவியுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துப் பிணக்குகள் சுமுகமாக முடியும்.

**விருச்சிகம்** பயணங்களின் போது நிதானம் தேவை, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, வரவும் செலவும் சமமாகும்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வராத உறவினர் இல்லம் தேடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், கௌரவமான நாள், சுபகாரியம் பேச்சுக்கள் முடிவாகலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** நாவன்மையால் நற்பெயரெடுப்பீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உடல்நலம் சீராகும்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும், வாகன பழுது செலவுகள் அதிகரிக்கும், நண்பர்கள் உதவியுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைசிறந்த 1000 வங்கிகள் வரிசையில் கொமர்ஷல் வங்கி

The Banker TOP 1000 WORLD BANKS 2013

COMMERCIAL BANK

உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் இலங்கையின் கொமர்ஷல் வங்கி தொடர்ந்து 3-வது ஆண்டாக இடம்பிடித்துள்ளது.

இந்த உச்சத்தை அடைந்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகவும் அது திகழ்கின்றது. ஐக்கிய இராச்சியத்தின் கீர்த்திமிக்க 'தபேங்கர்' சஞ்சிகை வருடாந்தம் இந்த தர வரிசைப் பட்டியலை வெளியிடுகின்றது.

கடைசியாக வெளியிடப்பட்டுள்ள 2013ம் ஆண்டின் அண்மைய பட்டியலில் கொமர்ஷல் வங்கிக்கு 983வது இடம் அளிக்கப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டில் வங்கியின் முதல் வரிசை மூலதனம் 355 மில்லியன் டொலர்கள் என்ற ரீதியில் இந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஐயாயிரம் வங்கிகள் மத்தியிலிருந்தே இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. வங்கிகளின் தரம் மற்றும் மதிப்பீடுகள் என்பனவற்றுக்கு உலகளாவிய நிதிச் சமூகத்தால் இந்த வரிசைப் பட்டியல் மிகவும் நம்பகரமான வழிகாட்டியாகக் கருதப்படுகின்றது.

'ஆயிரம் வங்கிகள் வரிசையில் இடம்பிடித்துள்ளமையானது வங்கியின் நிலையை மிக உறுதியாக உத்தரவாதம் செய்யும் ஒன்றாக அமைந்துள்ளது. அதிலும் மூன்றாண்டுகளாக தொடர்ந்து இந்த நிலையைத் தக்கவைப்பதென்பது எமது தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு சான்று பகர்வதாகவும் அமைந்துள்ளது' என்று கூறினார் வங்கியின் தலைவர் தினேஷ் வீரக்கொடி.

2013ம் ஆண்டின் பட்டியலில் அவதானிக்கப்படவேண்டிய ஒரு அம்சம் சீனாவின் கைத்தொழில் வர்த்தக வங்கி (ICBC) முதலிடம் பிடித்துள்ளமையாகும்.

கடந்த ஆண்டு முதலாம் இடத்தைப் பிடித்த பேங்ஒப் அமெரிக்கா இரண்டாம் இடத்தையும். ஜேபி மோகன் சேஸ் அன்ட் கோ மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன. HSBC வங்கி நான்கரம் இடத்துக்கு வந்துள்ளது.

உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகளைப் பட்டியலிடும் த பேங்கர் சஞ்சிகையின் இந்தப் பணி 1970ல் தொடங்கப்பட்டது.

பிரிட்டனின் FT குழுமத்தின் விஷேட வெளியீடுகள் மற்றும் மாநாட்டுப் பிரிவால் த பேங்கர் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

கொமர்ஷல் வங்கியே இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியாகும். 232 கிளைகள் மற்றும் சேவை நிலைய வலையமைப்புக்களுடனும் 569 ATM நிலைய வலையமைப்புடனும் இந்த வங்கி செயற்படுகின்றது.

இந்த வங்கி பங்களாதேஷிலும் 18 கிளைகளைக் கொண்டுள்ளது.

'குளோபல் பினான்ஸ்' சஞ்சிகையால் தொடர்ந்து 15 வருடங்களாக இலங்கையின் தலைசிறந்த வங்கியாகவும் இது தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர 'த பேங்கர்', 'பினான்ஸ் ஏஸியா', யூரோமணி மற்றும் டிரேட் பினான்ஸ் சஞ்சிகைகளால் சிறந்த வங்கிக்கான பல விருதுகளையும் வென்றுள்ளது.




# கடனில் பறக்கும் மிஹின்




இலங்கை அரசின் மூலம் நிர்வகிக்கப்படும் மிஹின் லங்கா விமான சேவையின் தரத்தை உயர்த்த அரசாங்க உத்தரவாதத்தின் பெயரில் 616 மில்லியன் ரூபாவை கடனாக வழங்க திறைசேரி, அரச வங்கியொன்றுக்கு அனுமதியை வழங்கியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மிஹின் லங்கா 2.78 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (367 மில் லியன் ரூபா) வரை இலங்கை வங்கியிடமிருந்து கடனாக பெற் றுக் கொள்வதற்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியிருந்தது.

தொடர்ச்சியாக நட்டத்தை எதிர்நோக்கியுள்ள மிஹின் லங்கா நிறுவனம், சிறிலங்கன் விமான சேவையின் ஓரங்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் திட்டங்களுக்கு மேலதிகமாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் மஷ்ரெக் வங்கியிடமிருந்து 22.54 பில்லியன் ரூபா வரை யிலான கடன் வசதியை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதத்தையும் வழங்கியுள்ளது.

# புதிய பொருளாதார கொள்கை வேண்டும்

சிறந்த பொருளாதார சவாலை வெற்றி கொள்வதற்காக புதிய பொருளாதார கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வலியுறுத்தலை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் விடுத்துள்ளார்.

உள்ளூர் உற்பத்திகளை 100 பில்லியின் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே பிரதான குறிக்கோள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான வேலைத்திட்டங்கள் முன் எடுக்கப்படும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,121.01 | 6,048.18 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,431.74 | 3,383.46⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 3,225.75

[illegible] ஈ சனலிங்(6.00),ஜி எஸ் பினான்ஸ்(640.00), சவாடிஸ்.(9,000.00), சிலோன் பெவரேஜ்(589.00), சிஜரி(142.00).

[illegible] பிசிஎச் ஹோல்டிங்ஸ்(1.90),பிசி ஹவுஸ்(1.20), ரச்வூட்(3.60), எஸ்எம்பி லீசிங்(0.30), பிசி பார்மா(2.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# செலிங்கோ லைப் 246ஆவது கிளை திறப்பு

பொலன்னறுவை மாவட்டத்தில் அரலகன்விலவில் செலிங்கோ லைஃப் தனது புதிய கிளையொன்றை அண்மையில் திறந்து வைத்தது.

இதன் மூலம் செலிங்கோ லைஃப்பின் கிளை வலையமைப்பு 246ஆக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன் புதிய கிளையைத் திறந்து வைத்தார்.

2012 நிதி ஆண்டு முடிவில் அதன் மொத்த சந்தா வருமானம் 10.8 பில்லியன் ரூபாய்களாகும்.

# ஜனசக்தியின் புதிய கிளை கொள்ளுபிட்டியில்

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, முற்றிலும் ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நோக்கில் கொள்ளுப்பிட்டியில் தனது புதிய கிளையை திறந்துள்ளது. இப் புதிய கிளையை ஜனசக்தி நிறுவனத்தின் மூத்த நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் விசேட விருந்தினர்கள் பங்குபற்றலுடன் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் உப தலைவர் சந்திரா ஷாஃப்ட்டர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

ஜனசக்தி நிறுவனம் நாடுபூராகவும் 110 கிளை வலையமைப்பினை தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து கிளைகளும் தலைமை காரியாலயத்துடன் கணனி மூலமான தொடர்பினை கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு எவ்வித தங்குதடையின்றி இலவசமாக தகவல்களை அனுப்புவதற்கான வசதி வாய்ப்பினையும் வழங்குகிறது.

# வாசன் கண் மருத்துவமனை




உலகின் மிகப்பெரிய வலையமைப்பை கொண்ட வாசன் கண் மருத்துவமனை தனது செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பித்துள்ளது.

கொழும்பு 3 இல், சகலருக்கும் இலகுவாக அடையத்தக்க வகையில் முற்றிலும் வசதியான முறையில், 30,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட வளவில், சகல நவீன தொழில்நுட்ப வசதிகளையும் உள்ளடக்கியதாக, சிறந்த விஷேட கண் வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்திய நிபுணர்களின் சேவையை சிறந்த அமைதியான சூழலில் சர்வதேச தரத்திலான சேவையை பெற்றுக்கொடுக்கும் வகையில் அமையப் பெற்றிருக்கின்றது.

இதுவே நாட்டின் பரிபூரணமான வசதிகளைக்கொண்ட கண் மருத்துவமனையாகும். சிறிய ஆய்வுகூட பரிசோதனையிலிருந்து அனைத்துவிதமான கண் சத்திர சிகிச்சைகள் வரையிலான தேவையான அனைத்து வசதிகளையும் இங்கு மிக இலகுவான முறையில் பெற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், நவீன வடிவிலான சகல கண்ணாடி வகைகள் மற்றும் ஃப்ரேம்களைக்கொண்ட முழுமையான வசதிகளைடங்கிய கண்ணாடி அவுட்லெட்களையும் கொண்டுள்ளது.

வாசன் கண் மருத்துவமனையானது, குறித்த கண் சம்பந்தமான நோய்களுக்கான விஷேட நிபுணத்துவ சிகிச்சை வசதிகளையும் கொண்டுள்ளது.

அதாவது 38 வகையான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான விஷேட சிகிச்சைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும், கொழும்பு வாசன் கண் மருத்துவமனையில் முழுமையான நவீன வசதிகளுடனான மூன்று சத்திர சிகிச்சை அரங்குகளும் காணப்படுகின்றன.

வாசன் கண் மருத்துவமனைகள், மத்திய கிழக்கிலும் நிறுவப்பட்டிருக்கின்றதுடன், ஒவ்வொரு வருடமும் 6 மில்லியனுக்கும் அதிகமான நோயாளர்களுக்கு தமது உயர் தரத்திலான சேவையைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு முதன்மை நிறுவனமாகவும் காணப்படுகின்றது.

வாசன் நிறுவனமானது 150க்கும் அதிகமான கண் மருத்துவமனைகளை செயற்படுத்துவதுடன், 750க்கும் அதிகமான விஷேட கண் மருத்துவ நிபுணர்களையும், 7500க்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர் குழாத்தையும் கொண்டுள்ளது.

கொழும்பு வாசன் கண் மருத்துவமனையின் வசதிகளானது, இலங்கையின் முதன்மையானதாகவே கருதப்படுகின்றது. அத்துடன், இது தனது இலங்கை வாடிக்கை 'யாளர்களுக்கான சேவையை ஞாயிற்றுக் கிழமைகளிலும் பெற்றுக்கொடுக்கின்றது.

# யாழ் உணவு வகைகளுக்கான ஊக்குவிப்பு பிரசாரத்தை நடத்திய Grand Oriental Hotel



கொழும்பிலுள்ள கிரான்ட் ஓரியன்ட் ஹோட்டல் மீண்டும் யாழ்ப்பாண உணவு விரும்பிகளுக்காக யாழ்ப்பாண உணவு வகைகள் பற்றிய ஊக்குவிப்பு பிரசார நிகழ்ச்சி ஒன்றினை கடந்த யூன் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடத்தியது.

இலங்கையின் ஏனைய உணவுக் கலாசாரத்திலும் பார்க்க யாழ்ப்பாண உணவுக் கலாசாரம் வித்தியாசமானது. அனேக இலங்கையர்கள் யாழ்ப்பாண உணவு வகைகளை விரும்பி சுவைப்பார்கள்.

யாழ்ப்பாண மக்கள் அறுசுவை பற்றியும் தாங்கள் அருந்திய உணவு வகைகள் பற்றியும் பேசுவார்கள்.

இந்த தனித்துவமான உணவை சிறந்த அறிவும் அனுபவமும் கொண்ட தலைமைச் சமையல்காரர் ராசன் சகல யாழ்ப்பாண உணவுகளையும் அவற்றுக்குரிய பாரம்பரிய முறைப்படி தயாரிப்பார்.

இந்த யாழ்ப்பாண இரவு விருந்து வைபவத்தில் பலர் கலந்து கொண்டனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.00 | 132.18 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.55 | 199.25 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.56 | 171.13 |
| சுவிஸ் பிராங் | 133.83 | 139.00 |
| கனேடிய டொலர் | 121.76 | 126.19 |
| அவுஸ்திரேலிய டொலர் | 117.02 | 121.60 |
| சிங்கப்பூர் டொலர் | 100.62 | 104.14 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.32 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.55 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகள் எவரும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை

## அவர்களுக்கு உதவ நான் தயார்-அமைச்சர் கஜதீர

(யாழ்ப்பாணம்)

**புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் எவரும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதை தன்னால் உறுதிபடுத்த முடியும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.**

அத்தோடு வடக்கிலும் தெற்கிலும் சுயலாப நோக்கத்தோடு அரசியலில் ஈடுபடுபவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த அமைச்சர் கஜதீர யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் முன்னாள் போராளிகளைச் சந்தித்து அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதோடு முன்னாள் போராளிகள் சமூகத்தில் இணைக்கப்பட்ட பின்பு எதிர்கொள்ளும் சவால்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது முன்னாள் போராளிகளினால் தாங்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினையாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் பிரச்சினை உள்ளதாகவும் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையிலும் தாம் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு முன்னாள் போராளிகளினால் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து உரையாற்றிய அமைச்சர் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அத்தோடு முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க தொழில் தருநர்கள் முன்வர வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச்சேர்ந்த முன்னாள் போராளிகள் எவரும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதனையும் உறுதிப்படுத்தமுடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் வடக்கிலும் தெற்கிலும் சுயலாப அரசியலில் ஈடுபடுபவர்களை புறக்கணித்து மக்களுக்கு சேவை மனப்பாங்குடன் பணிபுரிபவர்களைத் தெரிவு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வரலாற்றில் இன்றைய நாள் மிகவும் முக்கியமான சிறப்பு மிக்கநாள். சுமார் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆண்டுநிறைவு விழாவை நடத்தி கொண்டிருக்கின்றது.

வடக்கினைப் பொறுத்தவரையில் மேற்குறிப்பிடப்பட்ட 35 ஆண்டுகளில் ஜனநாயக சூழல் இங்கு இருந்திருக்கவில்லை.

ஜனநாயகத்துக்கு எதிரான சூழல் இருந்ததனால் நாம் இங்கு வரவும் முடியவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தையும் எமது சொந்த மண்ணாகவே நாம் பார்க்கின்றோம். இங்கு வாழும் தமிழ்மக்களையும் எமது சகோதரர்களாகவே நாம் கருதுகின்றோம்.

வடக்கிலும் தெற்கிலுமுள்ள சுயலாப அரசியல் தலைவர்களை புறக்கணிப்பதோடு இனவாதம், மதவாதம் நாட்டில் தலைதூக்காமல் தடுக்க வேண்டும். இனவாதம், மதவாதம் நாட்டினை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும். எனவே பொதுவேலைத்திட்டத்தின்கீழ் ஒரு அணியில் நாட்டு மக்கள் அனைவரும் திரள வேண்டும்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவேண்டும். அவர்களின் ஜனநாயக உரிமைகளை யாரும் பறித்துவிடக்கூடாது என தெரிவித்ததோடு அவர்களின் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நேபாள நாட்டின் முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான தோழர் மாதவ்குமார் நேபாள், சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (செ-6)


### காணிகள் விற்பனைக்குண்டு

அல்வாய் மேற்கு, திக்கம் வடிசாலைக்கும் தேவரையாளி கண்ணகை அம்மன் கோயிலுக்கும் இடையில் வெட்டுக் கிணற்றுடன் கூடிய 12 பரப்பு தோட்டக்காணியும் வீடு கட்டக்கூடிய 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. மா, பனா தென்னை போன்ற வருமானம் தரும் மரங்களும் உண்டு. வேம்பு, பனை மரமுமுண்டு.

**தொடர்புகளுக்கு:**

1. திரு.சின்னத்துரை நடராசா. 021 226 2687
2. Dr.இ.கனகலிங்கம். 0779522105

(சி/3878)


## சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசாங்கம் தயாராகிறது!

### ஆட்சியை தக்கவைக்க திட்டம்- ஜே.வி.பி.

(கொழும்பு)

இலங்கையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படலாம் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளின் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் வாய்ப்பு இருப்பதாக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவை கோடிட்டு ஜே.வி.பி. தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் சோமவன்ச அமரசிங்க அரசாங்க அமைச்சர் ஒருவரை சந்தித்த போது இந்த விடயம் குறித்து பேசப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் அமைச்சரவையிலும் பேசப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.தரப்பு குறிப்பிட்டுள்ளது. அரசாங்கம் தமது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்காக இந்த முனைப்பை மேற்கொள்ளலாம் என்றும் அவ்வட்டாரங்களில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. (செ-2)


### ஆறுதல் நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்றல் ஊக்கிகள்

தமிழ் மொழிமூலம் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் எமது நிறுவனத்தால் வழங்கப்பட்டு வரும் கற்றல் ஊக்கிகள் மூன்றாம் தவணைக்கும் வெளிவரவுள்ளன.

| தரம் | பாடங்கள் |
|---|---|
| 4 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 6 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 9,10 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு |
| 11 | தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம், வரலாறு+ மாதிரி வினாத்தாள் |

- ஆசிரியர், மாணவர்களின் கற்றல் கற்பித்தலை இலகுவாக்குவன
- தேர்ச்சி மட்டங்களின் அடிப்படையானவை

பெறவிரும்புவோர் 20.07.2013 ஆம் திகதிக்கு முன் தேவையான தொகையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்

தொடர்புகளுக்கு
T.P:-0212217092
(சி-3914)

சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்று அதிகாரி
ஆறுதல், 51 , வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து(v)<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDA கணக்காளர்<br>தொ.இ:B695 | பிறப்பு: 1980 இந்து(Mu)<br>நட்சத்திரம்: ரேவதி 4உயரம்: 5'கி.பா :79.25 செவ் 8<br>தகைமை/தொழில்: HNDM கணனி தனியார்<br>தொ.இ:G926 |
| பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா : 36<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA ஆசிரியர்<br>தொ.இ:B696 | பிறப்பு: 1988 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா :12.5 செ 4<br>உயரம்: 5'3 "<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G928 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2உயரம்: 5'9"<br>கி.பா :52 செவ் 7<br>தகைமை/தொழில்: பொறியியளாளர்UK Student Visa<br>தொ.இ:B698 | பிறப்பு: 1992 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா : 20.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/Lசைவ போசனம்<br>தொ.இ:G929 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4 செவ் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMAUK Work Permit<br>தொ.இ:B699 | பிறப்பு: 1973 இந்து(KO)<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா : 11.5<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில; BAநிகழ்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ: G932 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன


அரியாலையில் இரவு நேரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரம் 3 யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இவ் உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்படும் போது உழவு இயந்திர பெட்டிக்கு மேலாக மணல் நிரப்பப்பட்டு காணப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான மணல் கடத்தல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற போதிலும் அவை யாவும் அதிகாரிகளினால் கண்டு கொள்ளப்படுவதில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரியாலை கிழக்கு ,நாவலடி போன்ற மக்கள் குடியிருப்பு பிரதேசங்களிலும் இம் மணல் அகழ்வு தொடர்வதனால் அம் மக்கள் மழை காலங்களில் பெரிதும் அவதிப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. எங்கள் நிலத்தை சூறையாடுகின்றனர் என மக்கள் கொதிப்படைகின்றனர். மழை காலங்களில் இருக்க முடியாத அவலநிலை இம் மணற் கொள்ளையர்களால் எமக்கு ஏற்பட்டு உள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை மண்கடத்தலில் ஈடுபட்டவர்களினை பொலிஸார் கைது செய்ததனைப் போன்று தொடர்ச்சியாக மண் கடத்தலில் ஈடுபடுபவர்களையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-4)



நன்றி: ஐலண்ட்

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த யாழ்.பொலிஸார் விரைந்த நடவடிக்கை

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் பணிப்பிற்கமைய யாழ்ப்பாணத்தில் விபத்துக்களை தவிர்க்கும் முகமாக துவிச்சக்கரவண்டிகளுக்கு ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி சமிந்த டி சில்வா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பிரதேங்களில் முதற்கட்டமாக 2ஆயிரத்து 500 துவிச்சக்கரவண்டிகளுக்கு இவ் ஒளி தறிப்பு ஸ்ரிக்கர் ஒட்டப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றிருந்தது.


இதன்போது போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி சமிந்தடி சில்வா மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கரவண்டிகள் மூலமே அதிக விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக இரவு நேரங்களிலே அதிகமான துவிச்சக்கரவண்டி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதற்கு துவிச்சக்கர வண்டிகளில் மின்குமிழ்கள், ஒளித்தெறிப்பு கற்கள் பொருத்தப்படாமையே காரணமாகும்.

இதனைவிட இரவில் துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் கறுப்பு, கறுப்பு சார்ந்த ஆடைகளையும் அணிந்து செல்வதனால் விபத்துக்கள் நிகழ்வதற்கு சாதகமான காரணியாக அமைந்து விடுகின்றன.

நாற்சந்திகள், ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதியை கடக்கும்போது அவதானமாக கடக்காமல் ஏனோ தானோவென்று கடந்து செல்லல்

துவிச்சக்கரவண்டிகளில் சமாந்தரமாக பயணித்தல் என்பவற்றாலும் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வாறான தவறுகளால் நிகழும் விபத்துக்களை தவிர்க்கும் முகமாகவே முதற் கட்டமாக ஒளித்தெறிப்பு கற்கள் பொருத்தப்படாத துவிச்சக்கரவண்டிகளுக்கு ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர் ஒட்டப்படும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



பொதுமக்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். வீதிப்போக்குவரத்தை மீறுபவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி அபராதம் விதித்துவிட்டால் மட்டும் வீதி போக்குவரத்துச் சட்டங்களை சரியாகக்கொண்டு செல்லமுடியாது.

மக்கள் தாமாக உணர்ந்து செயற்படல் வேண்டும், சட்டத்தினால் மட்டும் விபத்தைக் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வும் அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாராகிய நாம் பல செயற்றிட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

அவற்றில் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் நேரடியாகச் சென்று போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு செயன்முறை விளக்கம், பட விளக்கமும் அளிக்கப்படவுள்ளது.

யாழ்.நூலகத்திலும் ஒரு மாதத்திற்கு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்கள் எதனால் இடம்பெறுகின்றன, எந்த வாகனங்களால் இடம்பெறுகின்றன. அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் என்பவை தொடர்பாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றியால் பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்திற்கும் தனியார் பஸ் சாரதிகள் சங்கத்திற்கும் இப்போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது என்றார் பொறுப்பதிகாரி.

இச்சந்திப்பின் போது யாழ்ப்பாணத்திலுள்ள சந்திகளில் மிக நெருக்கமாக கட்டடங்கள் வீதியினை இலகுவாக கடக்கமுடியாத நிலையில் கட்டப்பட்டுள்ளன.

சில வர்த்தக நிலையங்களின் முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் ஒளித்தெறிப்பு தன்மையினைக் கொண்டுள்ளதால் இவற்றாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என ஊடகவியலாளர்கள் சிலரால் பொறுப்பதிகாரிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் தாம் இதற்கு சட்டநடவடிக்கை எடுக்க முடியாது எனவும் மாநகரசபையே இதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் என அவர் தெரிவித்ததோடு யாழ்ப்பாணத்தில் விபத்துக்களை தவிர்ப்பதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு பொதுமக்களினதும் ஊடகங்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியம் என அவர் மேலும் கூறினார். (செ-4)

## விருந்துபசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் 15 ஆவது ஆண்டு மாணவர்களுக்கான Management Focus>Xv மதிய போசன விருந்துபசார நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல் நம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)







இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நேபாள நாட்டின் முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான தோழர் மாதவ்குமார் நேபாள், சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகரா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமேழி எனும் திருவூரில் கோயில் கொண்ட ஞானவைரவர்



**ஊரும் மக்களும்**

யாழ். குடாநாட்டின் வட பகுதியில் கீரிமலை புண்ணிய தீர்த்தத் தலத்திற்குத் தென்மேல் பகுதியில் சித்திரமேழி என்னும் பழம்பெரும் கிராமம் உள்ளது. இதன் வடபகுதியில் பாக்கு நீரிணைக் கடல் உள்ளது. இங்குதான் சேந்தான்குளம் என்னும் கடற்கரையும் உள்ளது. கிழக்கும் தெற்கும் இக் கிராமத்தின் உறவு முறை ஊர்களான காடிவளை, துன்மலை ஆகியன உள்ளன.

மேற்குத் திசையில் இளவாலை நெல்வயல் இருக்கிறது. அந்தணரும் ஆனினமும் சிறக்க வாழ்ந்த இடம் இதுவாகும். இத்தகைய சிறப்புகளுடன் இவ் ஊர் விளங்கியதால் தெய்வ மணம் கமழும் தொல்பதியாம் சித்திரமேழி என்று பலரும் புகழ்ந்து பாராட்டி வந்துள்ளனர்.

இங்கு வாழ்பவர்கள் கார்காத்த வேளாள குலத்தினர். உழவுத் தொழிலே இவர்களின் உயிர் நாடியாக அமைந்திருந்தது. சித்திர வேலைப் பாடுகள் அமைந்த கலப்பைகளைக் கொண்டு இவ்வூர் மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வந்தனர். இதனாலேயே இவர்களின் ஊர் சித்திரமேழி எனச் சிறப்பிக்கப்பட்டது. இவ் ஊர் மக்கள் சிதம்பரம் முதலான சிவதல யாத்திரை சென்று வருபவர்கள். அங்கிருந்து வரும்போது தமது உழவுத் தொழிலுக்கு ஏற்ற வடக்கன் மாடுகளைக் கொண்டு வருவது வழக்கம்.

இவ்வாறு சென்று வருபவர்களில் முதலிக் குட்டி மரபில் வந்த கந்தப்பரும் ஒருவராவார். இவர் 16 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சிதம்பரம் சென்றிருந்தார். அங்கு சிவதல தரிசனங்களை நிறைவு செய்து கொண்டு திரிசூலம் ஒன்றை இங்கு எடுத்து வந்தார்.

சித்திரமேழி என்ற நிலப்பெயர் கொண்ட இடத்தில் கொன்றை மரத்தடியில் அதனை முறையாக வைத்து வைரவ வழிபாட்டினை ஆரம்பித்தார். சிதம்பரத்தில் இருந்து கொண்டுவந்த வைரவர் என்பதால் அம்பல வாண வைரவர் என்று அழைக்கலாயினர்.


இளவாலைப் பகுதியில் உள்ள சைவ ஆலயங்களில் இது பழைமை வாய்ந்தது. இவ் ஆலயத்திற்குரிய நிலம், பரிகாரி வன்னியராலும் பூசாரி வம்சத்தினராலும் விநாயகர் வம்சத்தினராலும் வழங்கப்பட்டது. இங்குள்ள மக்கள் ஆசார அனுட்டான சீலர்கள். இவர்கள் காலை, மாலை வேளைகளில் சுவாமி தரிசனம் செய்த பின்னரே தமது கடமைகளை மேற்கொள்வதுடன் உணவும் உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

**பூசைகளும் வழிபாடும்**

இவ் ஆலய பூசைகளை உயர் சைவ பரம்பரையினரே முன்னின்று நடத்தினர். ஆரம்ப காலங்களில் கந்தப்பரும் அவரின் மகன் வைரவநாதரும் அதன்பின் ஆறுமுகமும் பூசைகளை நடத்தி வந்தனர்.

ஆறுமுகத்தின் பிள்ளைகள் சின்னத்தம்பியும் முருகேசும் பூசையைச் செய்தனர். இவர்களை மக்கள் பக்தி சிரத்தையோடு பூசாரியார் என்று அழைத்தனர். பிற்காலத்தில் சிவஸ்ரீ செல்லையாக் குருக்கள் எனப்படும் மகாக்கணபதிக் குருக்களை மாதகலில் இருந்து அவரின் தாயாருடன் 1875 ஆம் ஆண்டு இங்கு அழைத்து வந்தனர்.

இக்குருக்கள் வேத விற்பன்னராக விளங்கினார். குருக்கள்மார் ஆலய விசேட பூசைகளைச் செய்துவர, நித்திய பூசைகளை ஆறுமுகம் சின்னத்தம்பியும் அவரது மகனும் செய்து வந்தனர். இவர்களைத் தொடர்ந்து



சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களும் இராமலிங்க சர்மாவும் பூசை வழிபாடுகளை ஆற்றினர். இவ் ஆலயத்தில் சைவ புண்ணிய காலங்களில் சிறப்பாக விழா எடுக்கப்பட்டு வருவது வழக்கமாகும்.

சிவஸ்ரீ இராமலிங்கக் குருக்களின் பின் அவரது பெறாமக்கள் கோவில் பூசைகளைச் செய்து வந்தனர். தொடர்ந்து கீரிமலை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ ந.இராமச்சந்திரக் குருக்கள் தனது சிறுவயது முதலே இவ் ஆலயத்தின் பூசைகளைப் பொறுப்பேற்று சிறப்பாகச் செய்து வந்தார். இவரின் பின் இவரின் மகன் சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக் குருக்கள் பூசையைப் பொறுப் பேற்று இன்றுவரை செய்து வரு கிறார்.

**கும்பாபிஷேகம்**

முதன்முதலில் ஆலயம் கர்ப்பக்கிரகத்துடன் நான்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டு 1924 ஆம் ஆண்டு ஆவணிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஞானவைரவப் பெருமான் மாப்பிள்ளைக் குருக்களுக்கு கனவில் தோன்றி கும்பாபிஷேகத்தை நடத்தும்படி கூறியதான வரலாறும் இங்கு உண்டு. இக் கும்பாபிஷேகத்தை ஊர் மக்களின் உதவியுடன் மு.வயித்தியலிங்கம் அவர்கள் பொருள் சேர்த்து நடத்த உதவினார்.

இரண்டாவது கும்பாபிஷேகம் 1954 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ரோகினி நட்சத்திரத்தில் உரும்பிராய் பொன்னையாக் குருக்கள் நடத்தி வைத்தார். இதற்கு ஊர்மக்களின் உதவியுடன் சி.சிதம்பரப்பிள்ளை பொருள் சேகரித்து உதவி புரிந்தார்.

மூன்றாவது கும்பாபிஷேகம் ஆலய பரிபாலன சபையினரின் முயற்சியினால் 1981 ஆம் ஆண்டு ஆனி மாதம் அனுஷ நட்சத்திரத்தில் நடத்தப்பட்டது. இதன்போது ஆலயம் புனருத்தாரணம் செய்து வர்ணவேலைப்பாடுகள் அமைந்த விமானம் அமைத்ததுடன் உட்பிரகாரத்தில் முருகன் ஆலயமும், வசந்த மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரங்கள், ஞமலி பலிபீடம் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன.

ஊர்மக்களும் மலேசியா வாழ் ஊர்மக்களும் இதற்குப் பெருமளவு பொருளுதவி வழங்கி இருந்தனர். இக்கும்பாபிஷேகம் ஆனது கீரிமலை ஆதீனகர்த்தா பிரதிட்டா குரு சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், தலைமையில் நிறைவேறியது.

நான்காவது கும்பாபிஷேகத்தை 2001 ஆம் ஆண்டு ஆனிமாதம் அனுஷ நட்சத்திரத்தில் சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்கள் நடத்தி வைத்தார். ஐந்தாவது கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி நடக்க இறையருள் கைகூடியுள்ளது. இக்கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார்.


இவ் ஆலயத்தின் தலவிருட்சமாக கொன்றை மரம் அமைந்துள்ளது. இம்மரம் ஆலயத்தின் ஆரம்ப காலம் முதல் இன்று வரை இளமை மாறாது காட்சி தருவதும் அற்புதமாகும்.

*-பிரகஸ்பதி-*








யாழ். மாவட்டத்தின் பகுதிகளிலும் பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த முதலாம் திகதி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை கடைப்பிடிக்கப்பட்டது. இவ்வாரத்தில் சிரம தானப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு வேலைகள் பல இடங்களிலும் இடம்பெற்றதைப் படங்களில் காண லாம்.

(படங்கள்: எஸ். ஆர். கரன், என்.குமார், எஸ். செல்வதீபன், கரணவாய் செய்தியாளர், அரியாலை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலேஸ்சர்மாவின் மாநாட்டுமுடிவு
# ஆசிய அராஜகத்திற்கு வழிவகுக்கும்
## மங்கள சமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாத இலங்கை அரசாங்கத்துக்கு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்த வழங்கியுள்ள அனுமதி ஆசியாவில் அராஜக ஆட்சிக்கு வழிவகுக்கும் என எச்சரிக்கப் பட்டுள்ளது எனஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.



பொது நலவாயத்தின் விழுமியங்களை இலங்கை அரசாங்கம் மதிக்கவில்லை. அதனை பொருட்படுத்தாமல் செயற்பட்டுவருகிறது என்று மங்கள சமரவீர, பொது நலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ்சர்மாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நாளுக்கு நாள், மனித உரிமை நிலவரங்களில் முன்னேற்றம் ஏற்பட வில்லை.

நீதித்துறையின் இடமாற்றங்கள் மற்றும் பதவிகள் யாவும் அலரிமாளிகையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளி வாசல்கள் பல பௌத்த மதக் குருக்களால் தாக்கப்பட்டுள்ளன. இதற்கு அரசாங்கத்தின் ஆதரவு காட்டப்படுகிறது.

இந் நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்த வேண்டும் என்று கமலேஸ் சர்மாவிடம், மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார். (செ-2)

# தமிழக மீனவர்கள் 21 பேர் கைது!


இந்திய-இலங்கை மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என பஷில் ராஜபக்ஷ தெரிவித்து இரண்டு தினங்களுக்குள், மீண்டும் தமிழக மீனவர்கள் 21 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.


ஒருமாத காலமாக இலங்கை சிறையில் இருந்து வந்த 49 மீனவர்கள் கடந்த 3 நாட்களுக்கு முன்தான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு ஊர் திரும்பினர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் இருந்து ஆயிரத்தற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு கச்சதீவு அருகே மீன் பிடித்து கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், இராமேஸ்வரம் மீனவர்களை அப்பகுதியில் இருந்து விரட்டியடித்தனர்.

அதன்பின் அப்பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த 5 விசைப்படகுகளையும் அதில் இருந்த 21 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

சிறைபிடித்து செல்லப்பட்ட மீனவர்கள் அனைவரும் மன்னார் கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-2)





பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் யாழ்.கல்வி வலய பாடசாலை களில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வழிகாட்டல் கருத்தரங்கை யாழ். கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் பி.அருணகிரிநாதன் ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸை பழைய இரும்புக்கு விற்க நேரிடும்
## மௌபிம மக்கள் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் துருப்பிடித்து பஞ்சிகாவத்தையில் பழைய இரும்புக்குவிற்பனை செய்ய நேரிடும் என மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ், நிறுவனம் நடத்திச் செல்ல முடியாது ஒரு சந்தர்ப்பத்தில், துருப்பிடித்து, இரும்புகளாக மாறி போகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அரசாங்கம் அவற்றை பஞ்சிகாவத்தையில் பழைய இரும்புக்கு அவற்றை விற்பனை செய்ய நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காலி உணவட்டுன பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மிஹின் லங்கா விமான சேவை முழு இலங்கைக்கும் சாபக் கேடானது. அது கோடிக்கணக்கான பணத்தை விழுங்கி, நாட்டுக்கு பெரும் சுமையாக உள்ளது. அதேபோல், ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தை அரசாங்கம் பொறுபேற்று நடத்தி செல்கிறது. அதில் பணியாற்றுபவர்களுக்கு பெரும் தொகை பணம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

இதனால் அந்த நிறுவனமும் பெரும் நட்டத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (செ-2)

சவுதி அரேபியாவில் கொடுமை;

# தாக்கப்பட்ட பணிப்பெண்ணை பார்வையிட்டார் ரஞ்சன் எம்.பி.

சவுதிஅரேபியாவில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்த போது வீட்டு உரிமையாளர்களால் தடிகளால் கடுமையாக தாக்கப்பட்டு கொடுமை செய்யப்பட்ட நிலையில் நாடு திரும்பி நீர்கொழும்பு மாவட்ட வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பணிப் பெண்ணை, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வைத்தியசாலைக்குசென்றுபார்வையிட்டுள்ளார்.

வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சந்ராணி இந்துலதா என்ற பெண்ணேநீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். இவர் கடந்த ஒன்றரை வருட காலம் சவுதிஅரேபியாவில் பணிப் பெண்ணாக பணியாற்றியுள்ளார். இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க,

சவுதிஅரேபியாவில் எந்த வித தொழில் சட்டங்களும் பின்பற்றப்படுவதில்லை என்பதால் எமது நாட்டு பெண்களை அங்குபணிப்பெண்ணாகஅனுப்ப வேண்டாம் என்று அரசாங்கத்திடம் பல தடைவைகள் எடுத்துக் கூறியுள்ளோம்.

ஆயினும்அரசாங்கம்எமது பெண்கள்பணிப்பெண்களாக அங்கு செல்வதை நிறுத்த வில்லை. நாம் ஏன் அவ்வாறு கூறினோம் என்பதை இந்தப் பெண் தாக்கப்பட்டுள்ள சம்பவம் மூலமாக நேரடியாக பார்க் கக் கூடிய தாகவுள்ளது.

எமது நாட்டை விட பின் தங் கிய பொருளாதார நிலையில் உள்ளநாடுகள் கூட சவுதி அரே பியாவிற்கு பெண் களை அனுப்புவதை நிறுத்தியுள்ளது. எமது ஆட்சியாளர்கள் அவ்வாறு செய்வதில்லை என்றார்.

(செ-2)

### சீனாவிடம் இருந்து இலங்கைக்கு மீண்டும் பெரிய கடன் சுமை

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒரு பாரிய கடன் தொகையை பெற்றுக் கொள்ளவுள்ளது.

உள்ளூர் பாதைகளை திருத்தும் நோக்கில் 52 பில்லியன் ரூபாய்களை இலங்கை அரசாங்கம் சீனாவிடம் இருந்து பெற்றுக்கொள்ளவுள்ளது. இதனை சீன அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது.

சீனாவிடம் இருந்து அண்மையில் இலங்கை 2.2 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

(செ-2)

# வடக்கு தேர்தலில் அரசு தோல்வியடையும்
## ஐ.தே.க. ஆரூடம்

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலில் அரசு தோல்வியை எதிர்பார்ப்பதாலேயே மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலை நடத்தி சர்வதேசத்தின் கவனத்தை திசை திருப்ப முற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

கம்பளை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி மத்திய குழுக் கூட்டம் கம்பளை நகர சபை மண்டபத்தில்கம்பளை நகர சபைத் தலைவர் சரத் காமினி ஹெட்டியாராச்சி தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவது நிச்சயம். தற்போது மின் பட்டியல் மக்களின் கைகளுக்குக் கிடைத்துள்ளமையால் மின்கட்டண அதிகரிப்பின் விளைவுகளை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி கிராமங்களுக்கு சென்று மக்களுக்கு உண்மையை விளக்குவதற்கான வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது. அரசு சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக வட மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றது. ஆனால் இத் தேர்தலில் அரசு தோல்வியடைவது நிச்சயம் என்றார். (செ-11)

# ஐ.தே.கட்சி யாப்பு நகல் சமசமாஜக் கட்சியிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி யால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய உத்தேச அரசியல் யாப்பின் நகல் ஒன்று சமசமாஜக் கட்சி சார்பில் அதன் மூத்த உறுப்பினர் அமைச்சர் திஸ்ஸ விதாரணவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள லங்கா சமசமாஜக் கட்சி அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் காலை இந்த அரசியல் யாப்பு நகல் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பா.உ.ரவி கருணாநாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது 13 ஆவது திருத்தச் சட்ட பிரச்சினை குறித்தும் அமைச்சர் திஸ்ஸ விதாரணவுடன் ஐ.தே.க. பிரதிநிதிகள் கலந்துரையாடினர். (செ-2)

# மத்திய மாகாண சபைத் தேர்தல் மனோ,அசாத்சாலி போட்டி

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி ஆகியோர் மத்திய மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரும் மத்திய மாகாணசபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் குறித்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அசாத் சாலியை தொடர்பு கொண்டு வினவியபோது,

இந்த செய்தியை உறுதிப் படுத்தினார். எனினும் மத்திய மாகாணத்தில் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இதவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான இறுதி முடிவு நாளை திங்கட்கிழமை ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்களுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையினை அடுத்து தீர்மானிக்கப்படும் என அசாத் சாலி மேலும் தெரிவித்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய மாகாண சபை தேர்தலில் மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமர் தி.மு.ஜயரட்னவின் மகனான அனுராத ஜயரட்னவும் மத்திய மாகாணசபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



ஆன்மீகம் 55

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...அந்தகாலத்தில் மீரா, கிருஷ்ணனை கபதலித்தது போல் ஆண்டாள், ஆராவமுதனை அணைக் கத்துடித்ததுபோல், ஸ்ரீரங்கநாதன் மீது பக்தி கொண்டு அவனை தன் கணவனாகவே போற்றி வணங்கிய டில்லி இஸ்லாமிய மாமன்னனின் புதல்வி ஒருத்தியை அந்தரங்கநாதனே போய், உளமார ஏற்றுக் கொண்டு அவரை பற்றிகொண்டவர், முற்றும் மனைவியாக துலுக்க நாச்சியார் என்று நாமதேயமிட்டு- கோயிலில் அவருக்கு ஒரு சன்னதி தந்து இன்றளவும் வணங்கி வருபவர்கள் இந்துக்கள் மட்டுமே. அதேமாதிரி கண்ணனை பாடிய கபீர்தாஸ், சித்த புருஷனாக வாழ்ந்து மறைந்த- சீரடி சாயிபாபா போன்றோர்களும், முருகனை சிந்து பாடிய குணங்குடிமஸ்தான் போன்றவர்களில் இஸ்லாமியர்களாக பிறந்து இந்து மதத்தை போற்றினார்கள்.

இந்து மதத்தை சேர்ந்த மகான்களின் சமாதிகளும், இஸ்லாமிய மகான்களின் சமாதிகளும், மலைகளின் அருகே இருக்கின்றன. இரு மதத்தினரும் பேதமில்லாமல் அந்த சமாதிகளை வழிபடுகின்றனர்.

சபரிமலையில் ஐய்யப்பன் சன்னதிக்கு அருகில் அவருடன் வாழ்ந்த வாபர் சன்னதியும் உள்ளது! இன்றும் பக்தர்கள் அந்த சன்னதிக்கு சென்று ஆராதிக்கின்றனர். காலம் காலமாக பேதமில்லாமல் பாசத்தோடு நேசமாக இருந்த இரு மதத்தினரும்- இன்று துவேசம் ஒன்றையே கைக்கொண்டு- எதிர் எதிரே நிற்கின்றனர்.

இனி இவர்களை தெய்வம்தான் நல்வழிப்படுத்த முடியும். இதெல்லாம் ஏன்? காந்தியை நாம் மறந்ததுதான் காரணம்.

இந்த ஆச்சிரமத்திற்கு 1981 ஆம் ஆண்டு என்னை சென்னையிலிருந்து அழைத்து வந்து சித்தரிடம் ஒப்படைத்து நீ இங்கே இரு என்று கூறியவர் நம் தேசபிதா மகாத்மா காந்தி! அதனால் தான் என் உறவு. நட்பு பாசம் எல்லாம் துறந்து சித்தர் காலடிகளில் என்னை சமர்பித்துக் கொண்டிருக்கின்றேன் என்று ஒரு நீண்ட சொற்பொழிவை முடித்தேன்! இதைக் கேட்டு அசையாமல் இருந்த அந்த மனிதர் தயங்கியவாறே என்ன மகாத்மாகாந்தி உங்களை இங்கே ஒப்படைத்தாரா? உங்களைப் பார்த்தால் அவர் இறந்ததற்கு பின்னால்தான் பிறந்திருக்க வேண்டும். ஆனால் இப்படிச் சொல்கிறீர்களே? என்று என்னை மடக்கிப் பார்த்தார். ஐயா! காந்தி என்ற சொல்லுக்கு ஜோதி என்று பொருள். ஜோதி என்றால் ஒளி என்று பொருள். ஒளியை அணைக்கத் தான் முடியும். அதுவும் தற்காலிகமாகத்தான். சூரியன் அஸ்த மித்தால்- சூரியன் கதை முடிந்துவிட்டதா? அது பூமியின் வேறு பகுதியில் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.



மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் அடர்ந்த காட்டுக்குள் மூலிகை பறிக்க போதல்

சூரியன் நிலையான ஜோதி! பூமி தன்னை தானே சுற்றிக் கொள்வதாலும் பூமி உருண்டையாக இருப்பதாலும் சூரியனை நோக்கி இருக்கும் பகுதிகள் மட்டும் சூரிய ஒளியை பெறுகின்றது. அப்படி சூரிய ஒளியை பெற்ற பகுதி சூரியனை விட்டுவிலக விலக அதுவரை இருளான பகுதிக்கு சூரிய ஒளி கிடைக்கத் தொடங்குகிறது! அதனால்தான் சூரியனுக்கு நிரந்தரமான அஸ்தமனம் கிடையாது.

இதைப்போல்தான் ஜோதியும்! அதை அணைப்பதாக நினைப்பது சூரியன் அஸ்தமித்ததாக நினைப்பற்கு சமமாகும். ஜோதி எங்கிருந்து வருகிறது. பிறகு அனைத்தால் எங்கே போகிறது. இதைத் தெரிந்து கொண்டால் பிறப்பின் இரகசியத் தைத் தெரிந்து கொள்ளலாம். உடல் அழிகிறது.

ஆனால் ஆத்மா அழிவதில்லை! இருளைப்போக்க விளக்கை ஏற்றுகிறோம். அது தற்போது தேவையில்லை என்னும் போது அணைத்து விடுகிறோம்.

தொடரும்

# ருவாண்டா இனப்படுகொலைகள்- பகுதி 3

லூயிஸ்ருத்தகனிரா தனது குடும்பத்திற்கு என்ன நடந்தது என்பதற்காகவிசாரணை மன்றத்தில் அறிந்து கொண்டான். ஆனாலும் தனது இதயத்தில் இருந்த வலியைப் பொறுத்துக் கொண்டு அதற்குச் சமாந்தரமாக இன நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மனவிருப்புடனும் வரவேற்கவும் செய்தான். லூயின் தனது மனைவி மரிகிளேயரைகிபூஜே இனி கத்தோலிக்க தேவாலய முன்றலில் அவயங்கள் துண்டிக்கப்பட்டு இரத்தம் சிந்தி மரணிக்கும்படி விடப்பட்ட நிலையிலேயே கடைசியாகக் கண்டான். அவனது ஆறுக்கும் பன்னிரண்டுக்கும் இடைப்பட்ட வயதுடைய நான்கு குழந்தைகளை இனப்படு கொலையின் பின்பு அவன் காணவே இல்லை. அவனும் கூட தேவாலய இருக்கையின்கீழ் அடுக்கப்பட்டிருந்த பிணங்களுக்கிடையில் தானும் ஒரு பிணம் போல விழுந்து கிடந்ததன் மூலமே உயிர் பிழைத்திருந்தான். தேவாலயத்திலும் அதன் சுற்றிலும் அவனது உறவினர்கள் எண்பத்தாறு பேர்வரையில் கொல்லப்பட்டிருந்தனர். இன்றைக்கு புதிதாகத் திறக்கப்பட்டுள்ள சந்தையில் துணிக்கடை ஒன்றை நடாத்திவரும் லூயிஸ் மீளவும் திருமணம் செய்துள்ளான்

அரசாங்கம் இன நல்லிணக்கத்தையும் பொது மன்னிப்பையும் முதன்மைப்படுத்திச்செயற்பட்டபோது லூயிஸ்மிகுந்த அவநம்பிக்கையுடன் தான் இருந்தான் 2004 ஆம் ஆண்டு அரசாங்க அதிகாரிகள் எங்களைக் கடந்த காலத்தை மறப்பதற்கு கடுமையாக முயற்சிக்கும் படி கூறினர். எங்களது இதயத்து வலிகளைப் புறந்தள்ளிவிட்டு இன நல்லிணக்கத்தை முதன்மைப்படுத்தும் படி அரசாங்கம் எங்களைக் கேட்டது. எங்கள் அன்புக்குரியவர்களையும் இதயத்துள் இருந்தவர்களையும் கொலை செய்து அவர்கள் எங்கு எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பதைக்கூடத் தெரிவிக்காதவர்களை மன்னித்து கடந்தகாலத்தை மறப்பது என்பது மிகக் கடினமாக இருக்கிறது என்று லூயிஸ் கூறினான்.

கககா விசாரணை நடக்கத் தொடங்கிய போது இந்த விசாரணைகளில் லூயிஸ் தனது மனைவியை நிர்வாணமாக்கி அவயங்களை வெட்டிக் கொலை செய்தது யார் என்பதை அறிந்துகொண்டான். தனது மனைவியைக் கொலை செய்தவனை அறிந்து கொண்டபோதுதான் அதிர்ச்சியடைந்து போனதாக லூயிஸ் கூறினான். தனது பிள்ளைகளைக் கொன்றவனையும் அந்த விசாரணையில் லூயிஸ் அறிந்துகொண்டான்.



தனது மனைவியையும் பிள்ளைகளையும் கொன்றவர்கள் இதயத்தில் இருந்து வந்த பாவமன்னிப்பைத்தான் கோரினார்கள். அவர்களை யாரும் வற்புறுத்தவில்லை. நான் அவர்களது பாவமன்னிப்புக் கோரலை ஏற்றுக் கொண்டேன். இது மிகுந்த மனவேதனையைத் தருவதுதான். ஆனால், தேவையானது. இந்தக் கொலைக்காரர்கள் இப்போதும் எனது அயலவர்களாகவே வசிக்கிறார்கள் என்றும் லூயிஸ் கூறினான்.

கககா விசாரணைகளில் சகாரியா நியோருரேமாவும் தனது குற்றங்களை அந்நீதிமன்றத்தின் முன் ஒத்துக் கொண்டான். தனது துற்சிஸ் இன அயலவர்களை அவனது பாடசாலைக் காலத்து ஆசிரியர் ஒருவர் உள்ளடங்கலாக கொலை செய்ததை அவன் ஒத்துக்கொண்டான். கிட்டத்தட்ட பத்து வருடங்கள் சிறையில் இருந்த சகாரியா அவனால் கொல்லப்பட்ட ஆசிரியரின் மகனான ஒடிலே கபஜிதாவிடமே முதலில் தனிப்பட்ட முறையில் தனது செயலுக்கான பாவமன்னிப்பைக்கோரியிருந்தார். தான் அதனைப்பற்றிச் சிலகாலம் சிந்திக்க வேண்டும் எனக்கூறிய ஒடிலேகபஜிதா பிற்பாடுகள் சகாரியாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால் அவன் முதலில் கககா நீதிமன்றத்தின் முன் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள் வேண்டும் எனவும் கூறியிருந்தான்.

இதன்படிக்கு சகாரியாவின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவன் 2006 ஆம் ஆண்டு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டான். சகாரியா தற்போது கட்டுமானப்பகுதி ஒன்றில் வேலை செய்துவருகிறான்.

ஒடிலேகபஜிதா இனப்படுகொலையில் இருந்துதப்பி உயிர் வாழ்பவர்களை ஒருங்கிணைத்திருக்கும் ஒரு அமைப்பின் தலைவராக இருக்கிறான். ஆரம்பத்தில் இந்த அமைப்பு கககா நீதிமன்ற முறைமைக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தது.

கககா நீதிமன்றம் குற்றவாளிகளை மென்மையாக நடத்துவதாகவும் குறைந்தபட்சத் தண்டனைகளை வழங்குவதாகவும் அவ்வமைப்பு குற்றம் சாட்டியது. ஆனால் கககா விசாரணைகள் மூலம் மரணித்தவர்கள் பற்றியும் அவர்கள் எங்கு எரிக்கப்பட்டார்கள் அல்லது புதைக்கப்பட்டார்கள் என்பது பற்றியும் தகவல்கள் வெளிவரத் தொடங்கியபோது கககாவின் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டு பிரயோசனம் உணரப்பட்டது.

மண்மூடிப் புற்கள் வளர்ந்திருந்த மனிதப் புதைகுழிகள் பற்றியும் முழுக் குடும்பங்களுமே கொல்லப்பட்டு வீசப்பட்ட மலையோரச் சரிவுகளில் இருந்த மலசலக் குழிகள் பற்றியும் தகவல்கள் அந்த கககா விசாரணைகளில் தெரியவந்தன.

தேவஅபிரா

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

509

## நினைத்தது ஒன்று, நடந்தது வேறு!



நடு இரவு நேரத்தில் வீட்டிற்குத் திரும்பிய அனந்தசாஸ்திரி தன் வீட்டுக் கதவைத் தட்டினார். அவருடைய மனைவி அருந்ததி தூக்கம் கலைந்து சோம்பல் முறித்துக் கொண்டே வந்து, கதவைத் திறந்து விட்டாள். "நாளைக்குத் திரும்பி வருவேன் என்று சொல்லி விட்டுப்போன நீங்கள் இவ்வாறு நடு இரவில் வந்து ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்" என்று சிணுங்கினாள். போன காரியம் சீக்கிரம் முடிந்து விட்டது. அதனால் திரும்பி விட்டேன் என்று சொல்லிவிட்டு, கை, கால்களைக் கழுவச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து வந்த அருந்ததி, "நமது வீட்டுப் பூனை ஜானகி ராமனின் வீட்டிற்குள் நுழைந்து பாலைக் குடித்து விட்டதாம்! அவர் மனைவி என்னுடன் சண்டை போட்

**அம்புலிமாமா கதைகள்**

டாள். அவள் புருஷனை விட்டு உங்கள் மண்டையை உடைக்கச் செய்வாளாம்" என்று வத்தி வைத்தாள்.

"சரி சரி! அதை விடு, எனக்குப் பசி பிராணன் போகிறது! உடனே சாப்பாடு போடு!" என்று சாஸ்திரி உத்தரவு இட்டார். "சாப்பாடா? நீங்கள் நாளைக்குத்தான் திரும்பி வருவீர்கள் என்று நினைத்துக் கொண்டு நான் சாப்பாடும் மீதம் வைக்கவில்லையே! சாதம் வடிக்கலாம் என்றாள் குழம்பு கூட இல்லை" என்று கூறிய அருந்ததி தொடர்ந்து, "நான் சாதம் வடிக்கிறேன். நீங்கள் தோட்டத்திற்குச் சென்று கத்தரிக்காய் பறித்து வாருங்கள். நான் பொறியல் செய்து போடுகிறேன்!" என்று சமையலறைக்குள் சென்றாள்.

சலித்துக் கொண்டே சாஸ்திரி தனது வீட்டிற்குப் பின்புறம் இருந்த தனது தோட்டத்தில் கத்தரிக்காய் பறிக்க சென்றார். தோட்டத்து வேலிக்கு அப்பால் ஜானகிராமனின் வீடு இருந்தது. தோட்டத்தில் ஒரே இருட்டாக இருந்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டே கத்தரிக்காய் பறிக்கச் சென்ற போது, சாஸ்திரி தரையில் இருந்த எதையோ மிதித்துவிட்டார். அவர் காலில் மிதிபட்ட பொருள் "மெத்"தென்று இருந்தது.

என்னவென்று பார்த்தால் அது பூனைக்குட்டி! குனிந்து பார்த்தால் அந்தப் பூனைக்குட்டி செத்துப் போயிருந்தது. பூனைக்குட்டியைக் கொன்றால் மகாபாவம்! விடயம் தெரிந்தால் அருந்ததி ஊரையே கூட்டி விடுவாளே என்று பயந்து போன சாஸ்திரி என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அருந்ததிக்கு விடயம் தெரியும் முனனர் அதை சத்தமின்றி புதைத்து விட முடிவு செய்தார். உடனே மடமட வென்று மண்வெட்டியால் ஒரு குழி தோண்டி, பூனைக்குட்டியை அதனுள் புதைத்தார். பிறகு ஏதோ சில கத்தரிக் காய்களைப் பறித்து வீட்டிற்குள்



நுழைந்தார்.

"கத்தரிக்காய் பறிக்க ஏன் இத்தனை நேரம்?" என்று அருந்ததி கேட்க, அவளுக்கு ஏதோ சமாதானம் கூறி நிலைமையை சமாளித்த சாஸ்திரி, சமையல் ஆகும் வரை ஓய்வெடுத்தார். பின்னர் உணவருந்தி உறங்கச் சென்றர்.

பின்பக்கத்து வீட்டு ஜானகிராமனின் மனைவி சாஸ்திரி நடு இரவில் தோட்டத்தில் குழி தோண்டி வெள்ளையாக ஏதோ சிறிய மூட்டையை புதைப்பதைப் பார்த்ததும், அவளுக்கு ஒரே பரபரப்பு! உடனே தன் கணவன் ஜானகிராமனை உலுக்கி எழுப்பினாள்! ராமன் கடுகடுப்புடன் எழுந்தார். "தூங்க விடாமல் ஏன் உயிரை எடுக்கிறாய்?" என்று சிடுசிடுத்தவரிடம், "சாஸ்திரி தன் தோட்டத்தில் குழி தோண்டி தங்க நகைகள் கொண்ட ஒரு மூட்டையை அதில் புதைத்ததை என் இரு கண்களால் பார்த்தேன். நீங்கள் உடனே சென்று அந்த நகைகளைக் குழியிலிருந்து எடுத்து வாருங்கள்" என்று கூறி விரட்டினாள்.

தங்க நகை என்றதும் வாயைப் பிளந்த ராமன் உடனே ஒரு காலிப் பெட்டியுடனும், மண்வெட்டியுடனும் சென்று வேலியைத் தாண்டிக் குதித்து சாஸ்திரியின் தோட்டத்தை அடைந்தார்.


அப்போது தான் குழி தோண்டப் பட்டுபின் மண்ணால் மூடப்பட்டு இருந்த இடத்தை கண்டு பிடிப்பது அவருக்கு எளிதாக இருந்தது. மண்வெட்டியால் அந்த இடத்தை தோண்ட முற்பட்டவரின் கரத்தை யாரோ ஒருவர் பிடித்து இழுத்தார். திரும்பிப் பார்த்தால் கறுத்த மேனியுடனும், கையில் கத்தியுடனும் ஒரு முரடன் நின்று கொண்டிருந்தான்.

"குழி தோண்டி பணப்பெட்டியைப் புதைக்கும் சிரமம் உனக்கு ஏன்?" பெட்டியை என்னிடம் கொடுத்து விடு!" என்று அந்த ஆள் முரட்டுக் குரலில் கூறியதும் அவன் ஒரு திருடன் என்று ராமனுக்குப் புரிந்தது. தன்னை அந்த வீட்டுச் சொந்தக்காரன் என்றும், தான் பணப்பெட்டியைப்புதைத்து வைக்கபபோகிறதாகவும் அவன் தன்னைப் பற்றித் தவறாக எண்ணியதை ராமன் புரிந்து கொண்டார்.

இந்தப் பெட்டியின் அளவிற்கு ஒரு குழி தோண்டச் சொல்லி என் மனைவி சொல்லியிருக்கிறாள். குழி தோண்டிய பிறகு, அவள் தன் நகைகளை எனக்குத் தருவாள். அதை இந்தப் பெட்டியில் போட்டுப் புதைப்பதாக இருந்தேன். நீபோய் கதவைத் தட்டு! அவள் தரும் நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிடு!" என்றார் ராமன்.

"சரிதான்! நான் உன் மனைவியை அழைத்தால், என் குரல் மீது சந்தேகம் ஏற்பட்டு அவள் கதவையே திறக்கமாட்டாள். அதனால் நீயே அவளை அழைத்து, நகைகளை வாங்கிக் கொடு!" என்றான் அந்த கெட்டிக்காரத் திருடன். சொன்னதோடல்லாமல், கத்தியை ராமன் முதுகில் அழுத்தி அவரைத் தள்ளிக் கொண்டு சென்று கதவருகில் நிறுத்தினான்.

வேறு வழியின்றி ராமன் சாஸ்திரியின் மனைவிக்குக் குரல் கொடுத்தான்.அந்தக் குரலை கேட்டு சாஸ்திரியின் மனைவி அருந்ததி விழித்துக் கொள்ளவில்லை. ஆனால், சாஸ்திரி விழித்துக் கொண்டார்.



ஏற்கனவே, தன் மண்டையை உடைப்பதாக சவால் விட்டிருந்த ராமன் மீதுள்ள கோபம் இப்போது நடு இரவில் தன் மனைவியைப் பெயர் சொல்லி அழைத்ததும் கட்டுக் கடங்காமல்பொங்கியது. ராமனின் மண்டையை பிளந்து விட எண்ணி ஒருதடியை எடுத்துக் கொண்டு சாஸ்திரி கதவைத் திறந்தார்.

நகைகளை எடுத்து வருகிறாள் என்று எண்ணிய திருடன், நகைகளைப் பிடுங்குவதற்காக, ராமனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தான் கதவிற்கு முன்னால் நின்றான். கதவைத் திறந்த சாஸ்திரி எதிரில் நிற்பது ராமன் என்று எண்ணி, தடியால் ஓங்கித் தலையில் போட்டார் ஒரு போடு! திருடன் மயக்கமாகித் தரையில் விழுந்தான். கையில் தடியுடன் ஆவேசமாக நின்று கொண்டிருந்த சாஸ்திரியைக் கண்டு ராமன் நடுங்கிப்போனார். அவருடன் சமாதானம் செய்து கொள்வதே புத்திசாலித்தனம் என்று கருதி "ஆகா! பிரமாதம் சாஸ்திரி! சபாஷ்! ஒரு திருடனைச் சிறிதும் கூட பயப்படாமல் அடித்து வீழ்த்திவிட்டாயே!" என்று ராமன் பிரமாதமாக சமாளித்தார்.

"அயோக்கியப் பயலே! உன் நாடகமெல்லாம் எனக்குத் தெரியும்! திருடனை என் வீட்டிற்குத் திருட அழைத்து வந்தவனே நீ தான்! உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று தடியை ஓங்க, வெலவெலத்துப் போன ராமன் சாஸ்திரியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டதுடன், நடந்த உண்மையை ஒப்புக் கொண்டார். பிறகு "சாஸ்திரி!" வீணாக உன்னுடன் சண்டைபோட்டுக் காலம் கழித்தேன்! இனி பழைய விரோதத்தை மறந்து இன்று முதல் நாமிருவரும் நண்பர்கள் ஆவோம்!" என்றார். சமாதானம் அடைந்த சாஸ்திரியும்,ராமனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்.

சாஸ்திரியும், ஜானகி ராமனும் அன்று முதல் நண்பர்களாயினர். நடந்த விடயத்தை அறிந்த சாஸ்திரியின் மனைவி, "ஐயோ! பாவம் உங்கள் கால்பட்டு பூனைக் குட்டி இறந்து போனதாகத் தப்புக் கணக்குப் போட்டிருக்கிறீர்கள். அது இரண்டு நாளாகவே உடல் சரி இல்லாமல் அன்று சாயங் காலமே இறந்துவிட்டது.

மறு நாள் காலை நீங்கள் வீடு திரும்பிய பிறகு அதை புதைக்கச் சொல்லலாம் என்றிருந்தேன். அதற்குள் அவசரப் பட்டு இரவோடு இரவாக அதைப் புதைத்தீர்கள். ஆனால், அதனால் ஏற்பட்ட பலனைப் பார்த்தீர்களா? உங்களுடைய பகை நட்பாக மாறியது" என்றாள்.



சாஸ்திரியின் முகத்தில் அசடு வழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கண்காணிக்கப்படவுள்ளனர்

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தொடர்பில் கண்காணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொதுநல்வாய நாடுகளின் தலைவர்கள் அமர்வின் போது செய்தி சேகரிப்பில் ஈடுபடும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தொடர்பில் கண்காணிக்கப்படவுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் குறித்த செய்திகளை சேகரிப்பதற்காக 700 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். உள்நாட்டு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வு பற்றிய செய்தி சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும். ஆனால் சில ஊடகவியலாளர்கள் கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறானவர்களினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து விஜயம் செய்யும் சகல ஊடகவியலாளர்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்த பின்னரே விசா வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றபோதிலும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படும் என கருதப்பட்டால் இறுதி நேரத்தில் கூட வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் விசாக்கள் இரத்துச் செய்யப்படக் கூடுமென அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (செ-2)

# மாடுகள் வெட்டப்படுவது விரைவில் தடுக்கப்படும்

## சிஹல ராவய அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இன்னும் இரண்டு மாதங்களில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் என சிஹல ராவய அமைப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த உறுதிமொழியை வழங்கியதாகக் குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மாடுகள் இறைச்சிக்காக கொல்லப்படுவதனை தடுக்குமாறு கோரி கதிர்காமத்திலிருந்து கொழும்பிற்கு சிஹல ராவய அமைப்பினர் பாதயாத்திரை செய்து ஜனாதிபதியை சந்தித்திருந்தனர்.

இதன்போது மாடுகள் கொல்லப்படுவதனை தடுக்குமாறு கோரி சிஹல ராவய அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் ஒப்படைத்துள்ளது.

மாட்டிறைச்சியை உணவாக உட்கொள்ளும் தரப்பினருக்கு தேவையான இறைச்சியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொடுக்குமாறு குறித்த அமைப்பு கோரியுள்ளது.

எனினும் இலங்கையில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது முற்றுமுழுதாக நிறுத்தப்பட வேண்டுமென அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இந்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதாகவும் விரைவில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதனை தடுக்க சட்டம் கொண்டு வரப்படும் எனவும் சிஹல ராவய அமைப்பு அறிவித்துள்ளது. (செ-2)

# வன்செயலினால் பாதிக்கப்பட்டோருக்கான நட்ட ஈடு வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்ட 591 பயனாளிகளுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுகளை 343 பயனாளிகளும் சொத்தழிவு நட்டஈட்டு கொடுப்பனவை 189 பயனாளிகளும் அரசு ஊழியர் நட்ட ஈட்டுக் கொடுப்பனவை 49 பயனாளிகளும் சேதமடைந்த ஆலயங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவை 10 ஆலயங்களும் பெற்றுக் கொள்ளவுள்ளன.

மேலும் இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குரிய கடிதங்கள்யாவும் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நட்டஈட்டுக் கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அனைவரும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாக (இரவு உணவு, குடிதண்ணீர், பயண் ஒழுங்குடன்) யாழ்.மாவட்டச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவர்களுக்கான உணவு, போக்குவரத்து வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் என்பன புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக மேலதிகமாக விபரங்கள் தேவைப்படுமிடத்து தமது பிரிவிற்குரிய கிராம சேவையாளரிடம் அல்லது பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (செ)

# புதிய அரச தலைவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த பாராட்டு

மங்கோலியா, ஐஸ்லாந்து, கட்டார் ஆகிய நாடுகளில் அண்மையில் அதிகாரத்துக்கு வந்த புதிய அரச தலைவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதனது பாராட்டுசெய்திகளை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி சக்ஹியாஜின் எல்பெக்டோரி இரண்டாவது முறையாகவும் மங்கோலியா ஜனாதிபதியாக எதிர்வரும் நான்கு ஆண்டு காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

ஆரம்ப காலம் முதல் உங்கள் அரசியல் பணிகளில் மங்கோலியாகவும் அங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஆற்றிய மாபெரும் சேவைகள் காரணமாக அம்மக்கள் உங்கள் மீது வைத்த நம்பிக்கை நீங்கள் மீண்டும் பதவியில் அமர்வதற்கு தேர்தலில் உங்களுக்கு வெற்றி ஈட்டித் தந்துள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேபோன்று ஐஸ்லாந்து குடியரசின் பிரதம அமைச்சர் சிக் மண்டூர் டேவியோ குண்லாப்ஸானுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்து செய்தியில், ஐஸ்லாந்து குடியரசின் பிரதம அமைச்சராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டமை எனக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. அதற்காக என் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களுடைய பதவிக்காலத்தில் எமது நாடுகளுக்கிடையிலான நட்புறவு வலுவடையும் என நான் நம்புகிறேன் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் கட்டார் இராச்சியத்தில் புதிய எமிராக அதிகாரம் மாற்றப்பட்டுள்ள ஷேக்டாமின் பின் ஹமாட் அல் -தானிக்கும் ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி யினை அனுப்பி வைத்துள்ளார். அதில் பல ஆண் டுகளாக இலங்கையும் கட்டார் இராஜ் ஜியமும் நட்புறவைபேணிவந்துள்ளன.

உங்கள் அன்புத் தந்தையாரும் எனது நெருங்கிய நண்பருமான கட்டார் இராஜ்ஜியத்தின் முன்னாள் எமிர் 2012 ஜனவரியில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயமும் 2012 மே மாதத்தில் கட்டார் இராஜ்ஜியத்திற்கு நான் மேற்கொண்ட விஜயமும் எமது உறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளன எனவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (செ-2)




✷ 1099 -முதலாம் சிலுவைப் போர்: 15ஆயிரம் கிறிஸ்தவ போர் வீரர்கள் பட்டினியுடன் ஜெருசலேம் அருகில் சமய ஊர்வலம் சென்றனர்.

✷ 1497 - வாஸ்கொடகாமாவின் இந்தியாவுக்கான முதல் நேரடிப் பயணம் ஆரம்பம்.

✷ 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் போல்ட்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ள்ஸ் மன்னனைத் தோற்கடித்தான்.

✷ 1815 - பதினெட்டாம் லூயி பரிஸ் திரும்பி பிரான்சின் மன்னனான். இரு வாரங்களே பதவியில் இருந்த நான்கு வயது இரண்டாம் நெப்போலியன் பதவி இழந்தான்.

✷ 1859 - சுவீடன்-நோர்வே மன்னனாக சுவீடனின் பதினைந்தாம் சார்ல்ஸ் முடி சூடினான்.

✷ 1889 - வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலாவது இதழ் வெளியானது.

✷ 1982 - ஈராக் ஜனாதபதி சதாம் உசேன் படுகொலை முயற்சியில் இருந்து தப்பி னார்.

✷ 1985 - திம்பு பேச்சுவார்த்தைகள்: இலங்கை அரசுக்கும் தமிழ் இயக்கங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்ப மாயின.

✷ 1990 -ஜேர்மனி ஆர்ஜென்டீனாவை வெற்றி கொ ண்டு 1990 காற்பந்து உலகக் கிண்ணத்தை வென்றது.

✷ 2006 - ம. பொ. சி., புலவர் குழந்தை ஆகியோ ரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட் டன.

**பிறப்புகள்**

✷ 1895 - ஈகர் தம், ரஷ்ய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1971)

✷ 1906 - பிலிப் ஜோன்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (இ. 2005)

✷ 1972 - சௌரவ் கங்குலி, இந்தியத் கிரிக்கெட் துடுப்பாளர்

**இறப்புகள்**

✷ **1695 - கிறிஸ்டியான் ஹைஜன்ஸ், டச்சு கணிதவியலாளர் (பி. 1629)**

✷ 1979 - சின்-இட்டீரோ டொமனாகா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1906)

✷ 1979 - ரொபேர்ட் வூட்வேர்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1917)

✷ 1989 - வி. வி. வைரமுத்து, ஈழத்து நாடகத் துறையின் முன்னோடி, நடிகமணி (பி. 1924)



கிறிஸ்டியன் ஹைகன்ஸ்

கிறிஸ்டியான் ஹைகன்ஸ், 1629 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி நெதர்லாந்தில் டென்ஹாக் நகரில் பிறந்தார்.

இவர் ஒரு டச்சு கணிதவியலாளர், வானியலாளர், மற்றும் இயற்பியலாளர் ஆவார். ஒளியானது அலைகளாகப் பரவுகிறது என்ற அலைக் கொள்கை மூலம் உலக அறிவியல் புரட்சியில் பங்கேற்றவர் ஆவார். கோள்கள், இயந்திரவியல், ஒலியியல், இயற்பியல், கணிதம், வானவியல் ஆகிய துறைகளில் இவர் பெருமை தரும் பல பங்களிப்புகளைச் செய்தார்.


கணிதத்தில் தற்கால தொகையீட்டு மற்றும் வகையீட்டு நுண்கணித வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஹைகன்ஸ் தொலைநோக்கியின் கண் வில்லையை கண்டறிந்தார். அதனைக் கொண்டு வான் பொருட்களை நுட்பமாக ஆய்வு செய்தார். இன்றளவும் விலை குறைந்த தொலைநோக்கிகளில் பயன்படுத்தப்படும் எளிய கண்வில்லை இவர் வடிவமைத்ததே ஆகும்.

தொடர்ந்து காலத்தைக் கண்டறிய உதவும் ஊசல் கடிகாரத்தை கண்டு பிடித்ததுடன் பரிவு என்ற பௌதீகவியல் தத்துவத்தையும் விளக்கினார். இதன் மூலம் ஐசாக் நியூட்டனின் இரண்டாம் இயக்க விதியை இருபடிச் சமன்பாடாக மாற்றினார். தொடர்ந்து வானியலிலும் பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட இவர் 1695 ஆம் ஆண்டு தன் இன்னுயிர் நீத்தார். இவரது நினைவாக செவ்வாயில் உள்ள ஒரு பெரிய குழிக்கும் சந்திரனில் உள்ள ஒரு மலைத்தொடருக்கும் இவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா- இலங்கை குறித்த மூலோபாயக் கொள்கைகளை இந்தியா மாற்ற வேண்டும்...



**இவ்வாறு சண்டேலீடர் ஆங்கிலவார இதழுக்கு இந்திய இராணுவத்தின் முன் னாள் புலனாய்வுத் துறை அதிகாரியான கேணல் ஆர். ஹரிகரன் அளித்துள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.**

சீனாவின் கடல்சார் நடவடிக்கைகள் அடுத்த பத்து ஆண்டுகளில் இந்திய மாகடல் பிராந்தியத்தில் அதிகரிப்பதால் ஏற்படுகின்ற ஆபத்தை த்விர்ப்பதற்கு சீனா மற்றும் இலங்கை தொடர்பான தனது மூலோபாயக் கொள்கைகளில் இந்தியா மாற்றத்தைக்கொண்டு வரவேண்டும்.

கேள்வி:- இலங்கையின் தேசிய பிரச்சினையில் இந்தியா கடந்த பல பத்தாண்டுகளாக ஆர்வத்துடன் சில நேரங்களில் கண்டுகொள்ளாதும் நடந்துள்ளது. தற்போது இலங்கையில் 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் வடக்கு மாகாணசபைத்தேர்தல் போன்றன முக்கியமாக பேசப்படுகின்றன. இவ்வாறான விடயங்களில் மன்மோகன் அரசாங்கம் சாதகமாகவும் உறுதியுடனும் செயற்படுகின்றது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

பதில்:- இலங்கையில் தேசியப் பிரச்சினை தொடர்பில்இந்தியா இரு வேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதாவது பிராந்திய சக்தியாக உள்ள இந்தியா, இலங்கையுடன் கேந்திர நலன் பயக்கும் நட்புரீதியான உறவைத் தொடர வேண்டும் என விரும்புகிறது. இது இந்தியாவின் ஒரு நிலைப்பாடாகும்.

தமிழ்நாட்டுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய ரீதியில் முரண்பாட்டைத் தோற்றுவிக்காது அரசியலைக் கொண்டு செல்ல வேண்டிய மற்றைய நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது.

இந்நிலையில் நீங்கள் இங்கே குறிப்பிட்ட இந்தியாவின் மாறுபட்ட நிலைப்பாடானது குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுகின்ற சூழ்நிலையின் முன்னுரிமைக்கேற்ப இந்தியா தனது கொள்கை வகுப்பை மாற்றிக் கொள்ளும். அதாவது இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பில் பிராந்திய சக்தி என்கின்ற அதிகாரத்தை நிலை நாட்ட வேண்டும் என இந்தியா விரும்பினால் அல்லது தேசிய ரீதியில் தமிழ்நாட்டில் எழும் உணர்வலைகளைப் பொறுத்து இந்திய தனது தலையீட்டை மேற்கொள்ளும்.

இந்தியா இவ்விரு வேறுபட்ட நிலைப்பாடுகளை சமப்படுத்தி தீர்வை எடுக்க முயற்சிக்கிறது. இதன் ஒரு பகுதியாகவே 1987 இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், பிராந்திய மூலோபாயத் தேவையையோ அல்லது உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அவாக்களையோ திருப்திப்படுத்துவதாக இந்திய- இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரு தரப்புகளினதும் அரசியல்வாதிகள் தமது கடப்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதற்கான சட்ட ஓட்டைகள் பல காணப்படுவதால் இந்திய- இலங்கைஒப்பந்தம் உண்மையில் தோல்வியடைந்து ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

இந்த உடன்பாட்டின் பிரகாரம் வரையப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால், இத்திருத்தச்சட்டம் குறைந்தது சிறுபான்மை மக்களுக்கு சமமான நீதியை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறது.

இத்திருத்தச் சட்டத்தை நான் முழுமையாக ஆதரிக்கவில்லை. என்றாலும் கூட தற்போது அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் மௌனமாக்கப்பட்டுள்ள இந்நிலையில் இத்திருத்தச்சட்டத்தை மீள ஆராய்ந்து சீர்செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சி வந்தபோது அதிகாரப் பகிர்வை வழங்குவதாக வாக்குறுதியளித்த பின்னர் ஈழப்போர் முடிவுக்கு கொண்டு வரப்படுவதற்கு இந்தியாவின் சம்மதம் பெறப்பட்டதானது பிராந்திய நலனைக் கருத்திற் கொண்டு இந்தியாவால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வாகக் காணப்படுகிறது.

ஆனால், இந்தியாவுக்கு மகிந்த அரசு உறுதியளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதன் மூலம் இலங்கை அதிபர் இந்திய மத்திய அரசாங்கத்துடன் பகைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்திய மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டில் எழுந்த அரசியற் கோரிக்கைகளைச் சந்திப்பதற்கான இயலுமையை இழந்த நிலையில் உள்நாட்டில் அதிருப்தியைப் பெற்றுக் கொள்ள நேரிட்டது.

2013- 14 இல் இந்தியாவில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது ஆளும் காங்கிரஸ் கூட்டணி பல சவால்களைச் சந்திக்க வேண்டியேற்படும். அதாவது ராஜபக்ச அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் இந்தியாவில் வாழும் தமிழ் மக்கள் தமது அழுத்தங்களைத் தொடரந்தும் இந்தியா மத்திய அரசாங்கத்திற்கே வழங்குவர்.

இலங்கை விடயத்தில் இந்தியாவில் வெளியுறவுக் கொள்கை மிகப்பிரபலமான இந்திய யானை போன்று நகர்வதுடன் இந்தியாவின் மிகப்பெரிய அரசியல் கட்டமைப்பு சரியானதொரு தீர்மானத்தை எட்டுவதற்கு நீண்ட காலத்தை எடுக்கிறது.

இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் தமிழ் நாட்டுமுதலமைச்சருக்கும் இடையில் நிலவுகின்ற முரண்பாடானது எதிர்காலத்தில் முன்னேற்றகரமான தீர்வுக்கு வித்திடும் என நான் எதிர்பார்க்கவில்லை. இலங்கை தேசியப் பிரச்சினை தொடர்பில் ஜெயலலிதா மத்திய அரசாங்கத்துடன் இணைந்து மிகப்பயனுள்ளதொரு தீர்வை முன்வைக்க முன்வரவேண்டும்.

இதைவிடுத்து தமிழ்நாட்டு முதலமைச்சர் தற்போது போல் தொடர்ந்தும் இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பில் பக்கச் சார்பான தீர்வு முன்வைக்கப்பட வேண்டு என அழுத்தம் கொடுப்பதானது மத்திய அரசாங்கத்துடன் இணைந்து சாதகமான பயனுள்ளதொருதீர்வை முன்வைப்பதற்கு தடையாகவிருக்கும்.

யாழ்ப்பாண முற்றுகையை நிறைவுக்குக் கொண்டு வருவதற்காக இந்திய விமான படை பூமாலை நடவடிக்கை என்ற பெயரில் வானிலிருந்து உணவுப்பொதிகளை மக்களுக்கு வழங்கியதன் மூலம் யாழ்ப்பாண முற்றுகை நிறுத்தப்பட்டது. அனைத்துலக ரீதியில் அங்கீகாரம் பெற்றிருக்காத எந்தவொரு நாடும் குறிப்பாக அமெரிக்கா கூட இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்க முடியாது. ஆனால் இந்தியா இதனைச் செய்தது. இந்தியா ஐ.நா. அமைப்பின் ஆதரவில்லாது தனது அயல்நாடொன்றில் இவ்வாறானதொரு பன்முகப்பட்ட நகர்வுகளைச் செய்ய முடியாது.

கேள்வி:- இலங்கையில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டில் இந்தியா பங்களிக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா? இலங்கையிடமிருந்து தகுந்த பதில் கிடைக்காது விட்டால் தான் இதில் கலந்து கொள்ளப்போவதில்லை என கனேடியப் பிரதமர் டேவிட் ஹெமரூன் தெரிவித்துள்ளார். இதேபோன்று தென்னாபிரிக்கவும் இதனைப் பின்பற்றுவதாக தெரிகிறது. அவுஸ்திரேலியா உட்பட ஏனைய நாடுகள் வேறுவிதமான தெரிவைக்கொண்டிருப்பார்கள். இந்நிலையில் போர்க்குற்றவாளி எனக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் அடுத்த இரு ஆண்டுகள் பொதுநலவாய அமைப்பிற்கு தலைமை தாங்கும் என்பதை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

பதில்:- பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் இந்தியா பெரும் குழப்பத்திலுள்ளது என்பது தெளிவானதாகும். இந்தியாவின் பிராந்திய மற்றும் தேசிய ரீதியான இரு வேறுபட்ட அணுகுமுறைகள் இந்தியாவை இவ்வாறான சிக்கலுக்குள் தள்ளியுள்ளது.

அதாவது தமிழ்நாட்டு சட்டசபை உள்ளடங்கலாக தமிழ்நாட்டு அரசியற் கட்சிகள் அனைத்தும் இந்திய மத்திய அரசாங்கம் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது எனக் கோரிவருகின்றன. அதாவது இலங்கை போர்க்குற்றங்களைப் புரிந்துள்ள போதிலும் இது தொடர்பில் இது உரிய முறையில் பதலளிக்கவில்லை என தமிழ்நாடு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்நிலையில் இந்தியா இவ்வாறான கடும் போக்கான தீர்மானத்தை எடுக்க முடியாது. இந்திய- இலங்கை உறவைப் பாதிக்கும் தீர்மானத்தை தற்போதைய் இந்திய தலைமை எடுக்கும் என நான் கருதவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்த போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் இலங்கையில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்களின் உச்சிமாநாட்டில் இந்தியாகலந்து கொள்ளாதுவிட்டால் இதனை உச்சிமாநாட்டுக்குத் தலைமை தாங்கும் மஹிந்த அரசு தனிப்பட்ட பகையாகக் கருதிக் கொள்வார்.

மஹிந்த அரசு இந்தியாவுக்கு வழங்கி வாக்குறுதிகளிலிருந்து தற்போது மீறுவதானது இந்தியாவுக்கு ஒருபோதும் மகிழ்ச்சியைக் கொடுக்காது. இதேவேளை இந்தியா தமிழ்நாட்டு அரசியலைக் கருத்திற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. தொடர்ந்தும் தமிழ்நாடு அழுத்தம் கொடுத்தால் இந்தியா வெளியுறவு அமைச்சரை இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அனுப்ப வேண்டிய தீர்மானத்தை சிலவேளைகளில் எடுக்கும்.

மறுபுறத்தே இலங்கையிடமிருந்து தான் எதனைப்பெற்றுக் கொள்ள வேண்டும் என இந்தியா விரும்புகிறதோ அதனை அடைந்து கொள்வதற்காக இந்தியா இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய மூலோபாயத் தேவையுள்ளது.

தற்போதைய நிலவரத்தின்படி இலங்கை 13 ஆவது திருத்தச்சட்டத்தை விடுத்து வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்தி அதன் மூலம் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தன்னிடம் ஒரு திட்டம் இருப்பதாக இலங்கை ஏற்கனவே அறிவித்துள்ளது.

இந்தியா தனது உள்நாட்டு அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமாயின் வரும் வாரங்களில் மஹிந்த அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

இந்திய எந்த மட்டத்திலான இலங்கையில் நடைபெறும் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். கனேடிய வாக்கு வங்கிகளுக்கு பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை கனேடியப் பிரதமர் புறக்கணிப்பதானது பொருத்தமாக இருக்கும். ஆனால், இது இந்தியாவுக்கு பொருந்தாது.

இலங்கையிடம் இந்தியா தொப்புள்கொடி உறவைப் பேணி வருகிறது. இந்நிலையில் இந்தியா உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதை நிறுத்தாது. வேறுவழியில் இலங்கை மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கேள்வி:- இலங்கை ஜனாதிபதி தற்போது சீனாவுடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணிவரும் இந்த வேளையில் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குதல் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான பாதுகாப்பு உடன்பாட்டிலும் சீனா கைச்சாத்திட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சீனாவின் பங்களிப்பு என்ன என நீங்கள் கருதுகிறீகள்?

பதில்:- சீனா, இலங்கையின் பல்வேறு துறைகளிலும் அகலக்கால் பரப்பி வருகிறது. நேபாளத்தில் சீனா தனது சீன மொழியைக் கற்பிப்பதற்கான திட்டத்திற்கு நிதியுதவி வழங்குகி ன்றனர். பங்களாதேசிலும் சீனா முதலீடு செய்தது. பாகிஸ்தான் சீனாவுக்கு மூலோபாய முக்கியத்துவம் மிக்க நாடாக உள்ளது. இதேபோல் மியான்மாரும் காணப்படுகிறது.

இந்தியாவின் ஒட்டுமொத்த அயல்நாடுகளும் சீனாவின் தற்போதைய கட்டுமானம் தொலைத் தொடர்பாடல் சுற்றுலாத்துறை மின்சக்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித் துறைக்கான நுகர்வு வசதிகள் போன்ற பல்வேறு உயர்மட்ட திட்டங்களின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறை தவிர இவ்வாறான பொருளாதாரத் துறைகளில் இந்தியாவில் சீனாவின் செல்வாக்கு காணப்படுகிறது என்பதை மறந்து விடக்கூடாது.ஏற்கனவே இந்திய நிறுவனங்கள் ஆர் எம்.பி. கடன்களைப் பெறுகின்றன. 2015 இல் சீன- இந்திய வர்த்தகமானது 100 பில்லியன் டொலர்களாக காணப்படும்.

இந்தியாவின் இவ்வாறான பொருளாதார நலனைப்பெறும் சீனா இதேவிதமான வர்த்தக சார் நோக்குடன் இலங்கையில் செல்வாக்குச் செலுத்துவதானது இந்தியாவின்நலனுக்கு ஆபத்தை விளைவிக்கும் என நாம் கருதலாமா? நான் அவ்வாறு நினைக்கவில்லை.

சீனா இலங்கைக்கு ஆயுத தளபாடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிகளை வழங்குவது இந்தியாவுக்கு மூலோபாய ரீதியான ஆபத்தை ஏற்படுத்தாது. இலங்கைக்கு இந்தியா இராணுவப்பயிற்சிகளை வழங்குகிறது. இலங்கைக்கு இந்திய ஒருபோதும் ஆயுதங்களை வழங்கவில்லை. தெரிவுசெய்யப்பட்ட சில துறைகள் தவிர வேறு துறைகளில் சீனாவுடன் இந்தியாவைத் தொடர்புபடுத்த முடியாது.

சீனாவை விட இலங்கை இந்தியாவும் மகிழ்வடையக் கூடிய இராணுவக் கலாசாரம் ஒன்று காணப்படுகிறது. இந்தியாவும் இலங்கையும் மிக நெருங்கிய நட்பு நாடுகள் என்பதால் சீனாவின் செல்வாக்கு இரு நாடுகளின் பாதுகாப்பு விவகாரத்தில் தடையாக இருக்க முடியாது.

ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதாரத் தொர்பு வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற சில துறைகளில் சீனாவின் அதிகரித்த செல்வாக்கும் இலங்கையின் கொள்கை வகுப்பில் சீனாவின் தலையீடும் இந்தியாவுக்கு ஆபத்தை உண்டுபண்ண முடியும். இதற்கான முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டதை பல்வேறு எடுத்துக்காட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன.

போர்க்காலத்தில் கடல் மற்றும் தலை மூலம் இந்தியா இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்துள்ள நிலையில் சீனாவின் அதிகரித்த செல்வாக்கு உண்மையான அச்சுறுத்தலாக இருக்கும் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல்வழி மற்றும் தொலைத் தொடர்பாடல் ஒட்டுக்கேட்கப்படலாம்.

சீன மற்றும் இலங்கையின் தீர்மானங்களுக்கு ஏற்ப இந்தியா தனது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். இதுவே இந்தியாவின் மூலோபாய நகர்வாக இருக்கும். சீனாவின் கடல்சார் நடிவடிக்கைகள் அடுத்த பத்து ஆண்டுகளில் இந்திய மாகடல் பிராந்தியத்தில் அதிகரிப்பதால் ஏற்படுகின்ற ஆபத்தை தவிர்ப்பதற்கு சீனா மற்றும் இலங்கை தொடர்பான தனது மூலேபாய கொள்கைகளில் இந்தியா மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். இதனை யாராவது தற்போது செய்து கொண்டிருப்பார்கள். அல்லது செய்வதற்குத் திட்டமிடுவார்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் சிறந்த நண்பர்களாக பெற்றோர்களே இருக்க வேண்டும்

## தொலைபேசியோ, பேஸ்புக்கோ அல்ல-ஜனாதிபதி

வரலாற்றை மறந்து நவீனத்துவத்திற்குச் செல்ல முடியாது என்பதை அனைத்து மாணவர்களும் புரிந்து கொண்டு கல்வியில் தம்மை வளர்த்துக் கொள்வது அவசியமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

காலி பத்தேகம கிறிஸ்து தேவ மகளிர் கல்லூரியின் 125 ஆவது வருட நிறைவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாணவ பருவத்தில் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்காமல் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி நவீனத்துவம் என்பது வெளிநாட்டவர் போல் நடந்து கொள்வது என்பதல்ல எனவும் குறிப்பிட்டார்.

சமாதானமாகவும் சுபீட்சமாகவும் எதிர்காலத்தை எதிர் கொள்வதற்கு மாணவப் பருவத்தின் செயற்பாடுகளே உறுதுணையாகின்றது. சிறு பாராயத்தில் கிடைக்கும் அனுபவங்களே எமது எதிர்காலத்திற்கு சிறந்த படிப்பினையாகிறது. தனது வாழ்க்கையில் நாம் கற்றுக் கொண்ட பாடம் இது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிள்ளைகளின் நண்பர்கள் தொலைபேசியோ பேஸ்புக்கோ அல்ல சிறந்த நண்பர்கள் பெற்றோர்களே. அதிலும் அம்மாதான் சிறந்த நண்பி. அம்மாவிடம் நாம் அனைத்தையும் பேச முடியும், பகிர்ந்துகொள்ளமுடியும்.

பிள்ளைகளை தொலைபேசியும் பேஸ்புக்களுமே தவறான வழிக்கு இட்டுச் செல்ல வழி வகுக்கின்றன. இதனைக் குறிப்பாக மாணவ சமுதாயத்தினர் புரிந்து செயற்பட வேண்டும்.

அதிலும் பெண் பிள்ளைகள் இத்தகைய செயற்பாடுகளால் தங்களது எதிர்காலத்தை வீணடித்துக் கொள்ளக் கூடாது. நாட்டின் சனத்தொகையில் தற்போது பெண்களே அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் பல துறைகளிலும் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று வழிநடத்தக் கூடியவர்களாக பெண்கள் தம்மை வளர்த்துக் கொள்வது அவசியம். மாணவப் பருவத்தில் தான் வாழ்க்கைக்கான அனுபவம் கிடைக்கிறது.

அதனை சரிவர பயன்படுத்துவது முக்கியமாகும். மொழிகளைக் கற்றுக் கொள்வதும் வயதானவுடன் கஷ்டமாக இருக்கும். எனினும் மாணவப் பருவத்தில் பல மொழிகளைக் கற்கும் ஆர்வமும் அதில் தேர்ச்சி பெறவும் முடியும்.

இது எமது எதிர்காலத்திற்கு மிகவும் பிரயோசனமாக அமையும். எமது ஆளுமையையும் ஆத்ம சக்தியையும் இது பெருக்கும்.

மாணவப் பருவம் மிக பெறுமதியானது. உலகைப் பற்றி, சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய பருவம் அது. உலகில், சமூகத்தில் கற்றுக் கொள்வதைப் போன்றே வீட்டிலும் கற்றுக் கொள்ள பல விடயங்கள் உள்ளன. பிள்ளைகள் தமது சரித்திரத்தையும் சிந்தனையையும் நிலைப்படுத்திக் கொள்வது அவசியமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (செ-2)

# தற்பாதுகாப்பு நோக்கிலேயே மாமாஸ்மீ மீது தாக்குதல்

## பொலிஸ் ஊடக பேச்சாளர் விளக்கம்

தற்காப்பு நோக்கிலேயே பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் மாமாஸ்மீ மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். மாமாஸ்மீக்கு எதிராக கொலை, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதாகவும் குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியமளிக்க மக்கள் தயாரில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாளிகாவத்தை பொலிசாரும் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து மாமாஸ்மீயை கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டனர். ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகவும் அதனை காண்பிக்க சென்றபோது வாகன சாரதியை கைவிலங்கினால் தாக்கியதாகவும் தற்காப்பு நோக்கில் மாமாஸ்மீ மீது பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன குறிப்பிட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மொஹமட் அஸ்மிர் எனப்படும் மாமாஸ்மீ சுட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சுவானந்தன் கமலநாதன் நீதி மற்றும் மறு சீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்று அண்மையில் யாழ். மாவட்ட நீதி மன்றில் நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் உத்தியோகத்தராகவும் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளராகவும் கடமைபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.



சமூக சேவையாளரும் இலக்கியவாதியுமான செல்லத்தம்பி பரமநாதன் யாழ்ப்பாணம் நீதி மன்ற நீதவான் அ.ஆனந்தராசா முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கலை இலக்கியத்தில் 50 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ள இவர் ஞானஎந்தன் என்ற கலை இலக்கியத்திற்கான விருதைப் பெற்றுள்ளதுடன் சமூகமணி, சமூக சோதி, சமூகரத்தினா என்னும் சமூக சேவையாளருக்கான விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கிழக்கைச் சேர்ந்த மாதவராசா பத்மராஜ் அண்மையில் யாழ். மாவட்டநீதி மன்றில்நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மானியங்களை பெறுவோர் விபரம்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான மானியக் கொடுப்பனவுக்ள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையின் கீழ் எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அலரிமாளிகையில் நடைபெ றவுள்ளது. எனவே கீழ் குறிப்பிடப்படுகின்ற பயனாளிகள் மாவட்ட செயலகத்துடனோ அல்லது தங்களது பிரதேச செயலகங்களுடனோ தொடர்பு கொண்டு பயணத்துக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலர் ப.றொணி அறிவித்துள்ளார். இம்மானியக் கொடுப்பனவை பெறும் பயனாளிகள் விபரம் வருமாறு,

**கொடுப்பனவு பெறும் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகள்**

நிறோஜன்- கண்ணகிபுரம், ஜி.அதிர்ஷ்ட லட்சுமி- பெரிய பரந்தன், ஜி.சுமதி- அக்கரா யன் குளம், ரி.லட்சுமி- திருவையாறு, ஏ.அருள் மேரி- பாரதிபுரம், என்.ராசாத்தி- கரடிப்போக்கு, பி.மகேஸ்வரி- உருத்திரபுரம், பி.வைரமுத்து-இரத்தின புரம், கந்தசாமி- இராமநாதபுரம், ஆர்.குழந்தைவேல்- ஆனந்தநகர், எம்.சகுந் தலாதேவி- ஆனந்தநகர், எஸ்.அரியமலர்-ஆனந்தநகர், எம்.ராமை- பாரதிபுரம், ரி.ஏரம்பதாஸ்- கன காம்பிகைக்குளம், ரி.கல்பனா-புதுக்காடு, ஆர்.சுகந்தி- இரத்தினபுரம், பி.சந்திரசேகரி- பாரதிபுரம்,ஜே.தமிழ்ச்செல்வி- ஆனந்தநர், பி.சொர்ணம்மா- பாரதிபுரம், கே.கணேசலிங்கம்-ஆனந்தபுரம், கே.வன்னியசிங்கம்- திருவை யாறு, கே.சதீஸ்குமார் - பாரதிபுரம், ஆர்.சாந்த குமாரி- ஆனந்தபுரம், எஸ்.கோடீஸ்வரி- உருத்திரபுரம், என்.சுந்திரகுமாரி-உருத்திரபுரம் கிழக்கு, பி.சரோஜா- ஆனந்தபுரம், கே. துரைராசசிங்கம்- இராமநாதபுரம், எஸ். தர்மகுலசிங்கம்-உருத்திரபுரம், ஆர்.தர்மநாதன்- பேருந்துசாலைவீதி, கிளிநொச்சி, ஆர்.வசந்தி-இராமநாதபுரம், கே.தங்கரட்ணம்- இராமநாதபுரம், என்.சுலோஜினி- ஆனந்தநகர், ஆர். வானராணி-அம்பாள்குளம், வி.வள்ளியம்மை- அம்பாள்குளம், எஸ்.நிர்மலா தேவி- ஆனந்தபுரம், வி.தில்லையம்பலம்- திருவையாறு, கே.கமலாதேவி- அம்பாள்குளம், பி.சுஜாதா- சிவநகர், பி.ஆரையம்மா- ஆனந்தபுரம், எஸ்.பாக்கியம்-உருத்திரபுரம், ரி.இராசமணி-உருத்திரபுரம், கே.இராசலட்சுமி-ஊற்றுப் புலம், கே.இந்திரதேவி- இராமநாதபுரம், பி.சிந்தாதுரை- இராமநாதபுரம், பி.ரவிச்சந்திரன்- இராமநாதபுரம், கே.கங்காதரன்(இறந்தவர்)- அம்பாள்நகர், எம்.கோபாலப்பிள்ளை (இறந்தவர்)-சாந்தபுரம், எம்.சகாயராயு-புதுமுறிப்பு, எஸ்.சுதர்சன்- ஆனந்தபுரம், சி.பவிநாயகி- கண்ணகைபுரம், எஸ். மரியம்மா-உருத்திர புரம், டி.எஃப்.கனகலட்சுமி- உருத்திரபுரம், வி.றேகலாவதி-உருத்திரபுரம், டி.சந்திரராணி- உருத்திரபுரம், வை.இராஜேஸ்வரி- வைத்தியசாலைவீதி, கிளிநொச்சி, என்-இராஜேஸ்வரி- உருத்திரபுரம்,என். உலகநாதன்-உருத்திரபுரம்,கே.சீலன்-இராமநாதபுரம், ஐ.மகேஸ்வரன்-வட்டக்கச்சி, ஆர்.இராசரட்ணம்- திருவையாறு, எம்.வள்ளியம்மை- ஆனந்தநகர், பி.செல்வராணி- இராமநாதபுரம்,எஸ்.சரோஜாதேவி- உருத்திரபுரம், கே. சின்னராசா-ஆனந்தநகர், கே.அகிலேஸ்வரி- வட்டக்கச்சி, எஸ்.தர்மகுலசிங்கம்-உருத்திரபுரம், கே.சுப்பிரமணியம்- திருவையாறு, ஜே.யேசுராசா- பாரதிபுரம், ஆர்.மகாலட்சுமி-உருத்திரபுரம், எஸ்.மாருதை-வைத்திய சாலை வீதி, கிளிநொச்சி, எஸ்.மங்கையர்க்கரசி- உருத்திரபுரம், எம்.புவனேந்திரன்-புதுமுறிப்பு , வி.கலைச்செல்வன்-புதுமுறிப்பு, கே.சாந்தினி- உருத்திரபுரம், என்.மங்களேஸ்வரி- ஆனந்த நகர், கே.உதயமலர்-உருத்திரபுரம் வடக்கு, கே.சின்னராசா-ஆனந்தநகர், எஸ்.சுசிலாவதி- அக்கராயன்குளம், ஏ.தவகுமார்- உதயநகர் கிழக்கு, எஸ்.சுப்பையாபிள்ளை- உதயநகர் கிழக்கு, என்.ஜீவகன்- இராமநாதபுரம், கே.சின்னராசா-ஆனந்தநகர், எஸ்.கலாதேவி- பொன் னகர், எஸ்.ஆனந்தி- வட்டக்கச்சி, எம். கலைமுத்து-அம்பாள்நகர், எஸ்.பெர்னாண்டோ-இரத்தினபுரம்,ஏ.லட்சுமி-திருவையூர், என்.தீபா (இறந்தவர்)-அம்பாள்குளம், பி.சரோஜினி (இறந்தவர்)-ஆனைவிழுந்தான், எஸ்.சங்கீதா (இறந்தவர்)-அம்பாள்குளம், என்.நகுலராசா (இறந்தவர்)- இரத்தினபுரம், எஸ்.செல்வராணி (இறந்தவர்)- ஸ்கந்தபுரம், எஸ்.பாக்கியம்(இறந்தவர்)-உருத்திரபுரம், என்.கௌதினி-இரத்தினபுரம், எஸ். அங்கயர் க்கன்னி (இறந்தவர்)- திருவையாறு மேற்கு, பி.முனியாண்டி (இறந்தவர்)- ஆனைவிழுந்தான், எஸ்.கோபிநாத்(இறந்தவர்)- வட்டக்கச்சி, எஸ்.முருகேஸ்(இறந்தவர்)- ஆனைவிழுந்தான், பி.இராஜேஸ்வரி (இறந்தவர்)- ஆனைவிழுந்தான்,டபிள்யூ.யதுசன் (இறந்தவர்)- உதயநகர், கே.இராசசேகரம் (இறந்தவர்)- ஆனைவிழுந்தான், எஸ்.சொர்ணலட்சுமி- வட்டக்கச்சி, எஸ்.கேதீஸ்வரி(இறந்தவர்)- புதுமுறிப்பு, கே.மகாலிங்கம்(இறந்தவர்)- திருவையாறு மேற்கு, வை.சர்மிலன் (இறந்தவர்)- உருத்திரபுரம், ஆர்.ஜெயரஞ்சினி (இறந்தவர்)- ஆனந்தபுரம்

**நட்டஈட்டு கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் கரைச்சி பிரதேச பிரிவுக்குட்பட்ட அரச உத்தியோகத்தர்கள்**

ரி.அபராஜிதா-திருநகர் வடக்கு, எஸ்.அலெக்சாண்டர்- விவேகானந்தா நகர், ஏ.நவரத்தினராஜா-திருநகர், கே.சிவலிங்கம்-உருத்திரபுரம், ரி.வானுகோபன்-விவேகானந்தாநகர், சூரியகுமாரன்-உதயநகர், டி.அந்தோனிராஜா- திருநகர், வை.நடராஜா- திருவையாறு, பி.பாலேந்திரன்-சிவநகர், கே.சுப்ரமணியம்-சிவநகர், கே.கோகிலாதேவி- திருவையாறு, ஏ.உதயணன்- வட்டக்கச்சி, என்.லந்திரதாசன்-உருத்திரபுரம்,எம்.ஜெகநாதன்-பாரதிபுரம், எஸ். ராமு- மலையாளபுரம்,எஸ்.சுந்தரலிங்கம்- திருநகர், எஸ்.சல்பராஜா- திருநகர் வடக்கு, எஸ். சூரியகுமாரன்-கரைச்சி,எஸ்.சசிதரன்-வவுனியா

**கொடுப்பனவு பெறும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பயனாளிகள்**

எஸ்.சிவசரன்- புன்னைநீராவி, எஸ். புவனேஸ்வரன் -தர்மபுரம், கே. தனலட்சுமி- பரந்தன், எஸ்.அம்பிகாவதி (இறந்தவர்)- முரசுமோட்டை, சக்திவேல் ஸ்வரநங்கை (இறந்தவர்)- திருநகர் வடக்கு, குமாரதங்கம் ஜெயபாலன் (இறந்தவர்)- குமரபுரம், எஸ்.விக்னேஸ்வரன் தர்மபுரம், எஸ்.நந்தினி-கல்மடுநகர், ஏ.ரதனி - வட்டக்கச்சி, எஸ்.எரிக்டி நேரஸ்மிலா- புன்னை நீராவி, எஸ்.மங்கையற்கரசி- உருத்திரபுரம், வி.சர்மிலா- மருதநகர், ஆர்.மேரிபசீலா- பாரதி புரம்,எம்.குணசிங்கம்- ஜயந்திநகர், கே. ராஜலக்சுமி -இராமநாதபுரம், கே.அசோகவதனி - பெரியபரந்தன், எல்.சண்முகராணி- கனகாம்பிகைகுளம், வி.செல்லத்துரை-உருத்திரபுரம், எஸ்.இராசமலர் -பாரதிபுரம், வி.சுப்பிரமணியம் -உருத்திரபுரம், கே. இராசலிங்கம் திருவை யாறு, எஸ்.நவநீதன்- முரசுமோட்டை, வி.உதயகலா- கல்மடு நகர், என்.யாதவராசா- பரந்தன், எம்.ரஞ்சினி- தர்மபுரம், ரி.சந்திராதேவி- பரந்தன், ரி.சந்திரவதனி -புன்னை நீராவி, ஆர்.ராஜேஸ்வரி -புன்னை நீராவி, கே.சுதா - இராமநாதபுரம், எஸ்.பார்வதி -இராமநாதபுரம், எஸ்.மேரி -இராமநாதபுரம், பி.தெய்வானைப் பிள்ளை- இராமநாதபுரம், எஸ்.கமலாதேவி - இராமநாதபுரம், டி.சுமித்திரா -கண்ணகிபுரம், எஸ்.ராசலிங்கம் -பெரியபரந்தன், எம்.உன்னம்மா-குமரபுரம், எம்.கருணாஹரி -பரந்தன், என்.கையிலைமுத்து -குரக்கன் கட்டு, டி.ராசம்மா -பரந்தன், கே. சுதாசினி- பரந்தன், ரி.சிதம்பரநாதன்- பரந்தன், எ.குமாரசாமி- கண்டா வளை, ரி.மனோன்மணி -கண்டா வளை, என்.சிவபாக்கியம் -இராமநாதபுரம், எஸ்.புஸ்பராணி -கண்டாவளை, பி.தியாகராசா -கண்டா வளை , எஸ்.பூரணம் -புன்னைநீராவி, கே.ராசேந்திரன் -கண்டாவளை, பி.பொன்னம்மா - தர்மபுரம், எஸ்.அமராவதி -இயக்கச்சி வை.எம்.சி., ஜி.சாந்தி -கண்டாவளை, பி.கமலாம்பிகை - கண்டாவளை, எஸ். சபாபதிப்பிள்ளை இராமநாதபுரம், (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயணிகள் ரயில் மோதி 14 பேர் நசுங்கிப் பலி



பாகிஸ்தானில் நேற்று முன்தினம் நடந்த புகையிரத விபத்தில் 14 பயணிகள் பலியாயினர்.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூருக்கு பயணிகள் ரயில் சென்று கொண்டிருந்தது. லாகூரில் இருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செய்குபுரோ மாவட்டத்தில் உள்ள கான்பூர் அருகே ரயில் சென்று கொண்டிருந்தது. அப்போது ஆட்டோ ஒன்று அதிகமான ஆட்களை ஏற்றிக்கொண்டு சென்றது. கான்பூர் அருகே அந்த ஆட்டோ தண்டவாளத்தை கடக்க முயன்றது. அப்போது வேகமாக வந்த புகையிரதம் ஆட்டோ மீது மோதியது. இதில் ஆட்டோவில் பயணம் செய்த 16 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஆட்டோ அப்படியே பல மீற்றர் தொலைவுக்கு இழுத்துச் சென்று வீசப்பட்டது. இதில் ஆட்டோ அப்பளம் போல் நொறுங்கியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே ஆட்டோவில் பயணம் செய்த 2 குழந்தைகள் உட்பட 12 பேர் உடல் நசுங்கி பலியாகினர். தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காயம் அடைந்த 4 பேரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இதில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் மேலும் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அளவுக்கு அதிகமான ஆட்களை ஏற்றிச் கொண்டு ஆள் இல்லாத லெவல் கிராங்சிங்கை ஆட்டோ கடக்க முயன்றதால் விபத்து நடந்துள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து மேலும் விசாரணை நடந்து வருகின்றது. (செ-2)

# கனடாவில் புகையிரத விபத்து; 60 இற்கும் மேற்பட்டோர் பலி



(மான்ட்ரியல்)

கனடாவில் எண்ணெய் தாங்கிகளுடன் சென்ற புகையிரதம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் தீ பிடித்து எரிந்தது. இதில் 60 இற்கும் மேற்பட்டோர் தீயில் கருகியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வடக்கு டோக்டா நகரில் இருந்து எண்ணெய் ஏற்றிக் கொண்டு 77 தாங்கிகளுடன் சென்ற புகையிரதம் கனடாவின் கிழக்கே குயிக்பெக் மாகாணத்தின் வாமேக்னடிக் நகர் வந்தபோது திடீரென தடம்புரண்டு கட்டட பகுதிக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

இதில் புகையிரதம் தீப்பிடித்ததில் 60 இற்கும் மேற்பட்டோர் தீயில் கருகி இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவ இடத்தில் 200 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் தீயை அணைக்க போராடியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-2)

# மாலி தேர்தலையொட்டி அவசர காலநிலை நீக்கம்

(பமாகோ)

மாலியில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாக தற்காலிக ஜனாதிபதி டியோன்கவுண்டா டிரோர் அண்மையில் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அந்நாட்டில் தேர்தல் பிரசாரம் தொடங்கியுள்ளதால் அதற்கு ஏதுவாக அவசரகால நிலையை நீக்கிக் கொள்வதாக அந்நாட்டு இராணுவக் கப்டன் அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் முன்னாள் பிரதமர் உள்ளிட்ட 28 பேர் போட்டியிடுகின்றனர். மாலியில் கடந்த ஜனவரி முதல் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டின் வடக்குப் பகுதியை இஸ்லாமியக் குழுக்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதனால் அங்கு உள்நாட்டு கலவரம் வெடிக்கும் சூழல் உருவானது. இதைதொடர்ந்து மாலி அரசு அந்த பகுதியை மீட்க பிரான்ஸ் நாட்டின் உதவியை நாடியது. இஸ்லாமியக் குழுக்களை ஒடுக்க பிரான்ஸ் இராணுவம் எதிர் தாக்குதல்களை நடத்தி வந்தது.

இதைத் தொடர்ந்து மாலியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. தற்போது மாலி முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. (2)





# இளவரசர் ஹரிக்கு கொமாண்டர் பதவி



லண்டன் இராணுவத்தில் இளவரசர் ஹரிக்கு கொமாண்டர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை லண்டன் இராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது.

மூன்று ஆண்டு கால பயிற்சிக்கு பின் தகுதி தேர்வில் வெற்றி பெற்று தற்போது அப்பாச்சி ஹெலிகொப்டர் படையின் கொமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். (2)

# எகிப்து கலவரம் இடைக்கால பிரதமராக எல்பராடி நியமனம்



(கெய்ரா)

எகிப்தில் கலவரம் நீடித்து வருவதையடுத்து இடைக்காலப்பிரதமராக முகமது எல்பராடி நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு இடைக்கால ஜனாதிபதி அட்லி மன்சூர் நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இவர் ஐ.நா. சபையின் முன்னாள் அணு சக்தி கண்காணிப்பு குழுவின் இயக்குநராக பதவி வகித்துள்ளார். அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். ஜனாதிபதியாக இருந்த முபாரக் மற்றும் மோர்சிக்கு எதிராக செயற்பட்டு வந்தார்.

இவரது நியமனத்துக்கும் மோர்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். புரட்சி மூலம் ஆட்சியை பிடித்துள்ள இராணுவ ஆட்சியாளர்களின் எந்தவிதமான நியமனத்தையும் ஏற்க மாட்டோம் என தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தையும் தீவிரப்படுத்தியுள்ளனர். வடக்கு சினாய் தீபகற்ப பகுதியில் நேற்று முன்தினம் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் சுட்டு கொல்லப்பட்டார். உணவு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தைக்குச் சென்ற அவரைப் போராட்டக் கும்பல் சுட்டு கொன்றது. தலைநகர் கெய்ரோவிலும் போராட்டம் வலுவடைந்துள்ளது. (செ-2)

# பாகிஸ்தானில் மீண்டும் மரண தண்டனைச் சட்டம்

## சர்வதேச அமைப்பு கண்டனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மரண தண்டனை நிறைவேற்றுவதை மீண்டும் கொண்டுவர புதிய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு சர்வதேச பொதுமன்னிப்பு உரிமை இயக்கம் கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

**மரண தண்டனை நிறுத்தம்**

கொடூர குற்றம்புரிகிறவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இதற்கு உலக அளவில் பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு குரல் கொடுத்து வருகின்றன. சுமார் 150 நாடுகள் இந்த மரண தண்டனையை இரத்து செய்து அல்லது நிறுத்தி வைத்துள்ளன. அமெரிக்கா, சீனா, நைஜீரியா, ஏமன் உட்பட சில நாடுகள் மரண தண்டனையை நிறைவேற்றுகின்றன.

இந்த மரண தண்டனைக்கு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான பெனாசிர் பூட்டோ கடுமையாக எதிர்த்தார். அதன்பிறகு அங்கு பெனாசிர் கணவர் ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதியாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சி மலர, 2008ஆம் ஆண்டில் மரண தண்டனை நிறைவேற்றுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தர விட்டார். இது கடந்த மாதத்துடன் காலாவதி ஆனது.

**மீண்டும் அமுலுக்கு வருகிறது**

எனவே மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு விதிக்கப்பட்ட தடையை நீடிக்க புதிய பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசு விரும்பவில்லை. கராச்சி பகுதியில் நடைபெறும் வன்முறை, உயிர் இழப்புகள் மற்றும் தீவிரவாத செயல் காரணமாக இந்த முடிவை எடுப்பதாக தெரிகிறது.


இதுபற்றி பாகிஸ்தான் உள்துறை செய்தி தொடர்பாளர் உமர் ஹமீத்கான் கூறுகையில்,

'தற்போதைய புதிய அரசிடம் அதை நீடிக்கும் திட்டம் இல்லை. எனவே மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்படும். மனிதாபிமான அடிப்படையில் தகுதியானவர்களுக்கு மட்டும் பொதுமன்னிப்பு வழங்கப்படும். இதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிப்பார் என எதிர்பார்க்கிறோம்' என்று தெரிவித்தார்.

இதனால் பாகிஸ்தானில் மரண தண்டனை நிறைவேற்றுவது மீண்டும் விரைவில் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கடும் எதிர்ப்பு**

பாகிஸ்தான் அரசின் இந்த முடிவுக்கு சர்வதேச பொதுமன்னிப்பு உரிமை இயக்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. 'இது அதிர்ச்சி தருகிறது. பிற்போக்கு எண்ணம் கொண்டதாகும்' என கண்டனம் செய்துள்ளது. மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், பல ஆண்டுகளாக தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. இப்போது தண்டனையில் இருந்து அப்பாவிகளை விடுவிப்பது என்பது கடினமான காரியம் என்றும் கூறுகிறார்கள். (செ-2)



சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சுவிஸ் நாட்டு அமைச்சர் ஜோகன் [illegible] வர்த்தகத்துறை அமைச்சர் காவோஹுசெங் அம்மான் ஆகியோர் தலைநகர் பீஜிங்கில் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம் அமைக்கப்படாமையால் பயணிக்கமுடியாத நிலை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட அம்பாள் குளம், பாரதிபுரம், மலையாள புரம், விவேகானந்த நகர் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதியான அம்பாள்குள வீதி போக்குவரத்துச் செய்யக் கூடிய நிலையில் இருந்தும் மயில மரச்சந்தியிலுள்ள பள்ளத்திற்கு பாலம் அமைக்கப்படாமையால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி விபுலாந்தர் பாடசாலை, கிளிநொச்சி பாரதிபுர பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் அம்பாள் வீதியினையே பாவிக்கின்றனர்.

விபுலானந்தர் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் உள்ள பள்ளத்தினால் தற்போது போக்குவரத்துச் செய்யக் கூடியதாக உள்ள போதிலும் மழை பெய்யும் பட்சத்தில் நீர் பள்ளத்தில் நிறைவதால் ஆபத்தான நிலையிலும், சிக்கலான நிலையிலுமே மாணவர்கள் உட்பட பொது மக்களும் பயணிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்ட போதும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

எனவே இப்பள்ளத்திற்கு உடனடியாக பாலம் அமைக்க முடியாத பட்சத்தில், நீர் வழிந்தோடக் கூடியவாறான குழாய்களையேனும் பொருத்தி தருமாறு அப்பகுதியிலுள்ள அனைத்து கிராமமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ம-9-254)




# பொருளியல் பாட கருத்தரங்கு

(பூந்தோட்டம்)

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு இவ்வாண்டு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியில் பாட பரீட்சை முன்னோடி கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்முன்னோடி கருத்தரங்கின் வளவாளராக யாழ்.மண்ணின் பிரபல பொருளியல்பாட நிபுணர் வரதராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களில் இருந்து பொருளியியல்பாட பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வவுனியா தெற்கு வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் எஸ். தேவதாஸ் அறிவித்துள்ளார். (ம-266-250)

# கார் தடம் புரண்டதில் சாரதி காயம்

கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த கார் முகமாலைப் பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த வேளை முகமாலைப் பகுதியில் காரின் சில்லு காற்றுப் போனதன் காரணமாகவே தடம் புரண்டுள்ளது. இதில் சாரதி காயமடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாணிக்கவளவின் ஊடாக கள்ளிக்குளம், சிதம்பரம், காயன்குளம் ஊடாக 8இற்கு மேற்பட்ட கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதியை திருத்தம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக திருத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படும் இவ்வீதியை 1500 தொடக்கம் 2000 வரையான மக் கள் அன்றாடம் பயன்படுத்தும் போதிலும் கடந்த சில ஆண்டுகளாக வேறு பிரதேசங்களில் உள்ள வீதிகளை செப்பனிடுவதற்காக கல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் இவ் வீதியை பயன்படுத்தியமையினால் மிக மோசமாக இவ்வீதி சேதமடைந்துள்ளது என தெரிவிக்கின்றனர்.

1990ஆம் ஆண்டு மக்கள் இக் கிராமத்தில் இருந்துஇடம்பெயர்ந்து 1995ஆம் ஆண்டு காலப்பகுதி யில் மீள்குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் இவ்வீதி பாரிய அளவில் சேதமடைந்திருக்கவில்லை எனவும் தற்போது கல் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களே இவ்வாறு பாரிய குன்றும் குழியும் ஏற்பட காரணமாகியுள்ளது எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை பாடசாலைகள், முன்பள்ளிகள் இவ் வீதியில் அமைந்துள்ளமையினால் மாணவர்கள் வகுப்பறைகளில் இருந்து கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத அளவிற்கு தூசு படிவதாகவும் மழை காலங்களில் வீதியில் செல்ல முடியாத படி வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் மாணவர்கள் பெரும் துன்பத்திற்கு முகம்கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

வீதியில் மின் குமிழ்கள் இல்லாத காரணத்தினால் வீதிகளும் சேதமடைந்திருப்பதனால் இரவு நேரத்தில் பலரும் விபத்தை சந்திப்பதாக தெரிவிக்கும் இம் மக்கள் தமக்கு அதிகாரிகள் வீதியை திருத்தம் செய்து தருவதற்கும் கனரக வாகனங்கள் செல்வதை தடை செய்யவும் ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-266)

# ஹயஸ்-மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் காயம்

கிளிநொச்சி இரணைமடு பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் ஹயஸ் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து இரணைமடு நோக்கி கணவனும் மனைவியும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது யாழிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம் பெற்றது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குணசிங்கம் (வயது54) என்பவர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில், தனலட்சுமி (வயது 50) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைகிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-9-259)



தேசிய டெங்கொழிப்பு செயற்றிட்டம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் புளியங்குளம் வடக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எம்.எம். இர்சாத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களுடன் இணைந்து புளியங்குளம் இந்துக் கல்லூரி, புதூர் மற்றும் முத்துமாரி நகர் முன்பள்ளி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டதை படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# அழிவடைந்து செல்லும் மட்பாண்ட உற்பத்தியை அழிவில் இருந்து காக்க முன்வரவேண்டும்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் சிறு கைத்தொழிலாளர்கள் தொகையானது குறைவடைந்து செல்வதுடன் அவர்களுக்கான ஆதரவுகளும் பெரியளவில் இல்லை என சிறு கைத் தொழில் முயற்சியாளர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், ஆண்டாண்டு காலமாக எமது முன்னோரால் பேணப்பட்டு வந்த மட்பாண்ட கைத்தொழிலானது இன்று அழிவடையும் நிலையை நோக்கி செல்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம், தோணிக்கல், கோவிற்குளம் ஆகிய பகுதிகளில் மட்பாண்ட கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் போதுமான வருமானமின்மையால் அவர்களும் தமது கைத்தொழில் நடவடிக்கையை கைவிடும் நிலையில் உள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள சிலர் தமது ஜவனோபாய தொழிலாக மட்பாண்ட தொழிலை மேற்கொண்டாலும் தமக்கு போதுமான சந்தை வாய்ப்பில்லை என ஆதங்கப்படுகின்றனர்.

பொங்கல், ஆலயத்திருவிழா போன்ற பண்டிகை காலங்களில் மாத்திரம் மட்பாண்ட பொருட்கள் விற்பனை அதிகமாக இடம் பெறுவதாகவும் எனினும் தற்போது ஆலயங்களில் பொங்கல் நிகழ்வுகளிலும் அலுமினிய பொருட்களே அதிகளவில் பயன்படுத்த தொடங்கியுள்ளமையினால் தாம் பொருட்களை விற்பனை செய்வதற்கு சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மட்பாண்ட உற்பத்திக்கான பசைத்தன்மையான மண்ணை பெற்றுக்கொள்வதிலும் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கும் மட்பாண்ட உற்பத்தியாளர்கள் தற்போத அதிகளவான சில்வர், அலுமினிய பாத்திரங்கள் பாவனைக்கு வந்துள்ள போதிலும் அதிலுள்ள தீமைகளை புரியாத மக்கள் அத னை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே மட்பாண்ட உற்பத்தி யாளர்களை வறுமையில் இருந்து மீட்பதற்கும் மட்பாண்ட உற்பத்தி அழிவடைந்து செல்லாதிருக்கவும் அதிகாரிகள் ஏதுவான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும். (ம-266)

# கால்நடைகளை கட்டுப்படுத்த விவசாயிகள் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பல்லவராயன் கட்டு கிராமசேவகர் பிரிவின் கீழ் கரியாலை நாகபடுவான் குள நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 500க்கு மேற்பட்ட ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கால்நடைகளின் தொல்லை அதிகமாகவுள்ளது.

இப்பகுதியிலுள்ள பண்ணையாளர்களின் பெருந் தொகையான கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத நிலையில் பெரும் அழிவை சந்தித்து வருவதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார். இப்பகுதி கால் நடைகள் கட்டாக்காலியாக இரவு, பகலிலும் சுதந்திரமாக நடமாடி அழிவை ஏற்படுத்துகின்றது.

இது சம்பந்தமாக கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டிய கமக் கார அமைப்பினர் உரிய நட வடிக்கை எடுக்கவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


கதிர்கள் குடலையாகவுள்ள நிலையில் கால்நடைகள் உட்புகுவதால் பெரும் அழிவு ஏற்படுவதாகவும் இது சம்பந்தமாக கமக்கார அமைப்பினரோ கமநல சேவை திணைக் களமோ உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென சிறுபோக விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வேடமா?

மூன்றடுக்கு பாதுகாப்போட துப்பாக்கி ஏந்திய வீரர்கள் இரவும் பகலுமாக யாருக்கு காவல் புரிந்தார்கள்? இந்த தர்பார் நாடகம் எதற்காக நிகழ்ந்தது என்ற கேள்விகளுக்கான பதில்களை அறிகிறபோது ஆச்சரியமே மேலிடுகிறது!

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக்



கல்லூரியில் இலங்கை இராணுவ வீரர்கள் இருவருக்கு பயிற்சி கொடுப்பதற்குத்தான் மேற்கண்ட கெடுபிடிகளை அதிகாரிகள் காட்டியுள்ளார்கள். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த கொமாண்டர்கள் எம்.எஸ்.பாண்டாரா தசநாயகே, மேஜர் ஹரிஷ் சந்திரா ஹெட்டிராச்சிஹே ஆகிய இருவரும் 10 மாதங்கள் பயிற்சி பெறுவதற்கு இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என தமிழகத்தில் பல அமைப்புகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற சூழ்நிலையில் இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ் மண்ணிலேயே பயிற்சியா? இதனை எப்படி அனுமதிப்பது என்ற கோபத்தினை தமிழக முதலமைச்சரும் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்தி இருந்தார். முன்னாள் முதலமைச்சர் உட்பட தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இலங்கை வீரர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கடலூர், பந்தலூர் பகுதிகளில் கடை அடைப்பு நடத்தி வியாபாரிகளும் அதற்கு ஆதரவு தெரிவித்து பொதுமக்களும் போராட்டத்தில் குதித்தனர். ஆட்டோ, மினிபஸ், அரசு பஸ் என்று எந்த வாகனமும் ஓடவில்லை. இத்தகைய போராட்டங்களை மத்திய அரசு எப்படிப் பார்க்கிறது என்பதை கவலையோடுதான் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசியல் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் சில முக்கியப் பகுதிகள் திட்டமிட்டே நீர்த்துப் போகும் வகையில் இலங்கை அரசு நடந்து வருவதாக ஒரு முறை இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார். அதற்காக அவர் வருந்துவதாகவும் அவரே குறிப்பிட்டார்.

அதன் பொருளை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். ராஜீவ்–ஜெயவர்த்தனே ஒப்பந்தம் மரியாதை அளவில் கூட மதிக்கப்படாமல் இலங்கை அரசால் வெற்றுக் காகிதமாகக் கருதி குப்பைக்கூடையில் எறியப்படுகிறது.

சர்வதேச அளவில் கடும் கண்டனத்திற்கு ஆளாகி இருக்கும் இலங்கை அரசு வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாதபடியால் மாகாண சபையையே ஒழிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

அதற்கான சட்டத்திருத்தங்களையும் கொண்டுவர முயற்சித்து வருகின்றது.


அப்பகுதிகளில் தேர்தலே நடத்தக் கூடாது என்றும் இருக்கிற குறைந்தபட்ச உரிமைகளையும் பறிக்க வேண்டும் என பகிரங்கமாக ஆளும் தேசிய சுதந்திர முன்னணி அமைப்பினரும் அங்குள்ள அமைச்சர்கள் சிலரும் பேசி வருகிறார்கள்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிகாரம் கொடுத்தால் புலிகள் நாட்டைத் துண்டாடிவிடுவார்கள் என அப்போது பயந்தார்கள். இப்போது அங்கு மாகாண சபையே தேவையில்லை என்று பேசி வருகிறார்கள். தமிழர் தரப்பு தொடர்ந்து

**இனி இலங்கை வீரர்களுக்கு பயிற்சி கொடுக்க மாட்டோம் என மத்திய அமைச்சர் முதல் நாள் பேசி விட்டுச் செல்ல அடுத்த நாளே பயிற்சி வழங்கப்படுகின்றது**

இலங்கை அரசால் ஏமாற்றப்பட்டு வருகிறது என்று ஆளும் சுதந்திர கூட்டமைப்பின் முக்கிய அமைச்சர்களே ஊடகங்களில் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

போர்ப்படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கக்குழு தன்னுடைய பரிந்துரையாக வைத்திருந்த மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வினை அளிக்கும் அரசியல் தீர்வு என்ற நோக்கத்துக்கு இலங்கை அரசு இன்னமும் வரவில்லை. ஆகவே இந்திய அரசு இப்பிரச்சினையில்



தலையிட வேண்டும் என சி.பி.எம்., எம்.பி. சீத்தாராம் யெச்சூரி பிரதமருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

இலங்கை அரசின் போர்க்குற்றம் சர்வதேச அளவில் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழக மாணவர்கள் நடத்தி நெடிய போராட்டம், கல்லூரிகள் காலவரையற்று மூடப்படக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. இது தமிழக அரசியலின் முக்கிய தாக்கத்தையும் உருவாக்கியது.

தமிழக மீனவர்களின் மீதான ஈவிரக்கமற்ற தாக்குதலை இப்போதும் இலங்கை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். தமிழக முதலமைச்சரின் கடிதத்தில் கூட இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமை மீறலை கைவிடாத தமிழ் நாட்டு மீனவர்களின் மீதான தாக்குதல் நிறுத்தப்படும் வரை இலங்கை இராணுவத்திற்கான பயிற்சி வழங்க இந்திய அரசு ஒப்புக் கொள்ளக் கூடாது என்பதைச் கட்டிக் காட்டியுள்ளார்.

இத்தகைய சூழல்களை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்ள முன்வராத மத்திய அரசின் வர்த்தக தொழில்துறை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் இலங்கைக்கு இந்திய பயிற்சி தராவிட்டால், சீனாவிற்குச் சென்று பயிற்சி பெறுவார்கள். அப்படிப் பயிற்சி கிடைத்தால் இலங்கை இன்னொரு பாகிஸ்தானாகிவிடும். இதையெல்லாம் தடுப்பதற்குத்தான் பயிற்சி கொடுக்கிறோம் என அவர் அளித்த விளக்கம் பலரின் கண்டனத்திற்கும் ஆளாகியது.



இது அவரின் சொந்த விளக்கமா? அரசின் சார்பான விளக்கமா என்பதை மத்திய அரசுதான் தெளிவுபடுத்த வேண்டும். அமைச்சின் விளக்கம் இவ்வாறு இருக்க... மே 26 இல் தஞ்சையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி தமிழக மக்களின் உணர்வைப் புரிந்து வைத்துள்ளோம். தமிழக மக்களின் உணர்வுக்கு எதிராக இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டார்.

என் பேச்சை நானே கேட்கமாட்டேன் என தமிழ் சினிமாவின் ஹீரோக்கள் வசனம் போல் அமைச்சரின் வார்த்தைகள் அமைந்து விட்டது. அவர் பேச்சை அவரது பாதுகாப்புத்துறையே காதில் போடவில்லையா? அல்லது தமிழகத்திற்கு வந்ததால் அவர் அப்படிப் பேசினாரா என்பதற்கு சரியான விளக்கம் அவர்தான் கூறவேண்டும்.

குன்னூரில் உள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு பல நாடுகளைச் சேர்ந்த இராணுவவீரர்கள் பயிற்சி பெற வருவது வழக்கமான ஒன்றுதான். ஆனால், இலங்கை இராணுவம் தமிழ் மண்ணில் வந்து பயிற்சி பெறுவதும் இந்திய அரசு பயிற்சி அளிப்பதும் தமிழக மக்களின் மன நிலையில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்பதை உணராத அரசாகவே மத்திய அரசு உள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சரான ஜி.கே. வாசன், மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் போர்ப் பயிற்சி நிறுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

27 நாட்கள் வழங்கப்பட்ட பயிற்சி, பல அமைப்புக்களின் போராட்ட நடவடிக்கையால் முடிபுக்கு வந்தது. இராணுவ அதிகாரிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இது இலங்கை- இந்தியாவின் உறவுகளைச் சீரமைக்க பயன் படாது என இலங்கை பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களின் வாழ்வுரிமையும் அரசியல் உரிமையும் கேள்விக்குறியாகும் நிலை தொடர்ந்தால் இந்திய- இலங்கை உறவு எப்படிச் சீர்படும்? மென்மேலும் மோசமாகும்.

இந்திய அரசின் மீதான நம்பகத்தன்மையை தமிழக மக்கள் இழந்து வருகிறார்கள். இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வு வேண்டுமென வலியுறுத்திய பாரதப் பிரதமர் அதற்கு நேரெதிரான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் இலங்கை அரசிடம் மௌனம் காக்கிறார். தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து இனி இலங்கை வீரர்களுக்கு பயிற்சி கொடுக்க மாட்டோம் என மத்திய அமைச்சர் முதல் நாள் பேசிவிட்டுச் செல்ல அடுத்த நாளே குன்னூரில் பயிற்சி வழங்கப்படுகின்றது.

மத்திய அரசின் முரண்பட்ட மொத்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே குட்டி காஷ்மீராக குன்னூரை மாற்றி இலங்கை வீரர்களுக்கு இந்திய அரசு பயிற்சி கொடுத்தது. கடுமையான எதிர்ப்புக்களைச் சமாளிக்க முடியாமல் பலத்த பாதுகாப்போடு இலங்கை வீரர்களை திருப்பி அனுப்பியதும் நிகழ்ந்தது.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்ததாக இந்த நடவடிக்கையை மத்திய அரசு கூறிக் கொண்டாலும் வருகிற நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்துத்தான் இலங்கை இராணுவ வீரர்களைத் திருப்பி அனுப்பினார்கள் என்பது யாவரும் அறிந்த விடயம்தானே.

குமுதம் ரிப்போர்ட்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட பழக்கங்களை விட நல்ல பழக்கங்களை விடுவது சுலபம். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# குயில் இனத்தைச் சீரழித்த பரத்தையர்ப் பண்பாடு

பறவை இனத்தில் குயிலினம் பாவப்பட்டவை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

பறவைகளில் பாவப்பட்டவை குயிலினம் என்று ஏன் கூறுகிறீர்கள் என நீங்கள் கேட்பதும் நம் செவிகளில் ஒலிக்கவே செய்கிறது.

என்ன செய்வது! குயில்கள் கூடுகட்டி தம் முட்டைகளை அடைகாத்து, குஞ்சு பொரித்து, அந்தக் குஞ்சுகளுக்கு தாயும் தந்தையுமாக உணவூட்டும் பெரும் பாக்கியம் இல்லையல்லவா?

இந்த உலகில் இருக்கக்கூடிய இன்பம் தம்குஞ்சுகளின் - குழந்தைகளின் மழலை மொழிதனைக் கேட்பதுதானே.

அவ்வாறாயின் காகத்தின் கூட்டில் முட்டையிடும் குயில்களுக்கு குஞ்சுகளை ஆரத்தழுவும் சந்தர்ப்பம் கிடைக்கவே கிடையாது.

இது வேதனைக்குரியதுதானே! ஆதலால் தான் குயிலினம் பாவப்பட்டவை என்று கூறினோம்.

இப்போது உங்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகம் குயில்களால் கூடுகட்ட முடியாமல் போனமை ஏன்? என்பதாகும்.

கூடுகட்டி அதில் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்கும் பறவை இனங்களிடம் கற்பியல் ஒழுக்கம் உண்டு.

அதாவது ஒரு பெண் பறவை ஒரு ஆண் பறவையுடன் மட்டுமே குடும்பமாய் வாழும்.

இந்த ஒழுக்கவியல் பண்பாட்டின் காரணமாக கூடுகட்டுவதில் ஆண் பறவைகள் கடினமாக உழைத்து கூட்டை கட்டி முடிக்கும்.

ஆனால் குயில்களிடம் கற்பியல் ஒழுக்கம் இல்லை. அவை பரத்தையர் பண்பாட்டைக் கொண்டவை.

இன்று ஒரு ஆண் குயில், நாளை இன்னொன்று என்பதாக பெண் குயில்களின் வாழ்க்கை இருப்பதால் கூடு கட்டுவதற்கு ஆண் குயில்கள் முன்வருவதே இல்லை.

அதாவது ஒன்றெனில் ஒன்று; என்ற ஒழுங்கு குயில்களிடம் இருப்பதில்லை. இதனால்தான் அவை கூடு கட்ட முடியாமல் போய்விடுகின்றன.

இது மட்டுமல்ல. குயில்களிடம் இன்னுமொரு பலவீனமும் உண்டு. அதாவது ஒரு குயில் கூவும் போது, யாராவது ஒருவர் அதேபோல் கூவினால், தன் இனம் கூவுவதாக நினைத்து உரக்கக் கூவும் உதவத்த பழக்கமும் குயில்களுக்கு உண்டு.

இத்தகைய இயல்பினால் குயில்கள் தமக்கென ஒரு கூடு, தமக்கென ஒரு வாழ்க்கை என்பதை அமைக்க முடியாத பறவையினமாக வாழ்ந்து போகின்றது.

குயில்களின் பரத்தைப் பண்பாட்டினாலேயே அவை கூடு கட்ட முடியாமல் போயின என்ற கண்டுபிடிப்பின்ய சொந்தக்காரர் நாம் மட்டுமே என்பதையும் நினைவில் கொள்க.

# தேசிய பிரச்சினைக்கு தீர்வின்றி காலத்தை கடத்தவே தெரிவுக்குழு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் அரசாங்கத்திடம் உறுதியான நிலைப்பாடு எதுவும் கிடையாது. காலத்தை கடத்துவதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற நாடகத்தை அரங்கேற்றுகிறது என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்து கிறது.13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று தேசிய பிரச்சினைக்கான தீர்வொன்றினை முன்வைப்பதாக இந்த அரசாங்கம் உறுதியளித்தது.ஆனால் இன்று மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களையும் நீக்குவதற்கு முயன்று வருகிறது. எனவே உறுதியான எந்த நிலைப்பாடுமில்லாத இந்த அரசாங்கத்தை நம்பி எப்படி நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய பிரச்சி னையை தீர்ப் பதற்காகவே இலங்கை-இந்திய ஒப்பந்தத் தின் மூலம் மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது.இந்த முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்னோக்கி போக வேண்டுமே தவிர அதனை வலுவிழக்கச் செய்யக்கூடாது.

இரு நாடுகள் சேர்ந்து உருவாக்கிய ஒப்பந்த மொன்றினை ஒரு நாடு தன்னிச்சையாக நீக்க முடியாது. நீக்கவும் கூடாது. அதில் திருத்தங் களை அல்லது மாற்றங்களை கொண்டுவர வேண்டுமென்றால் இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகளை நடத்தியே இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

13 ஆம் திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை அப்படியே நடைமுறைப்படுத்த வேண் டும் என இந்தியா உறுதியாக கூறியுள்ளது. ஆனால் இந்த அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன செய்யப் போகின்றது என்பது தெரியவில்லை. 13 விடயத்தில் இந்த அரசாங்கம் தன்னிச்சையாக முடிவெடுத்தால் அது இலங்கை-இந்திய உறவில் விரிசலை தோற்றுவிக்கும்.

அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய பிரச் சினைக்கு தீர்வினை எட்ட முடியும். மாறாக அதிகாரப் பகிர்வால் நாடு ஒரு போதும் பிரியப் போவதில்லை.மாறாக நாடு ஐக்கியப்படும் என்பதை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். நாடுகள் பிரிந்த மற்றும் இணை ந்த வரலாறுகளை எடுத்துப் பார்த்தால் இது நன்கு புரியும்.

2009 ஆம் ஆண்டில் இருந்து 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதாக கூறிய அரசாங்கம் இன்று அதற்கு மாறான ஒரு கருத்தினை கூறிவருகிறது. எனவே தேசிய பிரச்சினையினை தீர்ப்பதில் இந்த அரசாங்கம் உறுதியான நிலைப்பா ட்டை கொண்டிருக்கவில்லை என்பது தெட்டத் தெளிவாக தென்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (செ-2)

# மனித உரிமைகள் தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்

## இலங்கை குறித்து அமெரிக்கா கருத்து

(வாஷிங்டன்)

இலங்கை மனித உரிமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு நாடு என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 23-வது கூட்டத் தொடரில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்கப் பிரதிநிதி எலீன் பொனாஹோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் கவனத்தை மனித உரிமைகள் விடயத்தில் ஈர்ப்பதற்காக நடைபெற்ற பொது விவாதத்தின் போது அமெரிக்கா பல்வேறு நாடுகள் தொடர்பில் தகவல்களைச் சமர்ப்பித்திருந்தது.

மனித உரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதிகளுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் அமெரிக்கப் பிரதிநிதி எலீன் டொனாஹோ இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கு உள்ள உரிமை இலங்கையில் தொடர்ந்தும் மீறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள், பொது செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பகைமை உணர்வுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் நம்பகத் தன்மையுடன் கூடிய விசாரணையோ அல்லது சட்ட நடவடிக்கையோ மேற்கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-2)

# துணுக்காய் யோகபுரம் கிழக்குக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய் யோகபுரம் கிழக்கு திருவள்ளுவர் நகருக்கு மின்சாரம் வழங்கப்படாததால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

யோகபுரம் கிழக்குப் பகுதியில் சுமார் 115 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இக் கிராமத்தின் ஒரு பகுதிக்கு கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டது.

எனினும் சுமார் 55 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாததால் அவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மின்னிணைப்பு முதலில் வழங்கப்பட்டதிலிருந்து இன்றுவரை விரைவில் அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என அரச அதிகாரிகள் உறுதியளித்து வருகின்றனர். ஆனால் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எமக்கு மின்சாரம் வழங்கக்கோரி முல்லைத்தீவு அரச அதிபரிடமும் பலமுறை முறையிட்டுள்ளோம். ஆனால் எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மின்சாரம் வழங்கப்படாத நிலையில் யோகபுரம் கிழக்குப் பகுதியில் திருவள்ளுவர் நகர் அடங்கலாக சுமார் 55 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

எமக்கு மின் இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவன செய்ய வேண்டும்.

பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் என பலர் எமது கிராமத்தில் வசித்து வருகின்றனர்.

மின்சாரம் வழங்கப்பட்டிருந்தால் அது அவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியாக இருக்கும்.

எனவே எமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்க உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என யோகபுரம் கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அருள் தொண்டு



எனது பரு உடல் இயங்கிக்கொண்டிருந்த போதிலும் அதிலிருந்து எழுந்து விரிந்து இயங்கிக்கொண்டிருக்கும் அறிவு, உலக முழுவதும் அன்பு ஊற்றாக நிறைந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. சில குறிப்பிட்ட வேளைகளில் பேரியக்க மண்டலம் முழுவதும் நிறைந்து பேரமைதியில் திளைத்துக் கொண்டிருக்கிறது.

விரிவால் அமைதி துய்க்கும் அறிவு தன் விழிப்புநிலை பெற்று தனது பற்றறிவு, கற்றறிவு, முற்றறிவு எனும் தனது மூன்றடுக்க இயக்க நிலைகளையும் உணர்ந்துகொண்டபின் அதே அறிவு ஏதோ ஒரு பொருள்வரையில் அல்லது உயிர்கள் வரையில் எல்லை கட்டி இயங்கும்போதுதான் இரக்கம், அன்பு, ஒழுக்கம், கடமை, தியாகம் இவையெல்லாம் பிறக்கின்றன.

இதே அறிவு விரிவு பெற்று அமைதி காணாமுன்னம் உயிர்களிடத்தும் பொருட்களிடத்தும் எல்லைகட்டிய போது அறுகுணங்களாகவும் துன்பம் விளைக்கும் பாவச் செயல்களாகவும் உருவெடுக்கின்றன. இவ்வாறு நீண்டகால அறிவின் தொடரியக்க சரித்திரம் முழுவதும் நினைந்து நினைந்து வாழ்வில், செயல்களில், பொறுப்புணர்ச்சி பெருகிக் கொண்டிருக்கிறது.

அறிவின் விளக்க ஒளியோடும் அனுபவங்களின் சிறப்பான பொறுப்புணர்வோடும் உங்களில் ஊடுருவி நிறைந்து உங்களில் ஊறிவரும் அன்பின் வெள்ளத்தில் திளைத்துக்கொண்டிருக்கின்றேன். இத்தகைய உயிர்த்தொடர்பால் அறிவின் ஒருமைப்பேற்றால் எனது அருள் தொண்டில் நீங்கள் அனைவரும் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III நேர்முகத் தேர்விற்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III இல் ஆட் சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட் சையின் பெறுபேறுகளிற்கமைவாக மாவட்ட அடிப் படையில் நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய் யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து அம் மாவட்டங்களின் பிரா ந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நடைபெறவுள்ளதாக வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஆர். எஸ்.துரைராஜா அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட் டோர் அன்றைய தினம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி, திருமணமான பெண் நேர் முகதாரியாயின் விவாகச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, கல்விச் சான்றிதழ்களான க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) ஆகியவற்றின் பிரதிகள், கிராமசேவை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான் றிதழ்/வதிவிடச் சான்றிதழ். (2013.04.12 ஆம் திகதிக்கு முன்னர் உள்ள 6 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு களாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சி யாகவசித்தமை உறுதிப்படுத்தப்பட வேண் டும்), மாற்றுத்திறனாளியாயின் அது பற்றி மருத்துவச் சான்றிதழ், வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி, குடும்ப அட்டை மூலப் பிரதி ஆகியவற்றின் ஆவணங்களுடன் சமு கம ளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். இதன் பிர காரம் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் நேர்முகத் பரீட்சைக்கு தெரிவு செய் யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாணம்**

குமாரவேல் காண்டீபன் - 842792770V, செந்தூரன் சுஜிதா-846513060V, கந்த சாமி கரிசாந்தி-897301717V, இம்மானு வேல் யேசுரட்ணம் லோறா ஜெறோஜினி - 93 7233078V, தியாகராஜா மயூரதி - 907 981606V, கிருபானந்த கிருஷ்ணன் பிரிய ங்கா-907452476V, சரவணபவானந்தன் மதியழகி -896390040V, தங்கராசா வெனிகா-918011315V, இனியாழ் சிறிக ரன்-918421033V, தேனுயா குகராசா-92 8553280V, முகுந்தன் வினோகா -857 903153V, கனகலிங்கம் பிருந்தன் -923 511610V, தனுஜியா வீரசிங்கம் - 8560 20746V, வேலாயுதப்பிள்ளை வானதி- 93 5891337V, கணேசு நிலானி- 927882 861V, இருத்யதாஸ் நிருபன்-8818603 50V, குகேசன் கஜனி-907842215V, தவராஜா பவித்ரா - 925973971V, சக்தி தாஸன் சோபிகா - 915153038V, விஜிதா மகேஸ்வரன் - 866592071V, தேவராஜா மனோசாந்தன் - 901512833V, கணேச மூர்த்திமாலினி - 915431178V, சிவபாக்கிய நாதன் சிவசொரூபி-897631628V, விஜய குமார் சகிலா- 878061489V, இராசநாயகம் அனோஜிதா - 945060115V, சின்னத்துரை சிவவதனி - 926282867V, தேவராஜா தர்சினி - 885953344V, குணராசா ஜெய் சினி - 937723113V, மேரி டினோகா வசந்த சந்திரன் - 898430227V, சதானந்தன் ஜெனிற்றன் - 932392631V, சர்வேந்திரன் தர்சானன் - 841734254V, யாகதர்சன் சுபிதா- 865091869V, மதுராதர்மலிங்கம் - 90 5140140V, கிருத்திகா தர்மராஜா - 9154 42757V, நடராஜசுந்தரம் சங்கீதா- 92 7542412V, தெய்வராஜா சியாமினி - 928 041506V, தர்மலிங்கம் சார்னியா - 898 252370V, தவராஜசேகரன் சுகன்யா -93 7472919V, நாகேஸ்வரநந்தம் கசாலட்சுமி - 898520471V, தவலாதன் சிவசக்தி - 92 8120716V, ஜெயச்சந்திரா ஜெயரதி - 90 6722992V, பூலோகம் அரவிந்தன் - 910 061801V, பாஸ்கரன் தாரணி - 925 331252V, கந்தசாமி சங்கீதா - 877 543897V, கந்தசாமி லோகநாதன்-850 852600V, தர்மிகா திசநாயகம் பிள்ளை - 88 7371750V, ஜெயரட்ணம் மேனகா - 92 5782769V, பாலசுப்பிரமணியம் -793 522100V, சந்திரகுமார் சரண்யா - 896 583344V, தனுஸ்கா ஆனந்தேஸ்வரன் - 89 6582283V, இரத்தினசிங்கம் ஜெயதர்சன்- 87 1253722V, பத்மனாதன் ஜனனி- 90 6363429V, பாலசுப்பிர மணியம் மேகலா -91 8614362V, நவரட்ணம் ராஜலஷ்சுமி- 89 6493582V, உலகநாதன் சுகிர்தா -905 883879V, அன்ரன் ராஜநாயகம் மேரி வினித்தா -898170624V, தனேஸ்வரன் கௌசிகா - 908021347V, சிவானந்தம் மிதுனா - 907892069V, கஜேந்திரன் கல்பனா - 895200247V, ராமச்சந்திரன் லலிதினி- 867112421V, பாலகிருஸ்ணன் சதிஸ்குமார்- 850624208V, ஜெயராஜா சுவர்ணா -908014502V, ஜெயரட்ணம் யசிந்தா- 885171133V, சதாசிவம் பிரிய தர்சினி-856813266V, புண்ணிய மூர்த்தி மயூரன்- 901792895V, கன்யூட் ஷாலினி -886382766V, தம்பிராசா ராஜி - 847 581999V, குமாரசாமி ஜனனி -906342 847V, பாலேந்திரன் மதுசூதன் -93287 1670V, ஆனந்தன் நடராசா தேவானந்தா -86 1092267V, நிரோஜனா சிறிதரன் - 93 8403139V, பகிரதன் சிறிசிவகாமி - 83 6493214V, கனகலிங்கம் ஹரிசங்கர் - 91 3121325V, ஜெயக்குமார் கஜேந்தினி- 9161 01619V, வரதராஜா கஜனி - 926752561V, பிரான்சிஸ் சேவியர் கமிற்றா சுயவதி - 91 5853102V, ஆறுமுகநாதன் பகீரதன் - 833601083V, நிரூபா மயூரதன் -867111 980V, ராஜேந்திரம் சர்மிளா -897043 238V, பானுமதி பொன்னம்பலம்-8456 64544V, கிறிஸ்ரியன்சன் ஆன் கிறிஸ் ரேபில் - 877561488V, வரதராஜா ஜெனன் - 922242976V, ரத்தினேஸ்வரன் ராஜ்பாரதி - 921083084V, பாலச்சந்திரன் பிரணவன் - 910331155V, ஜெயந்திரன் நியந்தன்- 871 982902V, பாரதிதாஷன் தேனுசா -93 7712464V, தர்மகுலசிங்கம் வினோசியா - 88 6382545V, யோகநாதன் பபிதா- 89 7493195V, மதிவதனி விநாயகமூர்த்தி - 88 5643060V, தங்கராசா உசாந் -8707 43173V, நாகேஸ்வரன் நந்தன் கலை வேணி - 878070933V, சுரேக்கா சிவபாத சுந்தரம் - 895833991V, கமலநாதன் ஜெனி- 895824852V, துளசி முருகதாஸ் - 917292663V, புஸ்பராஜா தூரிகா- 93 5101883V, ஜெயந்தி அருளானந்தம் - 93 8271291V, உதயகுமார் ரோகினி - 89 7651467V, மருதைனன் சிறிதரன் - 89 1783264V, அழகதுரை லோஜிதா - 86 6842116V, ராஜதுரை தர்ஷினி-88515 2007V, குலராசா விஜிதா- 935413230V, பஷில் உஷாந்தி - 927341360V, சௌந் தராஜா தர்ஷிகா-928300692V, சிவஞான வேல் சர்மிளா -927292556V, ஜஸ்மிளா ஹலொக் ஞானநாதன் - 915433081V, ரத்தினசபாபதி லக்சிகா -865151551V, ஜெயகுலராஜா கொலின் -850743002V, சற்குணராஜசர்மா சன்மதுரன் - 93314 1551V, கவிதா கம்சன்- 888040498V, வைஷ்ணவி கருணாசேகரம் - 897612 755V, சுந்தரம் தரனிகா - 927542323V, செல்வராசா ஞானகௌரி- 936522882V, ராஜரத்தினம் பவித்ரா -897001489V, அருண்குணபாலசிங்கம் சுசீபன் - 8528 62068V, தொலொந்தினோ நீக்லஸ் மேரி பிருந்தா-906892170V, பிறேமரத்தினம் சுகந்தினி- 927582473V, ராஜரத்தினம் பிரதீபன் - 910612271V, வேலும்மயிலும் ரமணன் - 871040109V, ஜெயராசா மதி சாலி - 927402556V, சிவயோகம் கிருஷ் ணமணி- 737022552V, செல்வராசா அனிதா - 908440579V, தங்கராசா ஜெய ரதி - 936663761V, சாலினி மதன்ராஜ்- 88 7261695V, பாலகிருஷ்ணன் காவேரி -92 6811487V, அருமைராசா கோகிலன் - 85 1454489V, பரந்தாமன் லங்கேஸ் -92 2871825V, சண்முகலிங்கம் வனோஜினி - 907292746V, சிறிதர் சுகன்யா -93 7762615V, ராஜேந்திரன் பிரியதர்சினி -88 8381589V, துரைராசா நேசராஜ்- 93 0751103V, சிறிகாந்தன் ஆராதனா - 93 7552793V, சற்குணலிங்கம் நிவேகா - 92 6161334V, தவகுலரட்ணம் பிரசாந் -93 0391212V, வரதராசா தர்மிலா - 927 233924V, சச்சிதானந்தம் ஜீவிதா-888 232001V, நாகரட்ணம் வெங்கடேஸ்வரா- 890241930V, தேவராஜா சுதர்சினி -84 8122840V, ரத்தினசிங்கம் தர்சியா - 92 8051242V, கமலநாதன் தினேஸ் -87 2202676V, மரிட் அல்போன்ஸ் மேரி அனிற்றா -936423825V, ஆனந்தஜோதி சுமங்கலி - 898491102V,

**கிளிநொச்சி**

அழகையா நிருபன்-92030443V, ராஜன் டக்சலா-917891540 V, ஜெயராஜ சிங்கம் கோபிகா-936902774V, நந்தினி சிவகுமாரன்-878540190V, நடராசாநயோதா -915671314V, பாலசுப்பரமணியம் பூவேந் தன்-841874838V, தயானி விமலரத்தி னம் - 936034799V, பாலசிங்கம் மயூரன்- 892993165V, விக்னராஜா கார்த்திகை பாலன்- 893091033V, சுப்பிரமணியம் சுகிர்தா-905262653V, ஹம்ஷா ஈஸ்வர பாலன்-937283539V,

**முல்லைத்தீவு**

செல்வநாதன் பவித்திரா- 925510 580V, நாராயணசாமி நிஷாந்தி-92665 3792V, நல்லையா கோகிலதர்ஷினி - 91 7911398V, அகிலா அழகரத்தினம் - 89 6002554V, ஜோசப் சௌந்தராநாய கம் மேரி சௌதமினி- 847343893V, சீவரத்தினம் சர்மிகா-927003830V, கன கரத்தினம் வாஸ்கரன் - 873040629V, சிவராசா செந்தூரன் - 861512100V, யோக ராஜா அபிராமி-908510224V, பெனடிக்ற் டொன்சியா -896954156V, சமூன் பாத் திமா சிறீன் -935341655V, ஐயாத்துரை ராதிக்கா- 885642942V, சோமகேசன் தர்ஷா- 926143956V, சண்முகநாதன் அனுசியா- 856761100V, ஜெயதீஸ்வரன் நிரஞ்சனா - 856663671V, கிருபாலினி ரகுநாதன் - 865230699V, சுந்தரலிங்கம் நினேஸ் - 880971123V, சிவலிங்கம் நிஷா ந்தினி -876553830V, யோகேஸ்வரன் உஷாந்தினி -936973698V, குபேந்திரன் உஷாந்தினி-908092090V, குமாரசாமி குகன் -871243239V, முருகையா வரு ஞ்சீவ்-861372375V, இராமலிங்கம் மீதா- 926603230V, ஐயாத்துரை இதயரஞ் சினி- 858301580V, செல்வநாதன் கீத கன்-891053444V, ஜெயபால குணசேக ரன் சுஜீனோ - 871733260V, இரவீந்திரன் ஹிந்துஷா - 937833580V, மொகமட் ரசீத் பரீஷா -897481804V, நடராஜா வான்மதி- 915391290V, அகிலன் ராதா-83854 4665V, மொகமட் ரசீத் வைரூசா -877 161315V, மோகனராசா நிவேதினி -9159 53999V, ராசிகரன் பபிதா - 877013154V,

**வவுனியா**

ஷானிகா தேவிந்தி விமலநாத் - 87 7290590V, குசைமாத் ஷிவானா -9256 21811V, மாணிக்கவாசகர் நதீபன் - 93128 0600V, உதயகுமாரன் நிசாந்தி -88430 806V, சண்முகம் சசிகலா- 88553 2330V,

**மன்னார்**

கயேந்தினி நாகலிங்கம்- 875693 140V, ஜெயமாலா கேதீஸ்வரன்- 8884 50319V, மரியதாஸ் பிகராடோ அமலராஜ் பிகராடோ- 902631550V, கிஷாடா கமல் மொகமட் பாத்திமா- 895332011V, ஹாசிகா சிவநேசன் - 937833466V, பிரேரா பிரான்சிஸ் மேலின் - 872833072V, சிராசா மொஹமட்சகீட் பாத்திமா- 9085 92301V, வரத குமார் காயத்திரி- 8869 41889V, அப்துல் ரமீஸ் மொஹமட் ரூமாஸ் -901811857V, கிருஷ்ண வாணி ராஜசிறி தரன்-846172726V, ரஜஸ்மித்தா பரமேஸ் வரன் -936803903V, கௌதமி செல்வ மகேந்திரன்- 867361340V, மரியதாஸ் ஜெயமலர்- 887832340V, சாந்தையா இந்துயா- 937503253V, நிராணி க்றூஸ் யோசெப் ஜெயமலர் -886442270V, கமல் மொஹமட் பாத்திமா ஹறீவா- 937553 536V, ஆன் மௌரீன் குலஸ் லோறென்ஸ் ஒரூல்- 886890796V, மரியதாஸ் பிரிஷா- 918653503V, மௌரூவ் மஷீவா- 8976 60733V, கருணைராசா ராமபிரியா- 927 981203V, ஸ்ரீபன் ரத்தினராஜ் கெஸ்ரென் டொன்லி டுயன்- 903213175V, சாந்தையா துசாந்தினி- 918112251V, பான்உஷா லோகு சாந்தியோகு-92520694V, ஷாக்னாஸ் பேஹம் மஹீர் -887441227V, கார்த்திகா கைலைநாதன்- 908512219V, பசிலஸ் விமலதாஸ் ஜென்ஸ்ஷான் டிலானி- 937 900236V, யூடின் நெவ்லின் யுவானி- 93 5150892V, சுபஸ்ரியான் மேரி சகாயராணி பெரேரா - 888210067V, அன்ரன் கொன் ஸ்ரைன் மேரி கொன்சீரா- 92573362 8V, மறுஷலீன் அமலா பிகுரடோ - 9265 71419V, ரோபிநியா அனுவேல் கொஞ்சி - 906662612V, சுவதர்ஷினி கணேசன் - 906431955V, மேரி ஜெனீவெற் அன்திரிஸ் - 906592983V, பதுருசம்சன் சவீரா-905 392840V, யோன்சன் மேரி ஜேனி கரமல் பிகராடோ - 9061930 43V, மொஹமெட் சலிகு மொகுமெட் றிஸ்மி- 893552 480V, ரகுமான் அப்துல் பாகித்- 9027 52919V, மனோகரன் முகுந்தினி- 916693 206V, சிமில்டா அந்தோனிப்பிள்ளை- 867082964V, ஜக்கோவு குரூஸ் யேசு நேசன் குரூஸ்- 873102900V, (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் டென்னிஸ் ஆண்டி முர்ரே சம்பியன்

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் ஆடவர் பட்டத்தை பிரிட்டனின் ஆண்டி முர்ரே வென்று சாதனை படைத்துள்ளார்.


நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர் செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச்சை 6-4,7-5, 6-4 எனும் நேர் செட்களில் வென்றார்.

பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பட்டத்தை வெல்வது கடந்த 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறை.

முதல் இரண்டு செட்களிலும் வென்ற ஆண்டி முர்ரே, மூன்றாவது சுற்றிலும் எளிதாக வென்றுவிடுவார் என்கிற நம்பிக்கை அவரது ரசிகர்களிடையே இருந்தது.

எனினும் மூன்றாவது செட்டையும் அதன் மூலம் சம்பியன் பட்டத்தையும் அவர் போராடியே வெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.


உலக ஆடவர் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் நோவாக் ஜோர்கோவிச்சுக்கும், இரண்டாம் இடத்தில் இருக்கும் ஆண்டி முர்ரேக்கும் இடையேயான மூன்றாவது செட் மிகவும் பரபரப்பாக இருந்தது.



ஒரு கட்டத்தில் மூன்றாவது செட்டில் இருவரும் 2-2 எனும் கணக்கில் இருந்தனர். பின்னர் அந்த செட்டின் போக்கு யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம் எனும் சூழலை ஏற்படுத்தியது.

அதிலும் குறிப்பாக 5-4 எனும் கணக்கில் முன்னிலை வகித்த முர்ரே, வெற்றியில் விளிம்புக்குச் சென்று சென்று திரும்பினார்.

மூன்றாவது செட்டின் ஆறாவது ஆட்டத்தில் ஆண்டி முர்ரே, 40-0 எனும் கணக்கில் முன்னணியில் இருந்தாலும், ஜோர்கோவிச் மீண்டு வந்து 40-40 க்கு எனும் சமநிலையை



ஏற்படுத்தினார். பின்னர் அந்த ஆட்டத்தின் வெற்றி யாருக்குச் செல்லும் என்று கணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

அரங்கத்தில் குழுமியிருந்த பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் உட்பட பலர் மிகுந்த எதிர்பார்ப்புடன் கூடிய ஏக்கத்தில் இருந்ததை தொலைக்காட்சிகள் காட்டின.

இறுதியாக ஆண்டி முர்ரே, பிரிட்டிஷ் மக்கள் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றார்.


இது ஆண்டி முர்ரேயின் இரண்டாவது பெரிய வெற்றியாகும். 26 வயதான அவர் கடந்த ஆண்டு அமெரிக்கன் ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்றார். இவற்றைவிட, கடந்த ஆண்டு ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளிலும் அவர் தங்கம் வென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று விம்பிள்டன் பகுதியில் 40 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் நிலவிய சூழலில், 15 ஆயிரம் ரசிகர்கள் மத்தியில் இந்தப் போட்டி மூன்று மணிக்கும் கூடுதலான நேரம் நடைபெற்றது.

அகில இங்கிலாந்து டென்னிஸ் சங்கத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 1936-ம் ஆண்டு ஃபிரெட் பெரி பட்டத்தை வென்ற பிறகு, பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை பெறுவது இதுவே முதல் முறை.

அவரது வெற்றியை அடுத்து பிரிட்டனின் பல பகுதிகளிலும் கொண்டாட்டங்களை இடம்பெற்றன.

# இறுதிப் போட்டிக்கான டிக்கெற் ரூ.60 லட்சத்திற்கு விற்பனை




இங்கிலாந்தில் நேற்று நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெறும் போட்டியுடன் இந்த தொடர் முடிபடைகிறது.

நேற்றைய இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிக்கும், இங்கிலாந்தைச் சேர்ந்த ஆண்டி முர்ரேவும் மோதினர்.

உலகளவில் நடைபெறும் நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் இதுவே சிறப்பு வாய்ந்தது என்றும், புல்தரை மைதானத்தில் விளையாடப்படும் பெரிய போட்டி என்றும் அறியப்பட்ட இந்தப் போட்டியில் இந்த முறை இன்னொரு சாதனையும் நடந்தது.

இங்கிலாந்தில் நடக்கும் சிறப்பு வாய்ந்த இப்போட்டியில், கடந்த 1936ஆம் ஆண்டு விளையாடி வெற்றி பெற்ற பிரிட்டிஷ் வீரர் ப்ரெட் பெர்ரிக்குப்பின் 77-வருடங்களாக இங்கிலாந்து நாட்டு வீரர் யாருமே இந்தக் கோப்பையைப் பெறவில்லை. சென்ற வருடம் இறுதிப்போட்டியில் விளையாடிய ஆண்டி முர்ரே, சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரோஜர் பெடரரிடம் தோற்றுப் போனார்.

இந்த முறை முதல் நிலை வீரரான ஜோகோவிக்கும், இரண்டாம் நிலை வீரரான முர்ரேவும் மோதுவது மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.


சொந்த நாட்டு வீரர் ஜெயிக்கலாம் என்ற எண்ணத்தில் மக்கள் டிக்கெட்டிற்கு அலைமோதினர்.

இதனால் டிக்கெட் விற்பனை நிறுவனமான வியாகோகோவின் இணையதளத்தில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் டிக்கெற் கேட்டு பதிவு செய்துள்ளனர்.

ஒரு ஜோடி டிக்கெட்டின் விலை 35,500 பவுண்டு, அதாவது இலங்கை ரூபாய் மதிப்பில் 60 இலட்சம் என்று விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் 24ஆம் நிலை வீரரான ஜெர்சி ஜனோவிக்கை எதிர்த்து விளையாடி முர்ரே பெற்ற வெற்றி இந்த டிக்கெட்டுகளின் விலையை 42,914 பவுண்டிற்கு ஏற்றியுள்ளது. விம்பிள்டன் கவுன்சில் அதிகாரபூர்வமாக ஒரு ஜோடி டிக்கெட்டின் விலை 260 பவுண்டு என்று நிர்ணயித்துள்ளது.

தற்போது விற்கப்படுவது இதைவிட 165 மடங்கு அதிகமாக என்று வியாகோகோவின் தகவல் அதிகாரி ஸ்டீவ் ரொயெஸ்ட் கூறியுள்ளார்.



தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டி 2013 நாட்டார் இசையில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அதில் பங்குப்பற்றிய மாணவர்களையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# '13' தேவையில்லை...

முடியாது. ஜனாதிபதி விரும்பியதால் மட்டுமே கிழக்கில் தமிழர்கள் எப்போதும் முதலமைச்சராகியிருக்க முடியாது. ஜனாதிபதி விரும்பியதால் மட்டுமே கிழக்கில் பிள்ளையான் முதலமைச்சராக வரமுடிந்தது. அதனை முஸ்லிம்கள் அமைச்சர்கள் பலர் எதிர்த்தார்கள். இந்நிலையில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரின் கீழ் தமிழர்களுக்கு இதே பிரச்சினை இருக்காது என்று எப்படிச் சொல்ல முடியும்?

இந்த வாதம் எதற்கு என்பதை புரிந்து கொள்ளுங்கள். அதிகாரப் பகிர்வின் மூலம் சிறுபான்மையினருக்கு தீர்வு கிடைக்கும் என்றால், மத்திய மாகாணத்தில் சிங்க முதலமைச்சரின் கீழுள்ள தமிழர்களுக்கு எப்படி தீர்வு கிடைக்கிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதே போல்தான் ஊவா, சப்ரகமுவா மாகாணங்களிலுள்ள தமிழர்களுக்கும் தீர்வுகள் கிடைக்கின்றன. உங்களுக்கு ஓர் உண்மை தெரியுமா? இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழர்களின் எண்ணிக்கை கிளிநொச்சியிலுள்ள தமிழர்களின் எண்ணிக்கையிலும் உயர்வாகும். அவர்களின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது? இதிலிருந்து நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும், பொலிஸ், காணி அதிகாரங்கள் கிடைத்தால்தான் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்பது உண்மையல்ல என்பதை.

கேள்வி: இந்தியாவுடன் இருந்த முரண்பாடுதான் விடுதலைப் புலிகள் தோன்ற காரணமாக இருந்தது என்று கூறினீர்கள். அப்படியானால் இந்தியாவினால் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்த சட்டத்தை ஒழித்தால் இந்தியாவுடன் பிரச்சினை உண்டாகாதா?

பதில்: அதனால்தான் இந்தியாவுடன் பேசக்கூடாது என்று சொன்னேன். இது நமது பிரச்சினை. இராஜதந்திர உறவுகள் வேறு. இரண்டையும் கலக்கக்கூடாது. இந்தியாவும் இலங்கையும் இரு வேறு நாடுகள். நமது பிரச்சினை நம் நாட்டுக்கு மட்டுமே உரியது. நாமே தீர்வு காண வேண்டும். இராஜதந்திர உறவுகள் இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற பல நாடுகளுடனும் நமக்கு இருக்கிறது. அதனை சரியாக நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்தியாவும் இலங்கையும இருவேறு நாடுகள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இப்பிரச்சினை இந்தியாவின் கீழுள்ள நாடாகவோ அல்லது அதன் பிரதேசமாகவோ இருந்தால் நாம் செய்வது தவறாக இருக்கலாம். ஆனால் இருவேறு நாடுகளுக்கிடையில் எவரும் தலையிட முடியாது. எமது பிரச்சினைக்குத் தீர்வை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். புதிய இந்திய உயர்ஸ்தானிகருடனும் இன்னும் பல உயரதிகாரிகளுடனும் இவ்விடயம் தொடர்பாக நான் கலந்துரையாடினேன். அவர்கள் எவரும் 13ஆம் திருத்தச் சட்டத்தினால் தமக்குள் பிரச்சினை வரும் என்று கூறவில்லை. அவர்கள் இவ்விடயத்தில் தெளிவாக இருக்கிறார்கள்.

நாம் இருக்கப்போவது சிறிய காலமே. நமது எதிர்கால சந்ததிக்கு அமைதியான சுதந்திர நாட்டைத்தான் நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். வேறு எந்த நாட்டின் வற்புறுத்தலுக்கும் அடிபணியக் கூடாது. முன்னர் செய்த தவறுகளால்தான் ஏனைய நாடுகள் எமது பிரச்சினைக்குள் தலை போடுகிறார்கள். அதே தவறினை நாமும் செய்யக்கூடாது.

கேள்வி: 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க நீங்கள் விரும்புகின்றீர்களா?

பதில்: ஆம். அதுதான் முன்னேற்றத்திற்கு வழி. அதிகார பரவாக்கலுக்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால் அது பயனுள்ளதாகவும் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இனவாரியாக பிரதேசங்களை பிரித்து பார்க்கக் கூடாது என்பதே என்னுடைய நிலைப்பாடு.

கேள்வி: 2009இற்கு பின் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட நிலையில் இன ரீதியான முறுகல்கள் ஏன் இப்போது தோன்றுகின்றன?

பதில்: இதை நான் சிறுபான்மையினரின செயற்பாடாகவே பார்க்கிறேன். பெரும்பான்மை சமூகம் 78 சதவீதமாக இருக்கும் போது 8 அல்லது 10 சதவீதமான சிறுபான்மையினர் சிறுசிறு பிரச்சினைகளைத் தூக்கிப்பிடிப்பதால் பெரும்பான்மையினரிடையே சந்தேகம் ஏற்படக் காரணமாகிறது. அதனால் பெரும்பான்மை சமூகத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சமாதானம் குலைய காரணமாகின்றன. இங்குதான் இனப்பிரச்சினை தலை தூக்குகின்றது. இந்த பிரச்சினைகளை தமிழ், முஸ்லிம், சிங்கள பிரச்சினைகளாகப் பார்க்கக் கூடாது. பொதுவான பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். அப்படி பார்ப்பார்களேயானால் சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்றார். (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை கட்டுப்படுத்த முத்தரப்பு உடன்படிக்கை

(புதுடில்லி)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்த சீனா மேற் கொண்டு வரும் மூலோபாய நட வடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுடன் இந்தியா முத்தரப்பு கடல்சார் ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளதாக புது டில்லியில் இருந்து வெளிவரும் தொடர்பில் இம்மூன்று நாடுக ளுக்கும் இடையில் ஒரு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் சீனாவின் தலை யீடுகள் அதிகரித்துள்ள ஒரு நிலை யிலேயே, இந்தியா இந்த உடன் பாட்டைச் செய்து கொள்ளவுள்ளது.

2011ஆம் ஆண்டு மாலைதீவில் தூதரகத்தைத் திறந்த சீனா, அந் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்



டெக்கான் ஹெரால்ட் எனும் ஊட கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெறவுள்ள முத்தரப்பு கடல்சார் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோ சகர் சிவ்சங்கர் மேனன், இதற் கான உடன்பாட்டை தயாரிக்கும் வகையில் இலங்கை மற்றும் மாலை தீவு ஆகிய நாடுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது கடல்சார் பாது காப்பு, தகவல் பரிமாற்றம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தேடுதல் நடவடிக்கை, பொருளாதார கடல் எல்லைகளைக் கண்காணிப்பது, பயிற்சி மற்றும் ஒத்திகைகள் களிலும் ஈடுபட்டு வருகின்றது. இது இந்தியாவுடன் மாலைதீவு கொண்டி ருந்த உறவுகளில் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளது.

அதுபோன்றே இலங்கையிலும் சீனாவின் தலையீடுகள் அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவின் நலன்கள் கேள்விக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதாக இவ்வூடகம் குறிப் பிட்டுள்ளது.

அதேவேளை, கொழும்புக் கான தனது விஜயத்தின் போது இலங்கையின் ஜனாதிபதி மற்றும் படைத்துறைச் செயலாளர் ஆகி யோரையும் சிவ்சங்கர் மேனன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-8)

# அழைக்கின்ற போதெல்லாம் சென்று கொண்டிருக்க முடியாது

## அரசை சாடுகிறார் சுமந்திரன்

கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை நிறைவேற்றாது அழைத்தவுடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சென்று சேர்வதற்கு நாங்கள் மடை யர்கள் அல்ல என தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடக வியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்வாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011-ம் ஆண்டு பாராளுமன்ற தெரிவுக்குழு குறித்து அரசாங்கம் பேசியது. ஏற்கெனவே அரசாங்கத்து டன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை யில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அந்த யோசனைகளை கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சேர நாம் தயாராக இருந்தோம்.

ஆனால் அரசாங்கம் பேச்சு வார்த்தை யில் பேசப்பட்டவற்றை புறக்கணித்து செயற்பட ஆரம்பித்தது. அதனால் அதில் நாம் பங் கேற்கவில்லை.

தற்போது 2 வருடங்கள் கழித்து மீண்டும் தெரிவுக்குழு பற்றி பேசு கிறது. அழைக்கின்ற போதெல்லாம் கையை உயர்த்திக் கொண்டு செல் வதற்கு நாம் மடையர்கள் அல்லர்.

பாராளுமன்ற தெரிவுக்குழு வில் 31 பேர் மாத்திரம் உள்ளனர். எங்களிடம் நான்கு பேர் மாத்தி ரமே உள்ளனர். எப்படி நாம் எமது பிரச்சினை யைத் தீர்த்துக் கொள்வது? இங்கு பெரும்பான்மை பிரச்சினை உள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழு பேச்சுக்கள் வந்தபோது அமைச்சர் திஸ்ஸ விதாரண எம்மை அழைத்தார. நானும் இதில் உள்ளேன். உங்கள் உரிமைகளை பெற உதவி செய்வேன் என்று கூறி அழைத்தார் இன்று அவரை யும் வெளியில் போட்டுவிட்டனர்.

அதன்பின் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக செயற்பட என்னால் முடியும். அச்சமின்றி கூட்டமைப்பை தெரிவுக் குழுவில் பங்கேற்கச் சொல்லுமாறு அமைச்சர் ஹக்கீம் இந்தியாவில் இருந்து வந்த சுஸ்மா சுவராஜ் குழுவினரிடம் கூறினார். இன்று அவரையும் வெளி யில் போட்டு விட்டனர்.

நானும் அந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் உள்ளேன். என் னுடைய நிலைப்பாடு உங்களுக்கு தெரியும்தானே பயப்பட வேண்டாம் வாருங்கள என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித் தார். இன்று அவரையும் வெளியில் போட்டுவிட்டனர்.

ஆக நாம் எப்படி பாராளுமன்ற தெரி வுக்குழுவிற்குச் செல்வது? இது பாராளு மன்ற தெரிவுக்குழு அல்ல. இது ஜனாதி பதி தெரிவுக் குழு. இதில் எதிர்க் கட்சி யில் இருந்து எவரும் இல்லை.

13-ம் திருத்தத்திற்கு மேல் சென்று தீர்வு வழங்கப்படும் என்று தான் ஜனாதி பதி கூறினார். ஆனால 13-ம் திருத்தத் தில் இருந்து எதை குறைப்பது என்று விவாதிக்க தெரிவுக்குழு அமைததுள்ள னர். எனவே அதில் நாம் ஏன் கல ந்து கொள்ள வேண்டும்? என்றார் சுமந்திரன். (எ-8)

# புத்தகாயாவில் குண்டு...

தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை அடுத்து இந் தியாவில் சென்னை உட்பட 8 முக்கிய இடங்களில் பௌத்த வழிபாட்டிடங் களுக்கான பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, பீகார் மாநிலத் திலுள்ள புத்தகயா மகாபோதி ஆல யத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட் டுள்ள ஜனாதிபதியின் ஊடக இணைப் பாளர் விஜயானந்த ஹேரத், இசசம் பவம் தொடர்பில் மகாபோதி ஆலய பிரதம பிக்குவுடன், ஜனாதிபதி தொலைபேசி மூலம் உரையாடிய தாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இச்சம்பவம் தொடர் பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை யின் வெளிவிவகார அமைச்சு மற் றும் புதுடில்லியில் உள்ள இலங் கைத் தூதரகம் ஆகியவற்றுக்கும் மகிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அதேவேளை, இத்தாக்குதல் பௌத்தர்களையோ அல்லது இலங் கையர்களையோ குறி வைத்து மேற்கொள்ளப்படவில்லை என தகவல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர் பான விசாரணைகள் முடியும் வரை யாத்திரிகர்கள் எவரையும் புத்தகாயா செல்ல வேண்டாம் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள் ளது.

புத்தகாயாவில் மகாபோதி ஆலய வளாகத்தில் நேற்று அதிகாலை 9 குண்டுகள் வெடித்ததில் 2 பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 5 பேர் காயம டைந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-8)

# முதலமை...

அறிவித்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலுக் கான வேட்பாளர் தெரிவு இன்னும் ஒரு சில தினங்களில் முடிபடைந்து விடுமெனவும் இது தொடர்பாக அமைச் சர்களான ரிஷாத் பதியூதீன் மற்றும் டக்ளஸ்தேவானந்தா உட்பட இது சாரிக கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் வட மாகாணசபைவேட் பாளர்களை தெரிவு செய்யும் குழுவின தலைவர் அமைச சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிக் கின்றார். (எ-8)


## கார் வாடகைக்கு

நீண்ட குறுகிய நாள் வாடகைக்கு சாரதியுடனோ or இல்லாமலோ பெற்றுக்கொள்ள நாள் வாடகை 1500 /-

0772259030

(3307)


# வேட்பு மனுத்...

வவுனியா 96 ஆயிரத்து 702 வாக்காளர்களுக்கு 91 வாக்குச்சாவடிகள், முல்லைத்தீவு 52 ஆயிரத்து 409 வாக்காளர்களுக்கு 50 வாக்குச்சாவடிகள், மன்னார் 70 ஆயிரத்து 085 வாக்காளர்களுக்கு 68 வாக்குச் சாவடிகள் என்ற அடிப்படையில் அமைப்பதெனவும்,

இந்த ஆண்டு புதிய வாக்காளர்களாக 7 ஆயிரத்து 89 பேர் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களில் 3 ஆயிரத்து 506 பேர் தகுதி பெற்றிருக்கின்றனர். அவர்களில் 3 ஆயிரத்து 506 பேர் தகுதி பெற்றி ருக்கின்றனர். ஏனைய 2 ஆயிரத்து 752 பேர் தொடர் பாக ஆராயப்படுவதாகவும் 9-ம் திகதி அவர்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-8)


## கோப்பாயில் காணி விற்பனைக்கு

கிளுவானை ஒழுங்கையில் 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பரப்பு 3 ½ இலட்சம்

தொடர்புகொள்ள : 0779123826

(3306)


# வடி தடம் புர...

பாட்டை இழந்த வாகனம் வாய்க்காலினுள் வீழ்ந்து தடம்புரண்டுள்ளது. இதன்போதே தாயார் உயி ரிழந்ததுடன் சிறுமி படுகாயங்களுக்கு இலக்காகி யுள்ளார்.

படுகாயங்களுக்கு இலக்கான சிறுமி, புதுக்குடி யிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்துத் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-8 [illegible])


## அதி சொகுசு வாகனங்கள் வாடகைக்கு




**NPC Rent A Car**

அரச, தனியார் அலுவலகங்கள், வீட்டில் இடம்பெறும் நற்காரியங்களுக்கு அதி நவீன சொகுசு கார்கள், வான்கள், பிக்கப்புகள், 4X4 வாராந்த, மாதாந்த, வருட அடிப்படையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். NPC ENTERPRISES

0 718 486 160





## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.
V.S மாணிக்கராசா அவர்கள்
(SLEAS)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நல்லூர்
கோட்டக் கல்வி பணிப்பாளராக
பல ஆண்டுகள் சிறப்பாக சேவையாற்றி
05-07-2013 முதல் யாழ்ப்பாண கல்வி வலயத்தின்
பிரதிக் கல்விப்பணிப்பாளராக (கல்வி அபிவிருத்தி)
பதவி உயர்வு பெற்றுச் செல்லும்
உயர்திரு. V.S மாணிக்கராசா அவர்களை
வாழ்த்துகின்றோம்.

நல்லாசிரியராய் உழைத்தீர் உயர்ந்தது பெறுபேறு
பல்கலையும் தொழிலும் பெற்றவர் பலராவர்
நிகரிலா வளர்ச்சியில் பாடசாலைகள் – நும் அதிபர் பணியில்
சங்கிலியன் வாழ்ந்த மண் நல்லூர்
பெற்றது பெருமை உம் கோட்டப்பணியில்
களம்பல கண்டீர் நும்பணியில் – வென்றீர்
கல்விச்சிறார் வாழ்வுயர வழிசமைத்தீர்
வடமாகாண கோட்ட தலைவரானீர்
பெற்றன கோட்டங்கள் வசதிகள் பல – அதில்
நல்லூர் கோட்டம் நிகரிலா அழகானது
உம் தீர்க்கதரிசனத்தில் முகிழ்ந்தது உயர் கல்விகுழு
கற்பகதருவானது கற்றோர்க்கும் கற்போர்க்கும்
உயர்பணியால் உயர்ந்தீர் வாழ்த்துகின்றோம்
வாழிய! வாழிய !! நீடூழி வாழியவே!!!

கோட்டபணிமனை உத்தியோகத்தர்கள்
நல்லூர் கல்விகோட்டம்.

(C-3918)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org